Registered Post with A/D

Secretariat,
Chennai-600 009

Letter No. 4488/2020-2, TNLAS, Dated 19-1-2021

From
C. Santha, M.Com., B.G.L.,
The Public Information Officer &
Deputy Secretary (E).

To
Ms. Geetika Mishra,
1886, 2nd floor, 5th Main 8th Cross,
New Thippasandra,
Bangalore-560075
Karnataka (w.e.)

Madam,

Sub: Right to Information Act, 2005, information sought for – Regarding.

Ref: 1. Your letter dated 20-5-2020 (Received on 26-5-2020)
2. This Secretariat's Letter No.4488/2020-1 TNLAS, dated 3-6-2020.
3. Your Demand Draft No.004275, dt. 11-1-2021 drawn on HDFC Bank, Thippasandra, Bengaluru.

-----

With reference to your letter 1st cited, the information pertaining to discussions on the Tamil Nadu Prevention of Dangerous Activities of Bootleggers, Drug-offenders, Forest-offenders, Goondas, Immoral Traffic Offenders, Sand-offenders, Sexual Offenders, Slum-grabbers and Video Pirates Act, 1982 and the Amendment Act 52 of 1986, 1 of 1988, 2004, 32 of 2004. 16 of 2006 and 2008 and 19 & 20 of 2014 held in the Tamil Nadu Legislative Assembly sought for by you under Right to Information Act is enclosed herewith.

Yours faithfully,

C Santha 19/1/2021

(C. SANTHA)
The Public Information Officer &
Deputy Secretary (E.)

Copy to

[1982 பிப்ரவரி 10

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடத்தை மட்டும் சொல்லிக் கொடுக்க முற்படாமல் ஒழுக்கத்தையும் கற்றுத் தருகின்ற முறையிலே அரசு ஆவன செய்யுமா ? ஆகவே மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்காக பழைய கால முறையான குருகுலக் கல்வி முறையினை அரசு மீண்டும் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற முறையிலே ஆசிரியர்கள் அவர்களுக்குச் சொல்லித்தந்து அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10).

## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

**கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற இந்தக் கட்டத்திலேயே அதனை அறிமுகம் செய்வதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் பிரஜைகளுடைய அடிப்படையான ஃபண்டமெண்டல் ரைட்ஸையே கருவறுக்கிறது. அதற்காக, கள்ளச் சாராயம் காய்ச்சுவது சரியான செயல் என்று சொல்லவில்லை—ஃபண்டமெண்டல் ரைட் என்று சொல்லவில்லை ; மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்வதை ஃபண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லவில்லை. ஆனால் யார் எந்தக் குற்றம் செய்தாலும் விசாரணைக் கூட இல்லாமல் சிறைப்படுத்துவது என்ற நடைமுறையில், விசாரணைக்கு வாய்ப்புக் கொடுக்க மறுப்பதைத்தான் பண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லி ஆட்சேபிக்கிறேன்.



1982 பிப்ரவரி 10] [திரு. ரா. உமாநாத்]

பச்சை இளம் குழந்தைகளை கொலை செய்த கொடியவர்கள் பில்லா, ரங்காவைக் கூட விசாரணை செய்தார்கள். அவர்களுக்குக் கூட விசாரணை உரிமை கொடுக்கப்பட்டது. அதன் மேல் அப்பீல் கொடுக்கப்பட்டது. அதற்கு மேலே ஜனாதிபதிக்கு பெட்டிஷன் போடும் உரிமை கொடுக்கப்பட்டது. அதற்கு மேல் சுப்ரீம் கோர்ட்டிற்கு எழுதிக் கேட்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறபோது,—அவர்களுடைய குற்றத்தை கம்பேர் பண்ணுகிறபோது, இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றங்கள் மிகச் சிறியதாகவே இருக்கிற காரணத்தால் விசாரணை உரிமையை மறுப்பது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரண விளக்க நோக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற நோக்கத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை என்பது என் கருத்து. இந்தச் சட்டத்தை அமுல் படுத்துகிறபோது, நிரபராதிகளும் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வேண்டும். நிரபராதிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது என்று சொல்லக் கூடும். ஆனால் சட்டம் உண்மையாக நடைமுறையில் பயன்படுத்தும்போது, அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்.

அதே போலத்தான் நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் பாஸ் பண்ணுகிறபோது, இந்தச் சட்டம் தொழிற்சங்கங்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட மாட்டாது என்று ரிபீடட் அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் 3 நாட்களுக்கு முன்னர், எந்தெந்த தொழில்களில் வேலை நிறுத்தம் செய்தால் கைது செய்யப்படுவார்கள் என்று பகிரங்கமாக நோட்டிபிகேஷன் சென்டிரல் கவர்ன்மெண்டிலிருந்து வந்திருக்கிறது. முன்னால் இல்லை என்று சொல்வார்கள். பின்னால் எல்லாவற்றிற்கும் வந்துவிடும். ஆகவே விசாரணை இல்லாமல் கைது செய்யப்படுவது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒருகால் ஆட்சியாளர்கள் சொல்லக் கூடும், தர்மபுரியிலும் மற்ற இடங்களிலும், விசாரிக்காமல் சுடவே செய்கிற போது, இது என்ன காவலில் வைக்கப்படுவதுதானே, இது என்ன பெரிய விஷயமா, என்று கேட்கலாம். அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமாக இருந்தாலும் கூட, மத்திய சர்க்கார் எப்பொழுது என்ன செய்யும் என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. முன்பு ஒரு முறை இந்த அரசை டிஸ்மிஸ் செய்யவில்லையா ? அப்படி மறுபடியும் செய்து, மறுமுறை எலக்ஷன் வைக்கிறபோது, இப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் செய்கிற வேலைகளை எல்லாம், எதிர்த்து இதே சட்டத்தின் கீழ் அவர்கள் உங்களையே கைது செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம். ஆகவே தான் சொல்கிறேன். இந்தச் சட்டம் உங்களுக்கு எதிராகவே பயன்படுத்தக்கூடிய சட்டம் என்பது ஒன்று. (மணியடிக்கப் பெற்றது) நான் மெரிட்சுக்குள் போகவில்லை. அறிமுகம் செய்வதை எதிர்த்துத்தான் பேசுகிறேன்.

மற்றொன்று, ஊழல்கள் வளர்வதற்கும் இந்தச் சட்டம் இடம் அளிக்கும் என்பது. எப்படியென்றால், இந்தச் சட்டத்தைக் காட்டி பயமுறுத்தி பல ஆபிசர்களும், மற்றவர்களும் இதிலே பணம் ஈட்ட முடியும். ஆகவே அந்த வகையிலும் இது தேவை இல்லாத ஒரு சட்டம்.

அடுத்து, துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்காகவே சொல்ல விரும்புகிறேன். உங்களைப் போன்ற வழக்கறிஞர்கள் அனைவரையும் பாதிக்கக்கூடிய சட்டமாகவும் இது இருக்கிறது. எப்படியென்றால், கிராபிங் என்ற முறையில் நிலத்தை பிடுங்கி கொடுக்கும்போது பிரச்னைகள் எழுந்து, அந்த வழக்குகளை வழக்கறிஞர்கள் நடத்தினால், இந்தச் சட்டத்தின்படி, அதை தூண்டிவிடுபவர்களும் தண்டிக்கப்படுவார்கள். ஆதலால் வழக்கறிஞர்களையும் பாதிக்கக் கூடிய அளவில் இந்தச் சட்டம் இருக்கிறது.

வக்கீல் ஆஜராகும் போது நீங்கள் அதை ஊக்குவிக்கக்கூடியவர் என்று உங்களையும் டீ. டெயின் செய்யலாம் ஆகவே இப்படிப்பட்ட காரணங்களினால் இந்தச் சட்டத்தை இன்ட்ரொட்யூஸ் செய்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வக்கீல்கள் சென்று வழக்காடுகிறார்களே தவிர அவர்கள் உடந்தையாக இருக்க முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வழக்கறிஞர்கள் வழக்கறிஞர்கள் சட்டத்தின்படி தங்கள் கடமையை ஆற்றுகிறார்கள். ஆகவே ஸ்லம் க்ராபேர்ஸ்-யை ஊக்குவிக்கிறார்கள் என்று கூறுவதை தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**திரு. ரா. உமாநாத் :** Why should you remove it ? That is my interpretation.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தங்கள் கட்சிக்காரர்களுக்காக வழக்காடுகிறார்களே தவிர, ஒரு கொலைக் கேஸில் ஆஜராகிறவரை கொலைக் குற்றத்திற்காக இதுவரை யாரையும் கைது செய்தது இல்லை. ஆகவே வழக்கறிஞர்களை ஈடுபடுத்திப் பேசுவது தவறு. அந்தக் குறிப்பு தேவை இல்லை. (குறுக்கீடு).

**Hon. Thiru C. PONNAIYAN :**—Advocates are there to assist the clients, but not to about the clients.



**திரு. வ. சத்தியமூர்த்தி :** திரு. உமாநாத் அவர்கள் வழக்கறிஞர்களை தவறு செய்யத் தூண்டுபவர்களாக ஒரு இலக்கணத்தைச் சொல்கிறார்கள் புதிதாக. அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ? அதை அவைக் குறிப்பில் ஏற்றலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவரவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுத்தாகிவிட்டது. வழக்கறிஞராகிய தாங்களும் அதை மறுத்து விட்டீர்கள். ஆக, இரண்டும் இருக்கட்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவந்திருக்கக் கூடிய இந்த சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாக எதிர்க்கிறேன். காரணம், குடும்பப் பெண்களைக் கூட விபசாரிகள் என்று சொல்லி கைது செய்து விடமுடியும். பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தார் என்று அரசாங்கமும் அதிகாரிகளும் கருதினால் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். இந்த அரசை விமர்சிக்கிற அரசியல்வாதிகளைக் கைது செய்யலாம். ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை, ஒரு ஆண்டு தடுப்புக் காவல் என்பது மட்டுமலல, ஒரு ஆண்டுக்குப் பிறகும் வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கலாம். ஒரு ஆண்டு சிறையிலிருந்து நோ ஜாமீன், ஜாமீனில் வரமுடியாது, நோ சோர்ட், நீதிமன்றத்திற்குக் கொண்டு போக முடியாது என்ற வகையில்தான் விதிகள் உள்ளன. சர்க்காரும் அதிகாரிகளும் யாரைப் பார்த்து விபசாரிகள் என்று சொல்கிறார்களோ, குண்டர்கள் என்று சொல்கிறார்களோ, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறவர் என்று சொல்கிறார்களோ அவர்களை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கக்கூடிய கடுமையான சட்டம் இது. சொல்லப் போனால் இது ஒரு இடி அமின் ஆட்சியில் இருக்கலாம், ஒரு (Za ) ஜார் ஆட்சியில் இருக்கலாம், அல்லது ஒரு முசோலினி ஆட்சியில் இருக்கலாம், ஆனால் ஆயிரம் மலர்கள் பூக்கட்டும் என்று சொல்லிய அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிற இந்தச் சர்க்கார் இப்படிப்பட்டதொரு கறுப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதை எதிர்க்கிறோம்.

ஏற்கனவே ஒரு சட்டம், தேசீயப் பாதுகாப்புச் சட்டம் என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி சமூக விரோத சக்திகளை கைது செய்யலாம். அப்படி கைது செய்தால் ஏழு நாட்களுக்குள் மத்திய அரசிடம் தகவல் சொல்லியாக வேண்டும். தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது, இந்தச் சட்டத்தின்கீழ்தான் கைது செய்ய வேண்டும் என்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் இது அரசியல்வாதிகளைப் ப்ளாக்மெயில் செய்கிற சட்டம், பொதுமக்களை ப்ளாக்மெயில் செய்கிற சட்டம், இது ஒரு ப்ளாக்மெயில் சர்க்கார் என்று கூறி இதை வன்மையாக எதிர்க்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் பாடி ஆப் தி ஆக்ட்-க்குள் போகாமல் இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துவதே தவறு என்பதை நான் இங்கே உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

I want to draw your attention to Rule 123. "சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் ஒன்று ஆளுநர் பரிந்துரை அல்லது குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் இன்றி கொண்டு வரப்பெற முடியாது எனப் பேரவைத் தலைவர் கருதுவாரே யாயின் அத்தகைய சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் பற்றிய முன்னறிவிப்பு வந்தவுடன், அந்தச் சட்ட முன்வடிவு அல்லது திருத்தத்தை, பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்க அதிகாரம் பெற்றவருக்குப் பேரவைத் தலைவர் அனுப்ப வேண்டும். அவ்வாறு பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்கப் பெற்றால் அன்றி, அத் தீர்மானம் அலுவல் பட்டியலில் சேர்க்கப் பெறக் கூடாது'' என்றிருக்கிறது.

If you belive that this Bill should not be presented before this, House, without the consent of the President or the Governor .................(interruptions).

(முற்பகல் 11-20)

I want you to read this Article 200 of the Constitution wherein it has been stated: "Provided further that the Governor shall not assent to, but shall reserve for the consideration of the President, any Bill which in the opinion of the Governor would, if it became law, so derogate from the powers of the High Court as to endanger the position which that Court is by this Constitution designed to fill" அதாவது இங்கே அரசியல் சட்டத்தின் அடிப்படையிலேயே நம்முடைய நாட்டிலே உயர்நீதி மன்றங்கள் பல இருக்கின்றன. அதற்குப் பல நீதிமன்றங்கள் இருக்கின்றன. இங்கே சொல்லப்படுகின்ற குற்றங்கள் எல்லாம் அங்கே சாதாரணமான சட்டத்தின் அடிப்படையிலே, அவர்கள் They can be tried in any court of law and sentenced to varying terms of imprisonment or whatever is necessary.

அப்படியிருக்க இந்தச் சட்ட முன்வடிவை அமுல்படுத்துவது சரிதானா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சட்டமுன்வடிவை அறிவித்தபோதே, இதற்கு நிச்சயமாக ஆளுநர் அவர்களோ அல்லது ஜனாதிபதியோ ஒப்புதல் அளிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா என்பதை முதலில் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால், then it is better to refer this to the Advocate-General. He is a member of this House.



அதைவிட இன்னும் அதிகமான, கேவலமான ஒரு நிலைமை இருக்கிறது. அது என்னவென்றால், சிடி முனிசிபல் ஆக்டின் கீழ், அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டால் கோர்ட்டிலே தண்டனை வழங்கப்படும். உங்கள் வீட்டில், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வீட்டில் அனுமதியில்லாமல் ஒரு காம்பவுண்ட் கட்டிவிட்டால், உங்களை இந்தச் சட்டத்தின் மூலமாக பிரிவென்டிவ் டிடென்ஷன் என்ற முறையில் கைது செய்ய முடியும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

I am not prepared to sign the arrest warrant of my own. I want your ruling on this subject, whether this bill should get the approval of the President or the Governor.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லோரும் என்க்கு பயம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்கு பயப்படவில்லை.

Dr. K. SOWRIRAJAN : I want your ruling. I want to know whether this will be referred to the Advocate-General.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜனாதிபதி அல்லது ஆளுநர் ஒப்புதல் கொடுப்பது பற்றி நீங்கள் சொல்ல முடியாது.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** ஹைகோர்ட்டின் அதிகாரத்தைப் பறிக்கின்ற அளவில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த விவாதம் தேவையில்லை. அவரவர்களுடைய அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருடைய அதிகாரத்தையும் பறிக்கவில்லை.

Dr. K. SOWRIRAJAN : Will you refer this to the Advocate General or not ? He is a member of this House. I do not like to be a party to this. Therefore, I am walking out of this House.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தேதிலே விளக்கத்தைத் தருகிறேன். அவர்கள் வெளியேற வேண்டாம்.

(Dr. K. Sowrirajan staged a walk-out)

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்,
மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள்,
குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோத
மாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகர
மான செயல்களைத் தடுத்து, அவர்களை தடுப்புக் காவலில்
வைப்பதற்காக என்று கூறி, இந்த அரசு ஒரு சட்ட முன்வடிவை
இந்த அவையிலே அறிமுகம் செய்வதை, இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக கடுமையான ஆட்சேபணையை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான குற்றங்களை புரிபவர்களைத் தண்டிப்ப
தற்கு நடமுறையிலேயே இன்றைக்கு பல்வேறு சட்டங்கள்
இருக்கின்றன. கிரிமினல் புரசீஜர் கோட் இருக்கிறது; இந்தி
யன் பீனல் கோட் இருக்கிறது. இந்தச் சட்டங்கள் கீழ் நட
வடிக்கை எடுப்பதற்கு, இதைத் தடுப்பதற்கு போதுமான
அதிகாரங்கள் இந்த அரசுக்கும், போலீசுக்கும் இருக்கிறது.
ஆனால், அதை விடுத்து இன்றைய தினம் இம்மாதிரியான சட்டம்
அவசியம் என்று கூறினால், அது விநோதமாக இருக்கிறது. இன்
றைய தினம் சாதாரணமாக அரசு புறம்போக்கு நிலங்களில்
குடிசை போட்டால், அதை இப்போதுள்ள சட்டத்தின் கீழ்
தடுப்பதற்கு அவர்களை கைது செய்வதற்கு அதிகாரம் இருக்
கிறது. இன்றைக்குப் பல்வேறு, கிராமங்களில் உள்ள அரசு
புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போடுவது. அதற்கு
அடமானம் பெறுவது. அடமானம் பெறுவதற்கு முயற்சிப்பது
போன்ற இம்மாதிரியான காரியங்கள் சாதாரணமான நிகழ்ச்சி
யாக இருக்கிறது. அதற்கு இம்மாதிரியான சட்டத்தைப்
பயன்படுத்தி அவர்களை சமூக விரோதிகள் என்ற பெயரால்
விசாரணை இன்றி தடுப்புக் காவலில் வைப்பது சிறைப்படுத்து
வது என்பது அரசியல் அடிப்படையான மனிதனுக்குள்ள உரி
மையை பறிக்கக்கூடியதாகும். அத்தகைய முறையில் இந்தச்
சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே. இந்தச் சட்டம் எதைக் கட்டுப்படுத்துவதற்காகக்
கொண்டுவரப்படுகிறதோ அது நடைமுறையில் பயன்படப்
போவதில்லை. அரசியலில் எதிர்க்கக் கூடியவர்களை வஞ்சம்
தீர்ப்பதற்கான முறையில்தான் இந்தச் சட்டம் பயன்பட உதவி
யாக இருக்கும். இதை அமுல் செய்யக்கூடிய பொறுப்பு
போலீஸ் அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.
அவர்கள் எவ்வாறு அமல் செய்வார்கள் என்பதை நாம் நடை
முறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். போலீஸ் அதி
காரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்று
சொல்லி நக்சலைட்டுகளைக் கொலை செய்கின்ற நிகழ்ச்சிகளை



எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே
இம்மாதிரியான முறையில் விசாரணையின்றி தடுப்புக்காவலில்
வைப்பதற்குள்ள அதிகாரங்களைக் கொடுக்கக்கூடிய இந்தச்
சட்டத்தை அறிமுகம் செய்யக்கூடிய இந்த நேரத்திலேயே
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடுமையான ஆட்சேபணையைத்
தெரிவித்து அமர்கிறேன்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர்
அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப்
பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள்,
விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது
நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்
களைத் தடுக்கும் சட்ட முன்வடிவை காந்தி காமராஜ்
தேசீய காங்கிரஸ் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம்.
இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆளும் கட்சிக்கு வேண்டாத
வர்களையும் மாற்றுக் கட்சியினரையும் அடக்குகின்ற ஒரு
காரியத்தைச் செய்கிற வழிவகை இந்தச் சட்டத்தில் இருக்
கிறது. அது போக ஏற்கனவே காவல் துறையினர் தங்களுடைய
இஷ்டம்போல் எந்த அளவுக்குப் பொதுமக்களைக் கொடுமைப்
படுத்துகிறார்கள் என்பதைப் பல்வேறு செயல்கள் மூலம்
நாம் அறிந்துவருகிறோம். இந்தச் சட்டத்தின் மூலம் காவல்
துறையினருக்கு மேலும் அதிகாரங்கள் கொடுக்கப்பெற்று பொது
மக்கள் மத்தியில் ஒரு அமைதியில்லாத சூழ்நிலையை உருவாக்கும்
நிலைமையை ஏற்படுத்துமாதலால் இச்சட்ட முன்வடிவை
அறிமுகம் செய்வதை காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ்
கட்சியின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் தலைவர் அவர்
களே, சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்
பட்டிருக்கிற சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றங்
களுக்கு அன்றாட நடைமுறைச் சட்டங்களிலேயே தண்டனை
யளிக்க வழிவகைகள் இருக்கின்றன. அதுவே போதுமானது. இந்தச்
சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் பொது வாழ்வில் இருப்
பவர்களைப் பழிவாங்க போலீஸ் அதிகாரிகளுக்கு ஆதாரமாக
போய்விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. நாம் அனுபவத்தில்
பார்த்திருக்கிறோம். 'மிசா' போடப்பட்ட காலத்தில்
போலீஸ் எவ்வாறு நடந்துகொண்டது என்பதைப் பார்த்
திருக்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவிலே குறிப்பிடப்பட்
டிருக்கிற குற்றங்களின் மீது நடைமுறைச் சட்டங்களின்
படியே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வழிவகை இருப்பதால்
இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதையே நான்
எதிர்க்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமூக விரோதிகளைக் கடுமையாக ஒடுக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. ஆனால் சமூக விரோதிகளை ஒடுக்குவது என்ற பெயராலே வரைமுறை இல்லாத அதிகாரங்களை அதிகாரிகளுக்கு நாம் வழங்கு வோமானால் அவர்கள் அதை துஷ்பிரயோகம் செய்யக் கூடிய அபாயம் இருக்கிறது. மத்திய அரசு கொண்டு வந்த தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை எந்த நோக்கத்தோடு எதிர்த் தோமோ அதே நோக்கத்தோடு இதையும் நாங்கள் எதிர்த்தாக வேண்டிய கடமையில் இருக்கிறோம். குறிப்பாக இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒன்று—அதிகாரி யாரை வேண்டு மானாலும் குறிப்பிட்ட காரணங்களைச் சொல்லி உள்ளே வைத்தால் அதற்குப் பின்னால் ஆலோசனைக் குழுவுக்குப் போய் அவர்கள் பரிந்துரை செய்து விடுதலை செய்யலாம். அப்படி விடுதலை செய்யப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று அந்த அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

இது போன்ற அதிகாரங்களை நாம் அதிகார வர்க்கத்திற்கு வழங்குவோமானால் தமிழ் மக்களின உரிமைகளைப் பறிக்கும் ஆகவே இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற இந்தக் கட்டத்திலேயே எங்கள் கட்சியின் சார்பில் இதற்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சடடத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற குற்றவாளிகளத் தண்டிப்பதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன. எனவே இது தேவையற்றது என்பதை நான் ஜனதா கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறோம், குறிப்பாக கள்ளச் சாராயம் காய்சுகிறவர்களை பிடிப்பதற்கும் தண்டிப்பதற்கும் Prohibi ion Act இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற் கெனவே அறிந்திருக்கிறார்கள். மருந்துப் பொருட்கள் சட்டத் தின் கீழ் குற்றம் செய்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு Food Ad l erat on Act இருக்கிறது. இந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. அப்படிக் குற்றம் செய்தவர்கள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்காக சட்டம் இருப்பதும், சட்டப்புத்தகத்திலே அது இருப்பதும் பற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். குண்டர்களைத் தண்டிப்பதற்கு I. P. C. இருக்கிறது. விபச்சாரத்தைத் தடுப்பதற்கும் ஒழிப்பதற்கும் விபச்சாரம் சவிய்கிறவர்களைத் தண்டிப்பதற்கும் Suppressi n of Immor l



ra fic Act இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே நில ஆக்கிரமிப்பாளர் களைத் தண்டிப்பதற்கும் அகற்றுவதற்கும் Land Encroachmen Act இருக்கிறது. எனவே இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றவாளி களைத் தண்டிப்பதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்ற போது இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதால் இதிலே ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று நாங்கள் அஞ்சுகிறோம். எனவே இந்தச் சட்டம் தேவையற்றது என்பதை தெரி வித்து ஆரம்பக் கட்டத்திலேயே ஜனதாக் கட்சி இதை எதிர்க் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது Boot-leggar Ordi ance யின் கீழ் கைது செய்யப்படுகிறவர்களுக்குக் கூட 7 நாட்களில் பரிகாரம் கிடைக்கும். ஆனால் இதிலே கைது செய்யப்படுகிறவர் களுக்கு ஒரு ஆண்டு ஆனாலும் கூட பரிகாரம் கிட்டாது என்ற பொருள்படும்படியாகப் பேசினார்கள்.

திரு, அ. ரகுமான்கான்: நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னது தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்யப்பட்டால் அது சம்பந்தப்பட்ட விவரங்களை மத்திய சர்க்காருக்கு குறிப்பிட்ட தேதிக்குள் தெரிவித்தாக வேண்டும். ஆனால் நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தால் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டி யது இல்லை. ஒரு ஆண்டு அல்ல, பல ஆண்டுகள் கூட சிறையில் வைக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தேசியப் பாது காப்புச் சட்டத்தில் கைது செய்யப்படவேண்டிய அளவுக்கு என்ன என்ன வரைமுறைகள் நியதிகள் கையாளப்பட வேண்டுமோ அதே முறைகள் தான் இந்தச் சட்டமுன் வடிவிலும் நடைமுறைப்படுத்த இருக்கிறது. நான் ஒன்றை விளக்கிச் சொல்ல விருமபுகிறேன். திரு. முகம்மது இஸ்மாயில் அவர்களும் திரு. ஆண்டித்தேவர் அவர்களும் திரு. ரகுமான் கான் அவர்களும் இருக்கின்ற சட்டத்தின் மூலமே இது போன்ற குற்றங்களைத் தடுக்க முடியாதா என்று கேட்டார் கள். இருக்கின்ற சடடங்களுக்கும் N.S.A. and P.D.A. ஆகிய சட்டங்களுக்கும் பெரிய மாறுபாடுகள் இருக்கின்றன. விபச்சாரத்திலே ஒருவர் ஈடுபடுகிறபோது, குண்டர் தொழி லிலே ஈடுபடுகின்றபோது ஏழைகள் இன்னலுக்கு ஆளாகிற காரணத்தினால் ஏற்படுகிற குற்றம். The existing provisions of the Law will take care of them என்பதன்கீழ் வருகிறது. ஆனால் இந்தச் சடடத்தின் காரணமாய் consequence of such activity what would eventually result is public disorder or disturbance to Public tranquility என்ற

அடிப்படையிலே வருகிறபோது N.S.A. வைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதே அடிப்படையிலே விபச்சாரத்திலே ஈடுபடுகிறவர்களாயிருந்தாலும் சரி, விபச்சாரத்தை நடத்து கிறவர்களாய் இருந்தாலும் சரி, குறிப்பாக ஒன்றும் புரியாத வர்களை Women are kidnapped and used for prostitution. என்ற அளவுக்கு இருக்கின்ற பல தகவல்களை செய்திகள் மூலமாக பாரதம் தழுவிய நிலையில் நாம் கேள்விப் பட்டிருக் கிறோம். அந்த அளவிலே பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிற அளவில் நிலைமைகள் இருக்கிறபோது இந்தச் சட்டம் தேவை என்பது இந்தச் சட்டத்திலே உள்ள விளக்கத்தின் மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் வாழ்நாள் முழுவதும் சிறையிலே இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது ரெக்கார்டாகி இருக்கிறது. வாழ்நாள் பூராவும் இல்லை: மூன்று மாத காலத்தில் மீண்டும் அட்வைசரி கமிட்டிக்கு வந்து சரியா, இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, நான் சொல்லும் தகவல் வேறு; அமைச்சரவர்கள் சொல்லும் தகவல் வேறு. நான் சொன்ன கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு சொல்லுகிறார்கள் என்று கருது கிறேன். இங்கே அமைச்சரவர்கள் கொண்டு வந்த சட் டத்தைப் படித்துப் பார்த்தேன். ஏற்கனவே ஒரு முறை குற்றம் சுமத்தப்பட்டு அதிலே கைது செய்யப்பட்டால் அவர் சிறையிலே வைக்கப்படுகிறார்; கோர்ட்டுக்குப் போக முடி யாது. அட்வைசரி போர்டுதான் முடிவு செய்ய வேண்டும் மூன்று மாத காலம். பிறகு ஓராண்டு தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படி வெளியே வந்த பிறகு அதே சட்டத்தின் கீழ் கைது செய்யலாம்; உள்ளே கொண்டு போகலாம்; வெளியே வந்த பிறகு பழையபடி கைது செய்யலாம். எனவே, இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே தடுப்புக் காவல் என்பது காலங்காலமாக நீடித்துக்கொண்டே போகலாம். நீங்கள் போட்ட அட்வைசரி போர்டு அரசாங்கம் போட்ட போர்டு. அதுதான் தீர்மானிக்க வேண்டும். அது தீர் மானித்தால் ஏழை எளிய மக்களைச் சிறையில் தொடர்ந்து வைக்கலாம். பழையபடி எக்ஸ்டென்ட் செய்யலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்போது நடைமுறையில் உள்ள I.P.C. Criminal Procedure case போன்றவைகளையெல்லாம் தனிப்பட்ட நபர் தவறு செய்யும் பொழுது, தனிப்பட்ட நபர் பாதிக்கப்படும்பொழுது, அப்படிப் பாதிக்கப்படுகிறாரே அவரைப் பொறுத்துத்தான் அங்கே இருக் கின்ற சட்டத்தைப் பயன்படுத்த முடியும். ஆனால் N.S.A. P.DA. போன்றவைப்போல், When the public at large are affected இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.



இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லும்பொழுது முசோலினி சர்க்காரா என்று கேட்டார்கள். முசோலினி சர்க்காரா என்று கேட்டதற்காகச் சொல்கிறேன். இந்தச் சட்டம் தமிழகத்திலே மட்டும்தான் முதன்முதலாக வந்தது என்பதுபோல திரு ரகுமான்கான் அவர்கள் பேசக்கூடாது. ஏற்கனவே பஞ்சாப் மாநிலத்திலே இருக்கிறது. இராஜஸ் தான் மாநிலத்திலேயும், உத்தரப் பிரதேசத்திலேயும் பீகாரி லேயும் இருக்கிறது; மகாராஷ்டிரத்திலே இந்த நடைமுறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசும்பொழுது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் இதற்கு கவர்னர் அனுமதி தருவாரா: பிரசி டென்ட அனுமதி தருவாரா என்றெல்லாம் கேட்டார்கள். அவசரச் சட்டம் மைய அரசுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டுத்தான் வெளியிடப்பட்டிருக்கிறது.

304 (b) of the constitution.

பிரகாரம் பிரசிடென்ட் அவர்களின் முன் அனுமதியை இந்தச் சட்டத்திற்கு பெற வேண்டியதில்லை.

207 (3) of the constitution.

பிரகாரம் ஆளுநர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றாலே போதும். ஆகவே, சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடை முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைவிட மேலாக, This is a subject covered by the Concurrence List of the constitution. The State has got the Power to legislature.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கருப்பையா, முத்து ராமலிங்கம் ஆகியவர்கள் பேசும்பொழுது இதை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே சொன் னதைப் போல, விபச்சாரம் நடத்துபவர்கள், குண்டர்களாக இருந்து ஏழைகளைக் கொடுமைப்படுத்துகின்றவர்கள், கள்ளச் சாராயத்தில் ஈடுபட்டு விஷத்தைக் கலந்து பலர் இறப்பதற்கு காரணமாக இருப்பவர்கள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வந்து, பொதுமக்கள் பெரும்பான்மையாகப் பாதிக்கப்படும் பொழுது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் விவாதத்திற்கு வரும்பொழுது விளக்கங்களைக் கூறி முடிவு செய்யலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்பொழுதுதான் பயன்படுத்த முடியுமே தவிர (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில்லை அறிமுகப்படுத்து கின்ற நேரத்தில் இவ்வளவு பெரிய விவாதம் அனுமதிக்கப்படுவது கிடையாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே பேச அனுமதிக்கப்பட்ட காரணத்தால் நான் பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்திலே வருகின்ற குண்டர்கள் என்ற பகுதியைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் தொடர்ந்து நான்கைந்து தடவைகள் ஒரே வாக்கியத்தை உச்சரித்திருக்கிறார்கள். அது வேறுவிதமான விபரீதமான விஷயத்திற்குப் போய்விடும் என்பதற்காகச் சொல்கிறோம் ஏழைகளைக் கொடுமைப்படுத் படுத்தும் குண்டர்கள், குண்டர்கள் ஏழைகளைப் கொடுமைப் படுத்துவதிலிருந்து பாதுகாக்க என்று சொல்கிறார். அப்படிச் சொல்லும்பொழுது, ஏழைகள் அல்லாதவர்கள் எந்தவிதமான ஆபத்திற்கும் ஆளாகலாம் என்ற பொருள் தொனிக்கிறது. எனவே பொதுமக்களைப் பாதிக்கின்ற அளவிற்குக் காரியங்களைச் செய்கின்ற குண்டர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஏழைகளைத்தான் குண்டர்கள் கொடுமை செய்வார்கள். பணக்காரர்களைக் கொடுமை செய்வதில்லை என்றோ அல்லது பணக்காரர்களைத்தான் கொடுமை செய்வார்கள், ஏழைகளைச் கொடுமை செய்வதில்லை என்றோ பொருள் வந்து விடக்கூடாது. ஆகவே, இதைத் திரும்பச் திரும்பச் சொல்வதால் சட்டத்தை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் அல்ல.

(முற்பகல் 11·40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டர்களிடமிருந்து பணக்காரர்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுமக்கள் எல்லோருக்கும் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : This is applicable to the Public at large என்று கூட நான் சொன்னேன். விளக்கம் கூறுகின்றபொழுது, This is applicable to the public at large என்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு அதைத்தான் சொல்கிறேன். அதிகப் படியான பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் ஏழைகளாக இருக்கிற காரணத்தாலே, விளக்கத்தின் அடிப்படையில் சொன்னேனே ஒழிய, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் This is applicable to the Public at large என்பதை நான் கூறிக் கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த விவாதம் முடிவதாக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சருக்கு உடல் நலம் இல்லாமலிருந்து, எனக்கும் இரண்டு நாட்களாக உடலில் நலம் இல்லாமலிருந்த காரணத்தால், முதலமைச்சருடைய உடல் நலக் குறைவு எனக்கு உதவியாயிற்று என்றுதான் நான் கருதுகிறேன். இருந்தாலும் இன்றைக்கும் என்னுடைய குரலிலே தெளிவு இல்லாமல் இருக்குமானால் அதற்காக அவையிலே இருப்பவர்கள் அந்தக் குரலிலே ஏற்படுகின்ற வேற்றுமையைப் பொறுத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆளுநர் உரை மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆளுநர் உரை ஏதோ ஒரு சடங்கு போல் கருதப்படுவதாக இருக்குமானால் அது இந்த அவைக்குப் பெருமை சேர்ப்பதாக ஆகாது. ஆளுநர் உரை மூலமாக அரசு தன்னுடைய குறிக்கோளை விளக்குகிற வகையில், நடைமுறைப் படுத்துகிற திட்டங்களை அவைக்கு எடுத்து வைக்கின்ற வகையில், விவரமாகக் கூறுகிறது என்ற அடிப்படையில் ஆளுநர் உரை என்பது ஓர் ஆண்டுக்காலத்திற்கு, எதிர்காலத்திலே இந்த அரசு எப்படிப்பட்ட முறையில், எந்த நோக்கத்தோடு, எந்தக் கடமைகளை நிறைவேற்ற இருக்கிறது என்பதனையும் விளக்குவதாகும். அப்படிக் காண்கின்றபொழுது கடந்த ஆண்டு ஆளுநர் உரையினுடைய கருத்துக்கள், இந்த ஆண்டு உரை நிகழ்த்தப்படுவதற்கு முன்னர் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அதை நிறைவேற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும், துவக்கம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றுதான் கருதப்பட

ண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் ளே, கவனஈர்ப்புத் தீர்மானம் பல உறுப்பினர்கள் த்திருந்தால், ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு முறை விகள் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டால், அதிக நேரம் என்பதால் ஒவ்வொரு கேள்வி கேட்பதற்கு அனுமதி நிப்பது என்கிற முறையை நாம் கடைபிடித்து வருகிறோம். தப் போலவே, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் வுகின்ற போதும், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேச ண்டும் என்று வைத்து இருக்கிறோம். அந்த முறையில் தான் போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு ருக்கிறது. இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும் என்று ண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அதனை முதல் வாய்ப்புக் ாடுக்கின்றபோதே பயன்படுத்தி, இரண்டு கேள்விகள் கேட்டுக் காள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை ாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருது கிறேன்.

## 6. அரசினர் தீர்மானம்.

### விதி 32(1)–ஐ–த் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1)–ஐத் தளர்த்தி. இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

## 2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சு பவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித் து[illegible]ள்.



## 7. அரசினர் சட்டமுனவடிவுகள்.

(அ) கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''ஆளுநர் அவர்களால் 5-1-1982 ஆம் தேதியன்று பிறப் பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருகள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள்," குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1982) இப்பேரவை நிரா கரிக்கிறது.''

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சு பவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய் பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களின் நிராகரிக்கும் தீர்மானமும் அமைச்சரின் தீர்மானமும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு போலீஸ் அராஜகத்தை உருவாக்கி, இங்கே ருத்திரத்தாண்டவம் ஆடுகிற ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அபாயகரமான, ஜனநாயக விரோதமான, சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கிற இந்த கறுப்புச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வன்மையாக எதிர்க் கிறேன்.

* 1982 பிப்ரவரி 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. ரா. உமாநாத்:** நான் குறுக்கிடவில்லை. ருத்திரத் தாண்டவம் என்று சொன்னார்கள். அப்படியானால் அது எப்படி இருக்கும் என்று சொன்னால் பரவாயில்லை. (குறுக்கீடு—சிதம்பரத் திற்குப் போய் வந்தால் தெரியும்.)

**திரு. அ. ரகுமான்கான் :** கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் உயிருக்கும், உடல் நலத்திற்கும் பொது அமைதிக்கும் ஆபத்து விளைவிப்பவர்கள், சமூக விரோதிகள் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இந்த சமூக விரோதி களின் செயல்கள் தடுக்கப்பட்டாக வேண்டும். அதிலே மாறு பட்ட கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டம் இருக்கிறதா என்று கேட்டால் இந்த சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த சமூக விரோதிகளைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், கள்ளச்சாராயம் காய்ச்சு பவர்களாக இருந்தாலும் சரி, விபசாரம் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது ஏற்கெனவே இருக்கிற சட்டங் களின்படி குற்றம் சுமத்தலாம். நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்திற்குக் கொண்டுவரலாம். நீதிபதிகள் விசாரிக்கலாம். குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பு வழங்கலாம். சிறைச்சாலைக் குள்ளே தள்ளலாம். தண்டனை வழங்கலாம். இது ஏற்கெனவே இருக்கிறது. அப்படி இருந்தும் கூட இப்படிப்பட்ட ஒரு அபாய கரமான சட்டத்தை நீங்கள் ஏன் கொண்டு வருகிறீர்கள் என்பதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

சமூக விரோதிகள் என்று நீங்கள் யாரைப் பார்த்து வேண்டு மானாலும் சொல்லலாம். ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்று தீர்மானிப்பது யார்? நீங்களா? நான் கேட் கிறேன். இங்கே இருக்கிற சர்க்காரா தீர்மானிப்பது? போலீஸ் காரர்களா தீர்மானிப்பது? இதைக் காட்டிலும் வன்முறையானது இதைக்காட்டிலும் கொடுமையானது இதைக் காட்டிலும் சாட்டு மிராண்டித்தனமானது எங்கே இருக்க முடியும்? ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்பதை ஒரு போலீஸ்காரர் சொல்கிறார் என்றால், அவர் சொல்வதை வைத்து அந்தப் பெண்ணை சிறைக்குள்ளே தள்ளுகிறீர்கள் என்றால், தண்டனை வழங்குகிறீர்கள் என்றால் நாம் ஒரு ஜனநாயக நாட்டில்தானா இருக்கிறோம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. குண்டர்கள் என்று யார் தீர்மானிப்பது? கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் என்று யார் தீர்மானிப்பது? அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்றால் அதுபற்றி தீர்ப்பு அளிக்க வேண்டியது, அதுபற்றி தீர்மானிக்க வேண்டியது



நீதிமன்றமாகத்தான் இருக்கும். ஆனால் இங்கே என்ன நிலைமை? நீங்களே குற்றச்சாட்டை சொல்கிறீர்கள். நீங்களே விசாரிக கிறீர்கள். நீங்களே குற்றவாளி என்று சொல்கிறீர்கள்— நீங்களே வழக்கு போடுகிறீர்கள். வழக்கு கூட அல்ல; உடனே கைது செய்து, சிறையிலே தள்ளுகிறீர்கள். நான் கேட்கிறேன். குற்றம் சுமத்துவதும் நீங்களே; தீர்ப்பு வழங்குவதும் நீங்களே; சிறையில் தள்ளுவதும் நீங்களே என்றால் நீதிமன்றம் எதற்கு? நீதிமன்றம் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? இன்றைக்கு ஜனநாயகக் கோவிலின் மூல விக்கிரகம் என்று சொல்லப்படுகின்ற அந்த நீதிமன்றத்திற்கு இங்கே வேலை இருக்கிறதா? அந்த மூல விக்கிரகத்தை, அந்த நீதிமன்றத்தை அகற்றுகின்ற முறையிலே இன்றைக்கு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் உங்களுடைய சட்டம் காட்டிக்கொண்டிருக் கிறது.

(முற்பகல் 11.20)

அரசாங்கமே நீதிமன்றமாகவும், ஆளும் கட்சியைச் சேர்ந்த வர்களும், போலீஸ் அதிகாரிகளும் நீதிபதிகளாகவும் மாறக்கூடிய நிலைமை இருக்குமேயானால் நான் ஒன்று கேட்கிறேன். ஃப்ரென்ச் நாட்டு வரலாற்றை நான் படித்திருக்கிறேன். அங்கே 'ஐ அம் தி ஸ்டேட்' என்று சொன்னானே அந்த லூயி மன்னன் அவனைச் சர்வாதிகாரி என்று சொன்னால் உங்களுக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம். இது என்ன சினிமா கதை விவகாரமா? திரைக் கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் நானே என்று சினிமாவிலே சொன்னால் நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆனால் இது மக்களின் பிரச்சினையை உள்ளடக்கிய பிரச்சினை. நீங்கள் என்ன மிகப்பெரிய தத்துவஞானிகளா? ஏதோ பகவத் கீதையிலே கண்ணன் எல்லாம் நானே என்று சொல்லியதைப் போலச் சொல்வதற்கு? ஹேபியஸ் கார்ப்பஸ் என்று சொல்லக்கூடிய தனி மனிதனின் சுதந்திரம் புனிதமானது. அந்த உரிமையின்மீது நீங்கள் கை வைக்கிறீர்கள் என்று இந்த அரசை நான் கடுமையாகக் குற்றம் சுமத்துகிறேன்.

நீங்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், யாரை வேண்டுமானாலும் சமூக விரோதி என்று முத்திரை குத்தி விடலாம். அரசியலிலே பழி வாங்குவதற்காக துடித்துக கொண்டிருக்கக்கூடிய நீங்கள் இன்றைக்கு உங்களுக்குப் பிடிக்கா தவர்களை, உங்களை விமர்சனம் செய்பவர்களை, உங்களுடைய தவறுகளை மக்கள் மன்றத்திலே அம்பலப்படுத்துகிறவர்களை ஓராண்டுக்காலம் அவர்களைக் காவலில் தள்ளி சிறையிலே வைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்வதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அவர்களே தவறு செய்ய வேண்டும் என்று அவசியம் கூட இல்லை. தூண்டிவிட்டார் என்று சொன்னாலே, அந்த ஒரு வார்த்தை யிலேயே அவர்களை எல்லாம் கைது செய்து விடலாம். பொது

தாண்டவம் என்று சொன்னார்கள். அப்படியானால் அது எப்படி

**திரு. ரா. உமாநாத்:** நான் குறுக்கிடவில்லை. ருத்திரத் இருக்கும் என்று சொன்னால் பரவாயில்லை. (குறுக்கீடு—சிதம்பரத் திற்குப் போய் வந்தால் தெரியும்.)

**திரு. அ. ரகுமான்கான் :** கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் உயிருக்கும், உடல் நலத்திற்கும் பொது அமைதிக்கும் ஆபத்து விளைவிப்பவர்கள், சமூக விரோதிகள் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இந்த சமூக விரோதி களின் செயல்கள் தடுக்கப்பட்டாக வேண்டும். அதிலே மாறு பட்ட கருத்து யாருக்கும் கிடையாது. ஆனால் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டம் இருக்கிறதா என்று கேட்டால் இந்த சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த சமூக விரோதிகளைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், கள்ளச்சாராயம் காய்ச்சு பவர்களாக இருந்தாலும் சரி, விபசாரம் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது ஏற்கெனவே இருக்கிற சட்டங் களின்படி குற்றம் சுமத்தலாம். நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்திற்குக் கொண்டுவரலாம். நீதிபதிகள் விசாரிக்கலாம். குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பு வழங்கலாம். சிறைச்சாலைக் குள்ளே தள்ளலாம். தண்டனை வழங்கலாம். இது ஏற்கெனவே இருக்கிறது. அப்படி இருந்தும் கூட இப்படிப்பட்ட ஒரு அபாய கரமான சட்டத்தை நீங்கள் ஏன் கொண்டு வருகிறீர்கள் என்பதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

சமூக விரோதிகள் என்று நீங்கள் யாரைப் பார்த்து வேண்டு மானாலும் சொல்லலாம். ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்று தீர்மானிப்பது யார்? நீங்களா? நான் கேட் கிறேன். இங்கே இருக்கிற சர்க்காரா தீர்மானிப்பது? போலீஸ் காரர்களா தீர்மானிப்பது? இதைக் காட்டிலும் வன்முறையானது இதைக்காட்டிலும் கொடுமையானது இதைக் காட்டிலும் சாட்டு மிராண்டித்தனமானது எங்கே இருக்க முடியும்? ஒரு பெண் விபசாரியா அல்லது பத்தினியா என்பதை ஒரு போலீஸ்காரர் சொல்கிறார் என்றால், அவர் சொல்வதை வைத்து அந்தப் பெண்ணை சிறைக்குள்ளே தள்ளுகிறீர்கள் என்றால், தண்டனை வழங்குகிறீர்கள் என்றால் நாம் ஒரு ஜனநாயக நாட்டில்தானா இருக்கிறோம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. குண்டர்கள் என்று யார் தீர்மானிப்பது? கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் என்று யார் தீர்மானிப்பது? அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்றால் அதுபற்றி தீர்ப்பு அளிக்க வேண்டியது, அதுபற்றி தீர்மானிக்க வேண்டியது



நீதிமன்றமாகத்தான் இருக்கும். ஆனால் இங்கே என்ன நிலைமை? நீங்களே குற்றச்சாட்டை சொல்கிறீர்கள். நீங்களே விசாரிக கிறீர்கள். நீங்களே குற்றவாளி என்று சொல்கிறீர்கள்— நீங்களே வழக்கு போடுகிறீர்கள். வழக்கு கூட அல்ல; உடனே கைது செய்து, சிறையிலே தள்ளுகிறீர்கள். நான் கேட்கிறேன். குற்றம் சுமத்துவதும் நீங்களே; தீர்ப்பு வழங்குவதும் நீங்களே; சிறையில் தள்ளுவதும் நீங்களே என்றால் நீதிமன்றம் எதற்கு? நீதிமன்றம் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? இன்றைக்கு ஜனநாயகக் கோவிலின் மூல விக்கிரகம் என்று சொல்லப்படுகின்ற அந்த நீதிமன்றத்திற்கு இங்கே வேலை இருக்கிறதா? அந்த மூல விக்கிரகத்தை, அந்த நீதிமன்றத்தை அகற்றுகின்ற முறையிலே இன்றைக்கு நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைத்தான் உங்களுடைய சட்டம் காட்டிக்கொண்டிருக் கிறது.

(முற்பகல் 11.20)

அரசாங்கமே நீதிமன்றமாகவும், ஆளும் கட்சியைச் சேர்ந்த வர்களும், போலீஸ் அதிகாரிகளும் நீதிபதிகளாகவும் மாறக்கூடிய நிலைமை இருக்குமேயானால் நான் ஒன்று கேட்கிறேன். ஃப்ரென்ச் நாட்டு வரலாற்றை நான் படித்திருக்கிறேன். அங்கே 'ஐ அம் தி ஸ்டேட்' என்று சொன்னானே அந்த லூயி மன்னன் அவனைச் சர்வாதிகாரி என்று சொன்னால் உங்களுக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம். இது என்ன சினிமா கதை விவகாரமா? திரைக் கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் நானே என்று சினிமாவிலே சொன்னால் நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆனால் இது மக்களின் பிரச்சினையை உள்ளடக்கிய பிரச்சினை. நீங்கள் என்ன மிகப்பெரிய தத்துவஞானிகளா? ஏதோ பகவத் கீதையிலே கண்ணன் எல்லாம் நானே என்று சொல்லியதைப் போலச் சொல்வதற்கு. ஹேபியஸ் கார்ப்பஸ் என்று சொல்லக்கூடிய தனி மனிதனின் சுதந்திரம் புனிதமானது. அந்த உரிமையின்மீது நீங்கள் கை வைக்கிறீர்கள் என்று இந்த அரசை நான் கடுமையாகக் குற்றம் சுமத்துகிறேன்.

நீங்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், யாரை வேண்டுமானாலும் சமூக விரோதி என்று முத்திரை குத்தி விடலாம். அரசியலிலே பழி வாங்குவதற்காக துடித்துக கொண்டிருக்கக்கூடிய நீங்கள் இன்றைக்கு உங்களுக்குப் பிடிக்கா தவர்களை, உங்களை விமர்சனம் செய்பவர்களை, உங்களுடைய தவறுகளை மக்கள் மன்றத்திலே அம்பலப்படுத்துகிறவர்களை ஓராண்டுக்காலம் அவர்களைக் காவலில் தள்ளி சிறையிலே வைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்வதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அவர்களே தவறு செய்ய வேண்டும் என்று அவசியம் கூட இல்லை. தூண்டிவிட்டார் என்று சொன்னாலே, அந்த ஒரு வார்த்தை யிலேயே அவர்களை எல்லாம் கைது செய்து விடலாம். பொது

அமைதிக்கு இடையூறு செய்யப்பட்டது; உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து விளைவிப்பவர்கள் என்று சொல்லி கைது செய்யலாம். ஆகவே விளக்கம் கேட்பதும் நீங்கள்தான், எப்படி எல்லாம் பாதிக்கப்படுகின்றது என்ற முடிவுக்கு வருபவர்களும் நீங்கள்தான். ஆகவே மிஸ்யூஸ் ஆஃப் பவர்' அதிகார துஷ்பிரயோகம் நடை பெறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன, இலங்கைத் தமிழர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக நாங்கள் அன்றைக்கு இலங்கைத் தூதரகத்தின் முன்பு அடையாள மறியல் என்று சொன்னோம். இது என்ன பஞ்சமா பாதகமா? இன்னும் சொல்லப் போனால் டெல்லிப் பட்டணத்திலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பாகிஸ்தானத்திற்கு ரீகனுடைய சர்க்கார் ராணுவக் கருவிகளைக் கொடுக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு ஆதரவு தரக்கூடாது என்றும் டெல்லியிலே இருக்கக் கூடிய அமெரிக்கத் தூதரகத்தின் முன்பு பலர் மறியல் செய்தார்கள், போராட்டம் நடத்தினார்கள். சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய கடமை முதலமைச்சருக்கு இருப்பதுபோல் பிரதமருக்கும் இருக் கின்றதல்லவா? அங்கே போராடியவர்கள் மீது வழக்கு உண்டா? அவர்களைச் சிறைக்கு அனுப்பி இருக்கிறார்களா? ஆகவே அரசியல் உள்நோக்கத்தோடுதான் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களைச் சந்தித்தீர்கள்.

தடையை மீறினோம் என்று எங்கள் மீது வழக்கு போட்டீர்
கள். நான் இந்திரா காங்கிரஸ் நண்பர்களைத் தப்பாக
சொல்வதாக அவர்கள் கருதக்கூடாது. அவர்கள் தடையை
மீறினார்களே, அப்போது வழக்கு உண்டா? நண்பர் குமரி
அனந்தன் அவர்கள் தடையை மீறினார்களே, வழக்கு உண்டா?
இன்னும் சொல்லப்போனால் குமரி அனந்தன் கட்சிக்காரர்கள்
மீதும் அவர் மீதும் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கி
இருக்கிறீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. அதிகாரம்
உங்களிடத்திலே இருந்தால் உங்களுக்கு வேண்டியவர்களுக்குச்
சார்பாக அதைப் பயன்படுத்துகிறீர்கள். உங்களை விமர்சித்தால்
எதிர்க்கட்சிக்காரர்களை அடக்குவதற்காக அதைப் பயன்படுத்து
கிறீர்கள் என்பதுதான் தெளிவாகத் தெரிகின்றது. அதிகாரம்
உங்களிடத்திலே மட்டுமல்ல—போலீஸ்காரர்கள் இன்றையதினம்
ஆடுகின்ற ஆட்டமே சாதாரணமானதல்ல. இங்கேகூட தோழர்கள்
வெளிநடப்பு செய்தார்களே தர்மபுரி மாவட்ட நிகழ்ச்சியைச்
சுட்டிக்காட்டி; நான் ஒன்று கேட்கிறேன். நக்ஸல்பாரி என்ற
பெயராலே எவ்வளவு பேர் சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்
கள்? மச்சக்காளை என்ற தோழர் உயிரோடு இருக்கின்றாரா
இல்லையா என்பதற்கு பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படு
கின்றன. அவரைப் போலீஸ் சுட்டுப் பொசுக்கி லாரியிலே
கொண்டுபோய் மழையிலே தூக்கி எறிந்து விட்டார்கள் என்ற
செய்தியும் சொல்லப்படுகின்றது.



மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே ரிட்பெட்டிஷன் ஃபைல் பண்ணி ஆளைக் கொண்டுவா என்று சொல்லியபோது ஆளே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக் கின்றது. இந்த வெறியாட்டத்தை இப்போதிருக்கக்கூடிய அதிகாரங்களை வைத்துக்கொண்டு போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் செய்கிறார்கள் என்று சொன்னால் நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன், நாளைக்கு அவர்களிடத்திலே நீங்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்து உள்ளே தள்ளலாம் என்ற அதிகாரத்தையும் கொடுப்பீர்களேயானால் நிலைமை என்ன ஆகும்?

அதுமட்டுமல்ல, அடக்குமுறை எமர்ஜன்சி இங்கே இருந்தது பற்றி பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் சொன்னார்கள். I lost my Govetnment because of emergcncy excesses என்று கடற்கரையிலே பேசுகின்றபோது அவ்வாறு சொன்னார்கள். எனக்குத் தெரியாமலே பல அதிகாரிகள் பல தப்புகளையும், தவறுகளையும் செய்திருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காட்டி னார்கள். அப்படிப்பட்ட வாய்ப்புகள், இன்று ஏராளமான அதிகாரிகள் தவறு செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு நீங்கள் யார் மீது குற்றம் சுமத்துகிறீர்கள் என்று சொன்னால் வழக்காடுகின்ற உரிமையும் குற்றம் சுமத்தப்படுகின்றவர்களுக்கு கிடையாது. வக்கீல் வைக்க உரிமை கிடையாது நீதிமன்றத்திற்குப் போக முடியாது. கேட்டால் சொல்கிறீர்கள், அட்வைசரி போர்ட் போட்டிருக் கிறோம் என்று.

அந்த போர்டு என்ன போர்டு? அது நீங்கள் வைக்கக்கூடிய போர்டு. உங்களுடைய கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய போர்டு. அங்கே கூட, நீங்கள் யாரை குற்றம் சுமத்தி வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கிறீர்களோ, அவர்கள் வாதிடுவதற்கு வக்கீல் வைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டால், அந்த வக்கீல் வைத்துக் கொள்ளக்கூடிய உரிமையைக்கூட நீங்கள் மறுத்திருக்கிறீர்கள். அப்படி என்று சொன்னால் நீங்கள் ஜன நாயகத்தை அப்பட்டமாக படுகொலை செய்கிறீர்கள் என்றுதான் அதற்குப் பொருள்,

அது மட்டும் அல்ல. இன்றைக்கு சென்னை நகரத்திலே ஏழை எளிய அரிசன மக்கள் ஏராளமானவர்கள் குடிசைகளை போட்டிருக்கிறார்கள். வாழ்வதற்கு வழியற்ற அந்த ஏழை ஜனங்களுக்கு எதிராக, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு எதிராக, சர்க்கார் நிலத்தில், கார்ப்பரேஷன் நிலத்தில் குடிசை போட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, ஆயிரக்கணக்கான மக்களை 24 மணி நேரத்திற்குள்ளாக கைது செய்து, வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கக்கூடிய ஒரு அபாயத்தை இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு எதிராக நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, நீங்கள் தற்போது, தடுப்புக் காவல் ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள். அப்படி பிறப்பிப்பதற்கு முன்னாலேயே ஒரு நபர் பம்பாய்க்குப் போகயிருக்கலாம். அல்லது பெங்களூருக்குப்போ ருக்கலாம். அவருக்கு விவரம் தெரியாமல் இருக்கலாம் ஆனால் அவர் ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி, அவருடைய சொத்துக்களை, நீங்கள் விற்று, ஏலம்போட்டு அதை அபகரீக்கின்ற, அநியாயமான, அக்கிரமமான, மோசமான சட்டப்பிரிவு இதிலே இடம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் இட்லர் கூட இதற்காக வெட்கப்படுவான். முசோலினி கூட இதற்காக வெட்கப்படுவான் என்று தான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, உங்களுடைய ரத்தத்தின் ரத்தமாக இருப்பவர்களானாலும், நீங்கள் யாரை வேண்டுமானாலும், சிறையிலேயிருந்து விடுதலை செய்து கொண்டு வரலாம், அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அப்பாவிகள் அங்கே போய் தெரியாமல் மாட்டிக் கொண்டால் அவர்கள் உங்களுடைய ஆணைகளின் மூலமாகவே வெளியே வருவதாகவே வைத்துக் கொண்டாலும் அப்படி வெளியே வருகிறபோது, அந்த ஆணையில் அதிகாரி எந்த இடத்தைச் சொல்கிறாரோ, எந்த நேரத்தைச் சொல்கிறாரோ அந்த இடத்திற்கு, அந்த நேரத்திற்கு போயாக வேண்டும். இல்லையென்று சொன்னால் இரண்டு ஆண்டு சிறை தண்டனை என்று போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் இது எவ்வளவு மோசமான ஒரு நிலைமை என்பதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தினுடைய நிலைமைகள் என்ன என்பதையு சுட்டிக் காட்டவிரும்புகிறேன். இன்றைக்கு ஒரு அதிகாரி தப்பு செய்கிறார் என்றால், அந்தத் தப்பு செய்கிற அதிகாரி மீது வழக்குப்போட முடியாது. அந்த ஆபத்தும் இதில் இருக்கிறது. அடுத்து கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக இந்தக் கடுமையான சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்களே. உங்களைப் பார்த்துக் கேட்கிறேன் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பட்டியலில் என் கட்சிக்காரரும் இருக்கிறார்கள் அந்தப் பட்டியலில் என்னிடத்திலே இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சபையிலேயே சொன்னாரே, அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. ரத்தத்தின் ரத்தம் என்பதாலா? தயவுசெய்து அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, கள்ளச்சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சியில் தோற்று போய்விட்டீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. எஸ் அவர்களே ஒப்புக்கொண்டார். இன்றைக்கு கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. என்ன காரணம்? விலைவாசி ஏற்றத்தைப்போல, கள்ளச்சாராயத்தின் விலையும் ஏறியிருக்கிறது. மிக மோசமாக உள்ள கள்ளச் சாராயமாக இருந்தாலும், நாட்டிலே



அதைத்தான் குடிக்கிறார்கள். இன்னும் ஒரு வேடிக்கை உங்களுடைய ஆட்சியிலே, அது உங்களுடைய பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. நாகர்கோவில் பக்கத்திலே ஒரு கழுதைகள் குடித்து விட்டு கலாட்டா செய்தது என்று கிண்டலாக அதிலே வெளியிடப்பட்டிருக்கிறது. உங்கள் ஆட்சியில் கழுதைகள் கூட குடித்துவிட்டு களிநடனம் புரிகின்ற காட்சியை பற்றி உங்களுடைய பத்திரிகையே எழுதியிருக்கிறது. ஆனால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாமல் நீங்கள் அதை ஒழிப்போம் என்று சொல்லி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் வாயிலாக பலபேர்களை உள்ளே தள்ளுவதற்காகத்தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறீர்களே தவிர வேறு அல்ல. (மணியடிக்கப் பெற்றது) ஆகவே அந்தக் காரியம் தவறான காரியம் என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விபச்சாரத்தைப் பொறுத்தவரையில் அதை ஒழிப்பேன் என்று முதல்அமைச்சர் அவர்கள் சொன்னார். ஆண்கள்தான் அதற்குக் காரணம் என்றும் சொன்னார். ஆண்களை தண்டிப்பதற்காக சட்டம் வருகிறது என்று சொன்னார். முதல் தடவை விபச்சாரம் செய்தால் மன்னிப்பு, இரண்டாம் தடவை விபச்சாரம் செய்தால் அபராதம், 3ஆவது தடவை விபச்சாரம் செய்தால் ஜெயில் என்றெல்லாம் சொன்னார்களே அந்தச் சட்டம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லையே என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து குண்டர்களைப் பற்றிய பிரச்னை. உங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டபோது நடைபெற்ற போராட்டத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்கள் செய்தது எல்லாம் நியாயம் தான் என்று போலீஸ் மான்யத்திலே முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்படியானால் அந்தக் குண்டர்கள் மீது தொண்டர்கள் மீது போடப்பட்ட வழக்கு ஏன் வாபஸ் வாங்கப்பட்டது? வாபஸ் வாங்கவேண்டிய அவசியம் என்ன? உங்களுடைய கட்சிக்காரர்கள் என்பதினால் தானே. ஆக சட்டம் கொண்டு வருவது யாரை ஏமாற்றுவதற்காக. எதிர்க் கட்சிக்காரர்களையும் வேண்டாதவர்களையும் தண்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொல்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், ஆதாரத்தோடு சொல்கிறேன் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன். நில ஆக்கிரமிப்பை உங்களுடைய கட்சிக்காரர்கள் தான் செய்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இதே சென்னை நகரத்திலே, அந்த ஆக்கிரமிப்புகளின் விவரங்களை பார்ப்பீர்களேயானால், கோவிலுக்குச் சொந்தமான இடம்

ஒன்றை கோவிந்தராஜ முதலியார் என்பவர் வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள், உங்களுடைய கட்சிக்காரர்களே அதை ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11.30)

அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டிருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எவிக்ஷன் ஆர்டர், நில ஆக்கிரமிப்பு செய்ததற்குப் பிறகு அவர்களை வெளியேற்றவேண்டும் என்று சொல்லி நிர்வாக அதிகாரி எவிக்ஷன் ஆர்டர் போட்ட பிறகும்கூட இவ்வளவு நாட்களாக நடவடிக்கைகள் எடுக்க வில்லை. யாரைப் பாதுகாப்பதற்காக இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்களின் தலையீடு இதில் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே நான் சொல்ல விரும்புவது இந்தச் சட்டம் ஜனநாயகத் திற்கு விரோதமான சட்டம். இது சர்வாதிகாரச் சட்டம். மக்கள் உரிமைகளைப் பறிக்கக் கூடிய சட்டம்.

இன்று தேசீய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம், இருக்கிறது. அந்த பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் என்ன நடவடிக்கை எடுத்தாலும் மத்திய அரசுக்கு தகவல் தெரி விக்கவேண்டும். நாராயணசாமி நாயுடுவை சமூக விரோதி என்று சொல்லி அந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்தார்கள். திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலையிட்ட பிறகுதான் நாராயணசாமி நாயுடுவை வெளியே விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே மத்திய அரசுக்குத் த்கவல் தெரிவிக்காமல், மத்திய அரசு தலையிட்டு உங்கள் ஆட்டங்களுக்கு தடைபோடும் என்றுதான் இன்று இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக் கிறீர்கள் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். இதை எதிர்க்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** திரு ரகுமான்கான் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். தேசீய பாதுகாப்புச் சட்டம் இருக்கும் போது இந்தச் சட்டம் எதற்கு என்றும் தேசீய பாதுகாப்புச் சட்டம் இருந்தால் மத்திய அரசுக்கு தெரிவித்து விட்டு கைது செய்யவேண்டும் என்ற இடர்ப்பாடு இருக்கிறது, ஆகவே இந்தச் சட்டம் என்று சொன்னார்கள். அப்படியானால் மத்திய அரசி டம் தெரிவித்து விட்டு கைது செய்தால் அதை சரி என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேசீய பாதுகாப்புச் சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம், இதையும் நாங்கள் எதிர்க்கிறோம். அதேபோல் இரண்டையும் எதிர்ப்பதற்கு நீங்கள் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசாக இருந்தாலும் இது போன்றவை ஜனநாயக விரோதமான சட்டம் என்பதுதான் எங்களுடைய கருத்து. தேசீய பாதுகாப்புச் சட்டத்தைப்



பொறுத்தமட்டில் நாங்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் (குறுக்கீடுகள்) கடுமையாக அதை நாங்கள் எதிர்த்திருக்கிறோம். ரிக்கார்ட்டாவதன் காரணமாக வோட்டு போட்ட பிரச்னைக்கு வருகிறேன். திரு. முரசொலி மாறன், எங்கள் கட்சி எம். பி., அவர்கள் பேசிய பேச்சு அப்படியே வெளிவந்திருக்கிறது. அதைச் சொல்கிறேன்.

''ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றின் அடித்தளமே ஹேபியஸ் கார்பஸ் என்கிற தனி நபர் உரிமைதான். தடுப்புக் காவல் சட்டமும் ஜனநாயகமும் ஒன்றாக இருக்கமுடியாது. தடுப்புக் காவல் சட்டம் எங்கே ஆரம்பிக்கிறதோ அங்கே சட்டத் தின் ஆட்சி முடிவிற்கு வந்து விடுகிறது என்று பல நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, அங்கே அவர்கள் குறிப்பிடுகிறார்கள், நம் சட்டப் புத்தகத்தி லிருந்து அறவே தடுப்புக் காவல் சட்டம் நீக்கப்பட்டால் தடுப்புக் காவல் சட்டத்திற்கு தேவை இல்லாமல் போய் விடும். போய் விட்டால் நான் மிக்க மகிழ்ச்சியுடையவனாக இருப்பேன். துணைத் தலைவர் அவர்களே, மக்கள் அவையில் பேசும்போது மாண்புமிகு உள்துறை அமைச்சர் இந்த தடுப்புக் காவல் சட்டம் தற்காலிகமானதுதான் என்று கூறியிருப்பதைக் கண்டு நான் மகிழ்கிறேன். ஆனாலும் கை எடுத்து கும்பிடுகிறேன், தயவு செய்து இந்தச் சட்டத்தை அகற்றுகிற முயற்சியில் (குறுக்கீடு).

**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின்கீழ் குற்றம் செய்பவர்கள், விபசார குற்றம் செய்ப வர்கள், சட்ட விரோதமாக பிறர் நிலங்களில் குடிசைகள் போடு கிறவர்கள் ஆகியோர் மீது, அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற அபாயகரமான செயல்களைத் தடுத்து அவர்களை தடுப்புக் காவலில் வைக்க வகை செய்யும் இந்தச் சட்டத்தையும் இதைக் கொண்டு வந்துள்ள அரசையும் நான் பாராட்டுகிறேன், இந்தச் சட்டத்தை விட கடுமையான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தபோது முழுமையான ஆதரவை முகமலர்ச்சியோடு வாக்களித்த திராவிட முன்னேற்றக் கழகத் தினர் இந்தச் சட்டத்தை இங்கே எதிர்க்கிறார்கள். (குறுக்கீடு) தமிழக அரசு கொண்டுவந்தால் அது அடக்குமுறை, மத்திய அரசு கொண்டு வந்தால் அது அடக்கமுறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒருவர் பேசும்போது மற்றொருவர் 'ரெபர்' பண்ணி பேசக் கூடாது. அப்படிப் பேசினால், பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்தாக வேண்டும். எனவே, யாரையும் 'ரெபர்' பண்ணாமல் பேச வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் இயக்கம். இதிலே உள்ள ஒரு மிக முக்கியமான பிரச்னை என்ன

மென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்திலே ஆதரவு கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றித் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், அதிலே இருக்கின்ற ஷரத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பிரச்னை குறித்து, அதையொட்டிப் பேசுகின்றபோது ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இங்கேகூட, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. கிளாரிபிகேஷன்.....(கூச்சல்) நம்முடைய பேரவை விதியை அனுசரித்து நடக்க வேண்டும். இஷ்டம்போல் பேசக் கூடாது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நெடுமாறன் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் நடந்த போலீஸ் அராஜகத்தைக் கண்டிக்கின்ற வகையில் வாக் அவுட் செய்தார்கள். அப்போது நாங்கள் வாக் அவுட் செய்யவில்லை. அதைப்போல், பால் கமிஷன் பிரச்னை வந்தபோது, நாங்கள் வாக் அவுட் செய்தோம்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் முடிந்து விட்டப் பிரச்னை. திரு. வின்சென்ட்.

**திரு. மி. வின்சென்ட்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எதிர்ப்பும், மத்தியில் ஆதரவும் தருவது இரட்டை நிலை அல்லவா? இரட்டை வேடம் அல்லவா? என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். டெல்லியிலே ருத்ர தாண்டவம் ஆடும்போது, அதற்கு பக்க மேளம் அடித்து விட்டு, தமிழகத்திலே தப்புத் தாளம் போடுவது நியாயம்தானா என்பதைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பதும், விற்பது என்பதும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் உண்டு; தி.மு.க. காலத்திலும் உண்டு; இப்போதும் உள்ளது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் குடித்து, அங்கம் அங்கமாக அழிந்து இறந்து கொண்டு வரும் மக்கள் உயிரைக் காக்க வேண்டியது, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை. இதை உணர்ந்துதான் மத்திய அரசு 1958லே கள்ளச் சாராயம் பற்றி இந்தியாவிலுள்ள முழுமையான நிலையைக் கண்டறிய ஒரு கமிட்டியை நிறுவியது. அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை 1962ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. காவிரி நதிக் கரை கள்ளச் சாராயம் காய்ச்ச சொர்க்க பூமியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. 1958ஆம் ஆண்டு முதல் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்கவேண்டுமென்று அரசு விரும்பியிருக்கிறது.



ஆனால், முடியவில்லை. ஏன் என்பதைத் தான் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டத்திலே சற்று கடுமை குறைவு தான் அதற்குக் காரணம். ஆதலால்தான், கள்ளச்சாராயம் காய்ச்சுவதை ஒழிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம், மகாராஷ்டிராவில் அமுலில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கள்ளச் சாராயம் ஓடுகிறது என்ற குற்றச் சாட்டை சொல்லும்போது, கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கும் சட்டம் கொண்டு வருகின்றபோது, அது அராஜகம், அடக்குமுறை என்று சொல்வது தி. மு. கழகத்தினுடைய வாடிக்கை; இப்படி நடந்து கொண்டிருக்கும் வேடிக்கையை தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை நாம் விட்டுவிட முடியாது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் கொலைக்காரர்களைவிட மிகவும் கொடியவர்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டியது என் கடமை. வியாபார எண்ணம்கொண்டு, போதை தரும் மருந்துகளை, கண்பார்வையைப் பறிக்கக்கூடிய மருந்துகளைப் படிப்படியாக அதிலே விஷப் பொருள்களைச் சேர்க்கிறார்கள் என்பதை யாரும் மறக்கமாட்டார்கள். குளோரைட் போன்ற விஷப் பொருள்களை யல்லாம் அந்தக் கள்ளச் சாராயத்திலே கலக்கி, வியாபாரத்தைப் பெருக்கி, பணம் சம்பாதிக்கும் அந்த எண்ணம் உள்ளவர்களை கைது செய்து, தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கொண்டுவர இந்தச் சட்டம் தேவை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெங்களூரில் நடந்ததைப்போல், பம்பாயில் நடந்ததைப் போல் இந்த விஷம் கலந்த கள்ளச் சாராயத்தைக் குடித்து, அதிகப்படியாக பல நூறுபேர்கள் ஒரே நேரத்திலே இறந்த கொடுமை, தமிழகத்திலே நிகழக் கூடாது என்ற காரணத்திற்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை மாமன்ற உறுப்பினர்கள ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(முற்பகல் 11-40)

தமிழகத்தின் பண்பாடு, பெண்களின், தாய்மார்களின் பெருமையைக் காக்கவேண்டுமென்பது; பண்பாட்டைக் காக்க வேண்டுமென்பது. இந்தப் பெண்களின் பெருமையைக் காக்கவே, இந்தச் சட்டம், விபசாரக் குற்றம் புரிபவர்களுக்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருங்காலத்தில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது, கல்லூரி மாணவிகள் பஸ்ஸுக்காக காத்து நிற்கும்போது, அந்தப் அப்பாவிப் பெண்களை பலவந்தமாக கார்களில் கடத்திச் சென்று, வியாபாரத்தில்

ஈடுபட, விபசாரத்தில் ஈடுபடச் செய்பவர்களைத் தண்டிப்பதற் காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வியாபாரத் தில் ஈடுபட, விபச்சாரத்தில் ஈடுபட கட்டாயப்படுத்தும் கொடி யவர்களைத் தடுப்புக் காவலில் அடைக்கவேண்டுமென்ற இந்தச் சட்டத்தை யாரும், எந்த எதிர்க்கட்சியும் மறுக்கமாட்டார்கள், எதிர்க்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். விளக்கேற்றிய சீமாட்டி பிளாரன்ஸ் நைட்டிங்கேள் ஆக அன்னிபெசன்ட்டாக, இராணி மங்கம்மாளாக, தில்லையாடி வள்ளியம்மையாக, இராணி லட்சுமி தேவியாக, ராமாபாயாக, கற்புக்கரசி கண்ணகியாக, அமுதசுரபி மணிமேகலையாக, விஞ்ஞான மேதை க்யூரியாக பண்பட்ட ப வார்க்கும் ஔவையாக, புனிதவதி திரேஸாவாக உருவெடுத்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துத் தரவேண்டிய பெண் இனத்தை, விபச்சாரி எனப் பெயர் எடுக்க கடத்திப் போய் காரிலே கற்பினைச் சூறையாடும் நஞ்சினும் கொடிய வஞ்சகர்களை மாறுகால் மாறுகை வாங்கினாலும் தகும். தாய்க்குலத்தின்மீது பாசமுள்ள எதிர்க்கட்சியினரே இந்தச் சட்டத்திற்கு முழு ஆதரவை நீங்கள் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குண்டர்கள் என்றால் யார் என்று கேட்கிறார்கள். இந்தச் சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐ.பி.சி.யில் **offences affecting the humen body** என்ற அத்தியாயமும் offences **against property** என்ற அத்தியாயமும் criminal intimidation, insult & **annoyance** என்ற அத்தியாயமும் குண்டர்களைக் குறிப்பது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அத்தியாயங்களின் கீழ் வருகிறார்கள், கொலைக்காரர்கள். பெண்களைக் கடத்திச் செல்கிறவர்கள், கற்பைச் சூறையாடுகிறவர்கள், திருடர்கள், வழிப்பறிக்காரர்கள், கொள்ளைக்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள் அத்துமீறி நுழைவோர்கள் இத்தகைய குற்றங்களைச் செய்கிற வர்களை கடுமையாக தண்டிக்கவே இந்தத் தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பொது மக்கள் விரோதிகளைத் தடுப்புக் காவலில் வைக்கக்கூடாது என்று வாதாடுவோர் இருக்கமுடியாது. ஆதலால் இந்தச் சட்டத்திற்கு ஆதரவு அளித்து ஒரே மனதாக நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ்செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோத மாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள், அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மத்திய அரசாங்கம் நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் என்று சொல்லக்கூடிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு



களின் கீழ் இன்றைக்கு தமிழக அரசாங்கம் இதைக் கொண்டு வருவதாக நான் அறிகிறேன். மத்திய அரசாங்கம் தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்பதை, தேச விரோத சக்திகள், பிளாக் மார்க்கட் செய்கிறவர்கள், கடத்தல்காரர்கள் இவர்களைத்தவிர ஆன்டி—சோஷியல் எலிமென்ட்ஸ் என்ற ஒரு சாராரையும் சேர்த்து இருந்தார்கள். தமிழக அரசாங்கம் ஆன்டி-சோஷியல் எலிமென்ட்ஸ் என்பதை எடுத்துக்கொண்டு இவர்கள் சிலவற்றைக் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுகிற வர்கள், இடங்களை ஆக்கிரமிப்பவர்கள்—சேர்த்து இவர்களை எல்லாம் தடுப்புக் காவலில் வைக்கவேண்டுமென்ற முறையிலே இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் ஒரு சாதாரண பிரச்சினைக்காக இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் என்று சொல்லி தடுப்புக் காவலிலே வைக்க அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று அரசாங்கம் கருது மானால் எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. தமிழகத்திலே பல்வேறு சட்டங்கள் அவைகளுக்காக இருக்கின்றன. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக அப்படிக் காய்ச்சுகிறவர்களைத் தடுப்பதற்காக பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. அது மட்டு மல்ல, இன்றைக்கு கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் யார் என்பதை ஆழமாகச் சிந்தித்தால் ஒருவன் முதன்முறையாக குற்றம் செய்வானேயானால் அவன் அதை காவல் துறைக்குத் தெரியாமலேயே செய்யலாம். இரண்டாவது முறையாக அந்தக் குற்றத்தைச் செய்தால் காவல் துறைககுத் தெரியாமல் இருக்க லாம்; ஆனால் அதே குற்றத்தை மூன்றாவது முறையாகச் செய்தால் காவல்துறையினரின் அனுமதியோடுதான் செய்கிறான் என்றுதான் பொருளே தவிர, காவல் துறைக்குத் தெரியாமல் செய்வதாக யாரும் கருத முடியாது. ஆகவே, கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது எனபதை அறுதியிட்டு, உறுதியிட்டுச் சொல் வேன். காவல்துறையினருக்குச் சம்பந்தம் இல்லாமல் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதே இல்லை; தொடர்ந்து மாமூல் முறை இன்றைக்கும் வாங்கப்படுகிறது.

காவல் துறையைப் பற்றி முன்பு சொன்னார்கள். அவர் களுக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்று. ஆனால் இப்பொழுது கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் எடுத்திருப் பவர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட்ட காரணத்தால், அரசாங்கத்தின் சாராயம் அதிக விலை யாக இருப்பதால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை ஊக்கு வித்து, நீங்கள் காய்ச்சும் கள்ளச் சாராயத்தை எங்களிடம் கொடுத்து விடுங்கள்; நாங்கள் அதை அசல் சாராயம் என்று மாற்றி அசல் சாராயத்தை என்ன விலைக்குக் கொடுக்கிறோமோ அந்த விலைக்கு அதை விற்றுக் கொள்கிறோம் என்று சொல்கி றார்கள். இதனால் கள்ளச் சராயக்காரர்களுக்கும் இலாபம் கிடைக்கிறது; அரசாங்கத்தின், கடைகளை எடுத்தவர்களுக்கும்

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 பிப்ரவரி 18

கூடுதலாக இலாபம் கிடைத்துக் கொண்டிருப்பதை யாரும் மறுத்து விட முடியாது. ஆகவே, அரசாங்க அதிகாரிகள், அரசாங்கத்தோடு தொடர்பு உள்ளவர்கள்தான் இன்றைக்குக் கள்ளச் சாராயத்தை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, நீங்கள் இதை முதலில் கட்டுப்படுத்துங்கள்; தானாகவே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவது தடுக்கபட்டு விட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குண்டர்கள் என்றால் யார் என்பதற்கு கிளாசிபிகேஷன் இல்லை. உங்களுடைய அகராதியின்படி ரௌடி என்றால் குண்டர்கள். உங்களுடைய ஆட்சியிலேதான் ஒரு ரௌடிக்கு அறங்காவலர் குழுத் தலைவர் பதவியைக் கொடுக்கிறீர்கள். எனவே, இதை நீங்கள் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? சட்டத்திலுள்ள பிரிவுகளைப் பயன்படு தி அயோக்கியர்களைத் தடுப்பதற்குப் ப லாக அவர்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு ஆதரவாகக் கோஷம் போடுவார்கள் அல்லது தங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதற்காக நீங்கள் குண்டர்களைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு இருக்கிறீர்கள். எந்தக் காலத்திலேயும் குண்டர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள் அதை யாரும் மறுக்க முடியாது காரணம் ஆளுங்கட்சியிலே அவர்கள் இருந்தால்தான் அவர்களுககும் பாதுகாப்பு. எனவே, குண்டர்கள், சமூக விரோதிகளெல்லாம் ஆளுங்கட்சிப் பக்கத்திலேதான் இருப்பார்கள். நாளைக்கு நீங்கள் இல்லாமல் இன்னொருவர் ஆட்சிக்கு வரலாம்; அப்பொழுதும் அவர்கள் உங்களை விட்டு அந்த ஆட்சியின் பக்கம் போய் விடுவார்கள்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசும்பொழுது குண்டர்களெல்லால் ஆளுங்கட்சியின் பக்கம் இருப்பார்கள் என்று அறுதியிட்டுச் சொல்கிறார்கள். அதைப்போலவே, டெல்லியிலேயும், ஏனைய மாநிலங்களிலேயும் இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு நா. சுந்தரராஜ்: துணைத் தலைவரவர்களே, அப்படி என்றால் நண்பர் முத்தையா அவர்கள் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் உண்மையைச் சொல்கிறேன். அப்படிப்பட்டவர்கள் ஆளுங்கட்சிப் பக்கத்தில் இருந்தால்தான் அவர்களுககு ஆதரவு கிடைக்கும். சமுதாய விரோதிகள் என்பவர்கள் இன்றைக்குப் பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு ஆளுங்கட்சியின் ஆதரவு இருப்பதால்தான். சமூக விரோதிகள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள்.



1982 பிப்ரவரி 18]

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரௌடிகளையெல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். யாரையும் நாம் தெரிந்து நியமிப்பதில்லை.

* * * * * * *

ஆகவே, அறங்காவலர் குழுத்தலைவராகப் போடப்பட்டவர்களெல்லாம் ரௌடிகள் என்று சொல்வது பொருந்தாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு, துரைமுருகன்: பாலகிருஷ்ணன் ரௌடி லிஸ்டிலே இருக்கிறாரே....

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவரவர்களே, யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. குண்டர்கள் என்பதற்கு ஆங்கிலத்திலே ரௌடி அல்லது கேடி என்றுதான் வரும்.

அடுத்து, விபச்சாரம் குற்றம் சம்பந்தமாக....

திரு. ஆர். மணிமாறன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத்துணைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சியின் சார்பாகத்தான் சமூக விரோதிகளும், குண்டர்களும் இருப்பார்கள், நாளைக்கு வேறு எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக வந்தாலும் அந்த ஆளுங்கட்சியின் சார்பாகத்தான் குண்டர்கள், சமூக விரோதிகள் இருப்பார்கள் என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் சொல்வது, பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார்கள், அவர்களை அவமானப்படுத்துவதாக இது அமைகிறதே என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11.50)

தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னால், ஒட்டு மொத்தமாக இந்திய அளவில் ஆளுங்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு குண்டர்களும், சமூக விரோதிகளும் இன்றைக்கு கைதூக்கி அவர்களுக்கு ஆதரவு தந்துகொண்டிருக்கிறார்களா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, நண்பர் மணிமாறன் தன்னுடைய வார்த்தை ஜாலத்தால், இன்று புதிய ஒரு விஷயத்தை வைத்திருக்கிறார். அவருக்கு நான் பதில் சொல்லுகிறேன். பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் சாதாரணமாக இருக்கக்கூடிய, சமுதாயத்தில் இருக்கக்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூடிய ஒழுக்கக் கேடுகளைச் சொல்லுகிறேனே தவிர, நான் மாண்புமிகு பிரதமர் இந்திராகாந்தியை சம்பந்தப்படுத்தியோ, அல்லது உங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சம்பந்தப்படுத்தியோ நான் பேசவில்லை.

இது இயற்கையாக இருக்கின்ற நடைமுறை. இதிலே ஏன் நீங்கள் ஆத்திரப்படுகின்றீர்கள் என்பது புரியவில்லை. சாதாரணமாக நாம் பார்க்கின்ற காலத்திலே இந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் இன்றைக்குப் பல பேர்கள் கட்சி மாறி, கட்சி மாறி வருகிறார்கள். அந்தக் காலத்தில் காங்கிரசில் இருந்தவர்கள் காலப்போக்கில் மாறி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறி இருக்கிறார்கள். அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர்கள், மாறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறார்கள். நாளைக்கு வேறு கட்சி வரும்போது அவர்கள் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய சரித்திரத்தை நீங்கள் பார்ப்பீர்களேயானால், ஆரம்பக் காலத்திலே அவன் யோக்கியமான மனிதனாக காட்சி அளித்து இருக்க மாட்டான். அவன் அயோக்கியனாக, ரௌடியாக, கேடியாக வாழ்ந்தவன்தான், இதுபோன்ற நிலைமைக்கு அரசாங்கத்திற்கு அனுசரணையாக மாறி மாறி வந்து, அதன் மூலம் தன்னுடைய சுய லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு வருவானே தவிர நீங்கள் சொல்வது போல, இருக்கின்றவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு குறிப்பிட்ட சதம் பெரும்பான்மையானவர்கள் இந்த நிலைமையிலேதான் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறுத்துப் பயனில்லை. அதற்காகத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. கோபால் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்த ஆட்சி ரௌடிகளை எல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்து இருக்கிறது என்கிற வார்த்தையைச் சொன்னார்கள். இதே ஆட்சியில் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் கூட அறங்காவலர் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் அந்த வார்த்தை களங்கம் கற்பிக்கும் வகையில் இருப்பதால், அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : இந்த ஆட்சி ரௌடிகளை எல்லாம் அறங்காவலர் குழுத் தலைவராகப் போடுகிறது என்று நான் சொல்லவில்லை. இந்த ஆட்சியில் ஒரு ரௌடி அறங்காவலர் குழுத்தலைவராகப் போடப்பட்டு இருக்கிறார் என்றுதான் சொன்னேன். அதை இல்லை என்று சொல்ல முடியாது. அது க்கார்ட்டில் இருக்கிறது.



விபசாரத்தை தடைசெய்ய வேண்டும் என்பதற்காக இந்த தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இருக்கின்ற சட்டத்தை வைத்து விபசாரத்தை தடுக்க முடியும். இன்றைக்கு சென்னையில் பெரிய பெரிய மனிதர்கள் தாங்கள் செய்ய நினைக்கின்ற காரியங்களை எல்லாம் எந்த வகையில் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்றால்—பல பத்திரிகைகளில் வந்து இருக்கின்றன—ஒன்று மதுவின் மூலமும் மற்றொன்று மாதுவின் மூலமும் நடைபெறுகிறது. பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு விபசாரிக்குத் துணையாக இருந்தவர் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து ஸ்டேட்மென்ட் பெற்றநேரத்தில், பெரிய பெரிய மனிதர்கள் பெயர்கள் அதிலே வந்த காரணத்தால் அவர் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப் போலவே, மதுரையிலோ அல்லது வேறு எங்கோ ஒரு இடத்தில் ஒரு மாஜிஸ்டிரேட் ஒரு விபசாரியை விடுதலை செய்துவிட்டு, அந்தப் பெண்ணோடு பின்னர் தங்கினார் என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இப்படி பெரிய மனிதர்கள், யார் யார் நீதியைக் காப்பாற்றவேண்டுமோ அவர்கள், யார் யார் அதிகாரி பொறுப்பிலே இருக்கிறார்களோ அவர்கள், இதிலே ஈடுபட்டு இருப்பதால், அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயாது. ஆனால், பேவ்மென்ட்டில் இருக்கின்ற பெண்கள், சாதாரணமான அன்றாடம் காய்ச்சிகள், வயிற்றுப் பிழைப்புக்காக, சமூக சிக்கல் காரணமாக இந்த நிலையை அடைந்தவர்கள் மீது இந்தச் சட்டம் பாயும். உண்மையாக இந்தக் குற்றத்தைச் செய்கிறவர்கள் மீது இந்தச் சட்டம் பாயாது. உண்மையாகக் குற்றம் செய்பவர்களைக் கைது செய்து தண்டிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்தச் சட்டம் சாதாரண மக்கள் மீது பாயும் என்கிற காரணத்தால், அரசாங்கம் இதனை மறு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று எடுத்துக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் கோவைத்தம்பி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ** ** என்று சொன்னது மிகவும் தவறானது. அவர் எல்லோரையும் சொல்ல முடியாது. ஆகவே, இதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே மிகப்பெரிய ஜனநாயக விரோதமான ஒரு சட்டத்தை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காரணத்தாலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானது இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறது என்பதை முதலிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் உலக மக்களுடைய பொதுவான பிரஜா உரிமைகளைப் பொறுத்த வரையிலும், ஜனநாயக உரிமைகளைப் பொறுத்த வரையிலும், மனித உரிமைகளைப் பொறுத்த வரையிலும் முன்னேறிக் கொண்டு இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் இந்த அரசு இப்படிப் பட்ட ஒரு சட்டம் கொண்டுவருவது சரியா என்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இப்படிப் பட்ட ஒரு சட்டம் தேவைதானா? இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரணம் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், கள்ளச்சாராயம்காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள் என்று சொல்லி இப்படிப்பட்டவர்களைக் கைது செய்வதற்காக கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும், இந்தச்சட்டம் 'பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்' என்கிற ஒரு அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

மற்ற எந்தச் சட்டமும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசிடம் இல்லாமல் இருக்கிறபோதுதான் ஒரு 'பிரிவென்டிவ் டிட்டன்ஷன் ஆக்ட்' கொண்டுவர வேண்டும். ஆனால் இங்கே நிலைமை என்னவென்றால் மதுவிலக்குச சட்டம் இருக்கிறது; மருந்து பொருள்கள் சட்டம் இருக்கிறது; மருந்து ஒப்பனைப் பொருள்கள் சட்டம் இருக்கிறது; பெண்கள் விபசார தடைச்சட்டம் இருக்கிறது; அதற்கு பின்னாலே கிரிமினல் சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அப்படி எல்லாம் சட்டங்கள் இருந்தாலும், அந்தச் சட்டங்களின்படி பிரச்னைகளைத் தீர்க்க முடியாத நிலை, குற்றங்களைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது; இப்படிப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம்தான நடவடிக்கை எடுக்க முடியும் என்கிற நிலை சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு அஸ்திவாரமாக இருக்கக்கூடிய சட்டங்களை ஒழுங்காக, நல்லமுறையில் அமுல்படுத்த அரசால் முடியவில்லை என்பதுதான். இந்த நேரத்தில் International Commission of Jurists சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். Preventive De ention Act in p ace times is i consistent to the normal rul of law.' அமைதியாக இருக்கிற நேரத்திலே, மறற சட்டங்கள் இருக்கிறபோது இந்தச் சட்டத்தை சர்க்கார் கொண்டுவந்திருக்கிறது என்றால் அதை நம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொல்வது தவறாக இருக்காது என்று எண்ணுகிறேன். இன்றைக்கு மாநிலத்தின் பல பகுதிகளிலும் இருக்கிற மக்கள் பரவலாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு 'ஸ்லம் கிராபர்ஸ்' ஆக இருக்கிற மக்களை, ஏழை



எளிய மக்களை அப்புறப்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று பரவலாக மக்கள் சொல்கிறார்கள். ஸ்லம் கிராபர்ஸ் அகற்றுவதற்குத்தான் இங்கே சட்டம் இல்லாமல் இருந்தது. ஆனால் மத்திய அரசு இயற்றிய ஒரு சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. நான் அதற்கு பின்னால் வருகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஸ்லம் ஏரியாவில் 1978-க்குப் பிறகு தங்கியிருக்கக்கூடியவர்களை, போடப் பட்டிருக்கிற குடிசைகளை அப்புறப்படுத்துவேன் என்று சொல்லி, அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கிய காரணத்தால்தான், அவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு, அவர்களை எப்படியாவது வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்,

ஸ்லம் கிராபர்ஸ் பொறுத்தவரையில் அவர்களை ஒழிக்க வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வரும்போது, அது ஒரு சாதாரண பிரச்னையா என்று கேட்க விரும்புகிறேன். இந்த ஏனென்றால் அது ஒரு முக்கியமான சமூகப்பிரச்னை. நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு குடியிருக்க வசதி செய்து கொடுக்க இந்த அரசால் முடியவில்லை என்ற ஒரு நிலையில்தான் அவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலே தங்கக்கூடிய நிலைமை, குடிசை போடும் நிலைமை ஏற்படுகிறது. ஆனால் இன்று மத்திய சர்க்கார் கூட பப்ளிக் பிரிமிஸஸ் எவிக்ஷன் ஆஃப் அன் ஆதரைஸ்ட் ஆக்குபென்ட்ஸ் 'ஆக்ட்' என்ற இது சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்றியிருக்கிறது. 1971 இருக்கிறது. அதற்கு 1981-ல் ஒரு அமென்ட்மென்ட் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சட்டம் இருக்கிற போது இந்தக் குற்றங்களைப் பொறுத்தவரையில், எல்லாக் குற்றங்களையும் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுக்க முடியும். அந்தச் சட்டத்தை வைத்தே டீல் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறபோது இப்படிப்பட்ட ஒரு பிரிவென்டிவ் டிட்டன்ஷன் ஆக்ட் கொண்டுவருவது சரியல்ல.

ஸ்லம் ஏரியாவில் இருக்கிறவர்களை காலி செய்ய 1981-ல் அமென்ட்மென்ட் வந்தபோது, அதுபற்றி விவாதிக்கும்போது ஒரு பிரச்னை வந்தது. அந்த மக்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு அரசுக்கு கடமை இல்லையா? அப்படி அந்தக் கடமை நிறைவேற்றப்படாமல் அவர்களை பாதுகாப்பு கைதி களாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது. இன்று நாட்டிலே நிலைமை என்ன? பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான நிலங்கள் பெரிய, பெரிய நிலச்சுவான்தார்கள் கையில் முதலாளிகளிடம் இருக்கிறது.

அவர்களுக்கும் அரசால் நிலம் கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே 2,000 ஏக்கர் நிலம் கையிலே வைத்திருக்கக்கூடிய தோட்ட முதலாளி ஒருவருக்கு 2 ஏக்கர் அரசு நிலம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே ஏழை எளியவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். சென்னை நகரத்திலே கூட 18-வது வார்டிலே சில ஆட்கள் அரசுக்கு வேண்டியவர்கள் வீடுகளை கட்டி இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களை அப்புறப படுத்துவதற்கு இன்றைக்கு நடைமுறையிலே இருக்கக்கூடிய சட்டங்களை வைத்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இப்படி ஒரு தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவருவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்டியன் பீனல் கோடிலே இருக்கக்கூடிய ஒரு சில சேப்டர்களில் வரக்கூடிய குற்றவாளிகளை எல்லாம் குண்டர்கள் என்று மாற்றுவது என்று சொன்னால் நாளை ஒரு மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், என்னையும், இந்த அவையிலே இருக்கக்கூடிய அனைவரையும் குண்டர்கள் என்று சொல்லி மாசு படுத்துவதற்கு அந்தச் சட்டம் வழி வகுக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் போலீஸ்காரர்களின் கையிலே இந்தச் சட்டம் பராமரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. குண்டர்கள் என்ற முறையிலே Offences committed under chapter XVI, XVII and XXII of Indian Penal Code இந்த ஐ.பி.சி யிலே வரக்கூடிய குற்றங்களை செய்தவர்களை எல்லாம் குண்டர்களாக மாற்றப் படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் எப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 1978-லே ஒரு பந்து நடந்தது. அது பற்றி அனைவருக்கும் தெரியும். அன்றையதினம் இந்தப் பேரவையிலே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஞானசிகாமணி அவர்கள் உறுப்பினராக இருந்தார். அவர் மீதுகடை உடைக்க முயற்சித்தார் என்று குற்றம்சாட்டி கைது செய்து அவரை உள்ளே தள்ளினார்கள். விளவங்கோடு சர்கிள் இன்ஸ்பெக்டர் அவர் களுடைய திட்டவட்டமான டைரக்ஷன் அடிப்படையிலே அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே இருந்திருக்கின்றன.

அடுத்து அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்தவர்கள் கூட காவல் துறையினரால் ரௌடிகளாகவும் குண்டர்களாகவும் மாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது ஆனால் இப்படிப்பட்ட நிலைமையிலே இந்தச் சட்டம் தேவையா ? ஆனால் இந்தச் சட்டம் மூலம் இந்த நாட்டிலே உள்ள எந்த ஆளையும் குண்டர்கள் என்று சொல்லிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும் ஆகவே ஜனநாயக விரோதமான சட்டம் என்ற முறையிலே இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றுவது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.





இன்றையதினம் நாம் பார்க்கக்கூடிய நிலைமை என்ன? ப்ரொகிபிஷன் சம்பந்தமாக ஒரு சட்டம் இருக்கின்றது. அந்த சட்டத்தை இம்ப்ளிமென்ட் பண்ண முடியவில்லை. ஏனென்றால இன்றைக்கு போலீஸ்காரர்களே அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அனேகமாக எல்லா காவல் நிலையங்களிலுமே மாமூல் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு உதவி புரியக்கூடிய நிலைமைதான் இருக்கின்றது. இது சம்பந்தமாக பல எடுத்துக் காட்டுகளை என்னாலே சொல்ல முடியும். ஆனால் இன்று இவர்களை எல்லாம் இந்த முறையிலே வளர விடுவதற்கு காரணம என்ன? போலீசுக்கு அவர்களிடத்திலே இருந்து ஆதாயம இருக்கின்றது. இவர்கள் நடத்தக்கூடிய பிஸினஸிலே அவர் களுக்கும் ஷேர் இருக்கின்றது. ஆகவே இதைத் தடுப்பதற்குரிய முறையிலே இருக்கின்ற சட்டத்தினை சரியாக இம்ப்ளிமென்ட் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-10)

எங்களுடைய மாவட்டத்திலே சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஊர்வலம நடத்தினார்கள். அவர்களைத் தாக்குவதற்காக ஆர்.எஸ்.எஸ். காரர்கள் திட்டம் போட்டிருந்தனர். இது காவல் துறைக்கும தெரியும். அங்கே இருக்கக்கூடிய டி.எஸ்.பி. அவர்களுக்கும் தெரியும். ஆனால் எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதனுடைய விளைவு என்ன? ஊர்வலம் நடக்கும்போது ஊர்வலம் வந்தவர்கள் கடுமையாகத் தாக்கப் பட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு அப்பாவிகளின் மீது போலீஸ் கேஸ் போட்டது. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் வசதி படைத்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்படிப்பட்ட போலீசினுடைய கையிலே, இந்தக் குண்டஸ் சட்டத்தை கொடுத்தால், இந்தியன் பீனல் கோடிலே இருக்கக் கூடிய மிகப்பெரிய சேப்டர்கள் அடங்கிய சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரத்தை அவர்கள் கையிலே எடுத்து வழங்கக்கூடிய நிலையிலே தந்தால், அது எவ்வளவு பெரிய ஜனநாயக விரோத மானச் செயலாகும் என்று உங்களைக் கேட்கவிரும்புகிறேன். அதைப்போலவே இம்மாரல் டிராபிக் அபெண்டர்ஸ் சம்பந்தமாக, ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழே நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே. அதற்கு பதிலாக அவர்களை பாதுகாப்பு கைதிகளாக காவலிலே வைத்தால் திருந்தி விடக்கூடிய பிரச்னையா அது? அது ஒரு சமூகப் பிரச்னை. இந்த நாட்டிலே பல நூற்றாண்டுகளாக இருக்கக்கூடிய பிரச்னை அது. அதை ஒரு சமூகப் பிரச்னையாகப் பார்த்து அதற்கு மாற்று தரக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவது நியாயம் அல்ல.

இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? ரெஸ்கியூ ஹோம்ஸ்ஸும், கரெக்ஷன்ஸ்ஸும் எடுக்கப்படவேண்டும் என்று அரசே பொதுவாக ஒரு கொள்கை ஏற்று இருக்கிற காலத்திலே, அவர்களை Preventive Detention Act-லே கூட சரிகட்ட முடியலாம் என்று அரசு ஒரு கொள்கையை உருவாக்குவது மிகப்பெரிய ஜன நாயக விரோதமான கொள்கையாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டம் ஒரு மிகப்பெரிய ஜனநாயக விரோத சட்டம் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அதுதான் அட்வைசரி போர்டு. அந்த அட்வைசரி போர்டை பொருத்தவரைக்கும் சுப்ரீம் கோர்ட்டினுடைய முடிவு என்ன என்று தெரியுமா? பல அட்வைசரி போர்டுகளிலே போடப்பட்ட தீர்மானங்கள் சட்ட விரோதமானது நேர்மையற்றது என்று சுப்ரீம்கோர்ட்டே தீர்ப்பு கொடுத்திருக்கிறது என்ற செய்தி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள். அப்படி ஒரு நிலைமையிலே அட்வைசரி போர்டு ஒன்றை ஏற்படுத்தி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது நியாயம் அல்ல, சரியல்ல. அந்தச் சட்டத்திலே 30-வது பக்கத்திலே '"Nothing in this Section shall entitle any person against whom a detention order has been made to appeal by any legal practioner in any matter connected with the reference to the Advisory Board" என்று இருக்கிறது. இது அரசியல் சட்டத்தினுடைய 22-வது ஆப்ஜெக்டுக்கு எதிரானது என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். 'No person who is arrested shall be detained in custody without being informed, as soon as may be, of the grounds for such arrest nor shall he be denied the right to consult, and to be defended by, a legal practitioner of his choice. என்று இருக்கிற இந்தச் சட்டத்தின் கீழே பிடிக்கக்கூடியவர்கள் யார்? சாதாரண மான மனிதர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சக்கூடியவர்கள், விபச்சாரக் குற்றத்திலே கைது செய்யப்படக்கூடியவர்கள் எல்லாம் சமுதாயத்தில் மிகப் பெரிய மனிதர்களா என்ன? அவர்கள் மீது போலீஸ் அதிகாரிகள் கூறக்கூடிய குற்றச்சாட்டினை மறுப்பதற்கு அவர்களுக்கு சட்டநிபுணரின் உதவி தேவையில்லையா? இப்படிப்பட்ட நிலைமைகளிலே அவர்களுக்கு சட்டநிபுணர்கள் உதவி கண்டிப்பாக கொடுக்கப்படவேண்டும். அதை அனுமதிக்க மறுப்பது நியாயமாகாது. ஆனால் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிற சட்டத்திலே என்ன சொல்கிறார்கள் என்றால், அட்வைசரி போர்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் சாதாரணமாக அரசியல் போராட்டத்திலே ஈடுபட்ட குற்றவாளி கள் அல்ல. வாழ்க்கைக்கே கஷ்டப்படக்கூடியவர்கள் கூட இருக்கும். அவர்களை கைது செய்து பாதுகாப்புக் கைதியாக நடவடிக்கை எடுத்து, அவர்களை அட்வைசரி போர்டு முன்னாலே கொண்டுபோகும் போது, அந்த போர்டிலாவது சட்ட நிபுணர் களின் உதவியை அவர்களுக்கு கொடுக்க முடியுமா என்றால், அது கூட முடியாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவது ஜனநாயகத்திற்கு விரோதமானதில்லையா என்று கேட்கவிரும்புகிறேன்?



அதேபோன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாஷனல் செக்யூரிட்டி ஆக்ட் இச்சட்டத்தை பொறுத்தவரையில் ஏறத்தாழ அதே ஈ அடிச்சான் காபிதான் இந்தச் சட்டமுன்வடிவு. குற்றவாளிகள் பொறுத்தவரையில் சொல்லக்கூடிய பகுதிகள் தவிர மீதிப் பகுதிகள் எல்லாம் சென்டன்ஸ் பை சென்டன்ஸ், கருத்துக்கள் எல்லாம் நாஷனல் செக்யூரிட்டி அக்டின் ஈ அடிச்சான் காபிதான். அப்படி ஒரு சட்டம் இந்த நாட்டிலே இருக்கும்போது, ஆளும் கட்சியும் அமைச்சரவையும் அந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நேரத்தில் நாஷனல் செக்யூரிட்டி பாதுகாப்பு கைதிகளாக வைக்க இடம் இருக்கிறபோது ஏன் இந்தச் ஆக்ட்படி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? லீகல் ஜூரிஸ்ப்ருடன்ஸ் பேசிக்ப்ரின்ஸிபிலில் சொல்வதுபோல் ஒரேமாதிரியான சட்டம் இருக்கிறபோது இந்த ப்ரவின்டீவ் டிட்டன்ஷன் ஆக்ட் கொண்டு வரக்கூடாது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்ட முன்வடிவில் உள்ள ஆப்ஜக்ட்ஸ் ஆன்ட் ரீஸன்ஸில் என்ன சொல்லப்படுகிறது? ஏற்கனவே நிலவில் இருக்கிற சட்டப்படி To eradicate bootleggers, drug-offenders, goondas, immoral traffic offenders and slum grabbers முடியாததால் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யென்றால் நான் கேட்கிறேன், காவல் துறை என்ன செய்கிறது? இன்று அரசாங்கத்தினுடைய சட்டம் ஒழுங்கு நிலைநாட்டுகிற மெஷினரி என்ன செய்கிறது? லா ஆன்ட் ஆர்டர் மெஷினரியைப் பொறுத்தவரையில் ஒழுங்கான முறையில் செயலாற்றுகிற விதத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டுமே தவிர இந்தச் சட்டம் நியாயம் நடத்த உதவாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ப்ரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்ட்படி பல்லாயிரக்கணக்கான ஆள்களை கைது செய்து உள்ளே வைப்பதன் காரணமாக அரசாங்க பணம், பொது மக்கள் பணம் வீணாக்கப்படுகிறது. விரயம் செய்யப்படுகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஆகவே பி.டி. ஆக்ட் என்ற முறையில் உள்ள இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் வழியாக அரசு வீணாக செலவு செய்வதற்கான அஸ்திவாரத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதே தவிர நீங்கள் இன்று நாட்டில் நிலவியுள்ள சட்டப்படி செய்யவேண்டியதை செய்து கொண்டிருக்கிறீர்களா? ஆகவே, இந்த அண்டெமாக் ராட்டிக் ஆக்ட் இம்மாரல் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற முயற்சிக்கக்கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, நமது சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கள்ளச்சாரயம் காய்ச்சுபவர்கள், மருந்து பொருள் சட்டத்தின் கீழ் தவறு செய்பவர்கள் என்பன போன்று நான்கு பொருட்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் உண்மையிலேயே ஜனநாயகத்திற்காக இந்தத்

தேசத்தில் பாடுபட கூடியவர்களுக்கு நேர்விரோதமான சட்டமாக மறைபொருளாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைத் தண்டிக்க கடுமையான சட்டம் கொண்டு வருவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கள்ளச்சாராயம் என்றால் தமிழ்நாட்டில்தான் ஏதோ புதிதாக கள்ளச்சாராயம் காய்ச்சுவதுபோலவும் அதை ஒடுக்க கடுமையான சட்டம் தேவை என்பது போலவும் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இப்போதுள்ள சட்டங்களையே காவல் துறையினர் மனப்பூர்வமாக நிறைவேற்ற முயற்சித்தால் அதுவே போதுமானது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

கள்ளச்சாராயம் காய்ச்சுவதால், கள்ளச்சாராயத்தை குடித்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லித்தான் அதற்கான மதுவிலக்கை நீக்க சட்டம் கொண்டுவந்தபோது எங்கள் கட்சியும் ஆதரித்தது. ஆனால் சட்டத்தின் பல சந்துபொந்துகள் இருப்பதால் கள்ளுக்கடைகள் எங்கு பார்த்தாலும் வந்தும், சாராயக்கடைகள் வந்தும் கள்ளச்சாரர்யம் காய்ச்சுவது தொடர்ந்து இருந்து வருகிறது என்றால் இதற்கு காரணம் காவல் துறையினரே. கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் மாமூலை மேலும் அதிகமாகப் பெறுவதற்கான வாய்ப்புதான் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக் கிறது. அதனால் ஏலம் எடுத்த கள்ளுக்கடைக்காரர்கள், சாராயக் கடைக்காரர்கள் இன்றைக்கு திணறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் கள்ளச்சாராயம்தான்.

தமிழ்நாட்டில் சாராயக்கடைகளுக்கு அனுமதி கொடுத்த தற்குப் பிறகு கள்ளச்சாராயம் இன்று நாட்டில் பெருகிக் கொண்டிருக்கிறது. இதை ஒடுக்க ஒரு பாதுகாப்புச் சட்டம் தேவையா? பாதுகாப்பு என்றால் யாரை பாதுகாக்க? மேலும் மேலும் கள்ளச்சாராயம் காய்ச்சி கொள்ளை அடிக்கக்கூடிய அந்தக் கூடாரத்தைத்தான் போலீஸ் பாதுகாக்கிறதே தவிர கள்ளச்சாராயப் பேர்வழிகளை போலீஸ் ஒழிக்காது என்பதுதான் எங்கள் ஆழமான கருத்து.

(பிற்பகல் 12.20)

இதன் மூலமாக காவல் துறை என்ன செய்வார்கள்? மக்களுக் காக பாடுபடக்கூடியவர்களை, காவல்துறையினருக்கு எதிராக இருப்பவர்களை, அவர்கள் கள்ளச்சாராயம் விற்றார்கள் என்று சொல்லி, இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து, அவர்களை உள்ளே அடைப்பதற்குத் தான் இது பாதுகாப்பு அளிக்குமே தவிர, கள்ளச் சாராயம் உண்மையிலே விற்கின்றவர் களிடம் மேலும் மாமூல் வாங்குவதற்கு வழியை இந்தச் சட்டம் உருவாக்கும். எனவே, இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

அதேபோல், குண்டர்கள். இன்றைக்கு குண்டர்கள் யாரைத் தாக்குகிறார்கள்? எங்கு பார்த்தாலும் கற்பழிப்பு. மோட்டார் பைக்கிலே கணவன், மனைவி சென்றால், பின்னாலே மோட்டார் பைக்கிலே வந்து தங்கச் சங்கிலியை அறுக்கிறார்கள். குண்டர்



களின் அட்டகாசம் எங்கு பார்த்தாலும் தலைவிரித்தாடுகிறது. இதற்கு ஒரு சட்டம் தேவையா? யாருக்கு இது பாதுகாப்பு மேலும், குண்டர்களைப் பாதுகாப்பதற்குத் தான் இந்தச் சட்டம் உதவும். நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, காவல் துறையினரிடம் ஒப்படைக்க இருக்கிறோம். குண்டர்கள் என்று சொல்லக் கூடியவர்கள், ஒரு அழகான பையில் 10 ரூபாயை வைத்துக்கொண்டு சென்றாலும், கொலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட குற்றவாளிகள் எத்தனை பேர்களை காவல் துறையினர் இன்றைக்கு கைது செய்திருக்கிறார்கள். எங்காவது பட்டினி, பசியால் ஒருவன் தேங்காயைப் பறித்துவிட்டால், அதற்கு காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள். ஒவ்வொரு மாதத்திற்கும் இத்தனை வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு கணக்கு இருக்கிறது. அதற்கு அவர்கள் இப்படிப்பட்டவர்களை கைது செய்வார்களே தவிர, மூட்டை மூட்டையாக கொள்ளையடிக்கும் பெருங் கூட்டத்தை காவல் துறையினர் கைது செய்யத் தயாராக இருக்கிறார்களா? இல்லை. எனவே அவர்கள் இந்த குண்டர்களிடம் மாமூல் வாங்கவும், அரசியல் வாதிகளைப் பழிவாங்குவதற்கும்தான் இந்தச் சட்டம் பயன்படும். எனவே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பிறர் நிலத்தில் குடிசை போட்டால், அதை அகற்றுவதற்காக இந்தச் சட்டம் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன். திருமதி இந்திரா காந்தி ஆட்சியில் டெல்லியை அழகுப்படுத்துவது என்பதன் பெயரால் ஆயிரக்கணக் கான குடிசைகளை புல்டோசர்களைக் கொண்டு அழித்தார் களே. அது எந்தச் சட்டம்? எனவே, இந்தப் பாதுகாப்புச் சட்டம் யாரை பாதிக்கிறது? இந்த நாட்டில் கள்ளப் பணம் அடிக்கிறார்கள்; கொள்ளை லாபம் அடிக் கிறார்கள். இந்த நாட்டிலே லட்சக்கணக்கான உழைக்கும் மக்களைச் சுரண்டும் கூட்டத்தைப் பாதுகாப்பதற்குத்தான் பாதுகாப்புச் சட்டத்தை திருமதி இந்திரா காந்தி கொண்டு வந்திருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய ஆட்சியில் குண்டர்களை, இத்தகைய சமூக விரோதிகளை அடக்குவதற்குத் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தை எதிர்த்து 19ஆம் தேதி ஒருநாள் பொது வேலை நிறுத்தம் தொழிற் சங்கங்கள் நடத்தியபோது, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்த பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க சொன்னார்கள்? அதை எதிர்த்துத்தான் பிரசாரம் செய்தார்கள்.

தமிழகத்திலே பிர்லாவுக்கு சொத்து கிடையாதா? இந்தியா முழுவதும் சொத்து வைத்திருக்கிறார் பிர்லா. அப்படிப்பட்ட பிர்லாவிற்கு தமிழகத்திலே தேயிலைத் தோட்டம் கொடுக்கப்பட வில்லையா? இந்தத் தோட்டத்தைப் பறிமுதல் செய்யத் தயாரா என்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்? சாதாரண விவசாயத் தொழிலாளர்கள், நிலமற்றவர்கள், வறுமைக்

கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், அரசு புறம்போக்கு நிலத்தில் குடிசைப் போட்டால், அதிகாரிகள் உடனே அவைகளை அகற்று கிறார்கள். ஆனால், வசதிபடைத்தவர்கள், நகரத்திலோ அல்லது கிராமத்திலோ நூற்றுக்கணக்கான ஏக்சர்கள் நிலத்தை ஆட்படுத்தி வைத்திருந்தால், ரெவின்யூ அதிகாரிகள் அவைகளைப் பறிமுதல் செய்யத் தயாராக இருக்கிறார்களா? ஆகவே, நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்தச் சட்டத்தின் மூலம் மேலும் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதற்குத்தான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவார்கள். எனவே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, விபசாரத் தடுப்புப் பாதுகாப்புச் சட்டம். விபசாரம் யார் செய்கிறார்கள்? ஒரு பகுதி வறுமையால் வாடு கின்றவர்கள், வாழக்கூட வாய்ப்பில்லாதவர்கள் செய்கிறார்கள். ........

மாண்புமிகு பேரவைத் தலைவா: மொத்தமாகச் சேர்த்துப் பேசுங்கள். ஒவ்வொன்றாகத் தனித்தனியாகப் பேசினால் நேர மாகும். இன்னும் 7 பில்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பொ. உத்திராபதி: விபச்சாரத்திலே பல்வேறு விபச்சாரங்கள் இருக்கின்றன. மாடிவீட்டிலே நடக்கிற விபச்சாரம், வறுமையிலே வாடக் கூடியவர்கள் பசியால் செய்கிற விபச்சாரம் இருக்கிறது. உண்மையிலேயே இந்தச் சட்டத்தைக் காவல் துறையின் கையில் ஒப்படைத்தால் தனக்குப் பிடிக்காதவர்கள்மீது ஏதோ ஒரு காரணத்தால் மறுக்கக்கூடிய குடும்பப் பெண்கள்மீது பயன்படுத்து வார்கள் காவல் துறையினர். சில தினங்களுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திலே அய்யம்பேட்டைக்கு அருகாமையிலே ஒரு அரிசனப் பெண்ணை வசதி படைத்தவர் ஒருவர் கரும்புக் காட்டிலே கற்பழித்தார்; அதுபற்றி காவல் துறையிலே அங்கே ஒருவர் புகார் கொடுத்தும்கூட இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றைக்கு எங்கே கோர்டிலே பார்த்தாலும் விபச்சாரம் செய்கிற பெண்கள் முக்காடு போட்டு நிற்கக்கூடிய நிலைமையைப் பார்க் கிறோம். இப்போதுள்ள சட்டத்தின் மூலமாக விபச்சாரத்தை ஒழிக்கலாம், விபச்சாரம் செய்கிறவர்களை, விபச்சாரத்திற்குப் பயன்படுத்துகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பாராளுமன்றத்திலே தேசிய பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டம் உழைக்கின்ற மக்களின் உரிமைகளை நசுக்குவதற்காக, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்காக டாடா, பிர்லாக்களை ஆதரிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அங்கே இரண்டு கட்சிகளும் ஆதரித்தார்கள். இன்றைக்கு அந்தச் சட்டத்திற்கு ஒத்தாசையாக தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டித்து இதை



எதிர்ப்பதோடு இந்தச் சட்டத்தை சட்டத்துறை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இத்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்ட நேரத்திலேயே இது நம்முடைய அரசியல் சட்டத்திற்கு சரியாக இல்லை என்பதை எழுப்பியிருக்கிறேன். அதற்கான பதிலை அமைச்சர் சொன்னாலும் நான் அதைக் கேட்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது, பத்திரிகைகளிலே படித்துத் தெரிந்து கொண்டேன். இருந்தபோதிலும்கூட இந்தச் சட்டத்தை அமுலாக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கிற நேரத்திலே யாராவது உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கிறபோது அங்கேதான் நியாயம் கிடைக்கும். அந்த ஃபோரத்தை நான் விடப்போவதில்லை.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் பார்க்கிற போது, கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள், குண்டர்கள், விபச்சார விடுதி நடத்துகிறவர்கள், புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள் ஆகியவர்களைத் தடுப்பதற்குத் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தேசிய பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறபோது தமிழ்நாட்டிலே எல்லா பிரஜைகளுக்கும் அது பொருந்துகிற நேரத்திலே தமிழகத்திலே தனியாக இந்தச் சட்டத்தை இயற்றுவது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட சாதாரணக் குற்றங்களைத் தடுப்பதற்கு ஐ.பி.சி. சென்ட்ரல் ஆக்ட், சப்ரஷன் ஆப் இம்மாரல் டிராபிக் ஆக்ட் எல்லாம் இருக்கின்றன. அப்படியிருக்கிறபோது தடுப்புக் காவல் சட்டத்தை உருவாக்கி நீங்கள் அதைத் தடுக்க முயல் கிறீர்கள் என்று சொல்கிறபோது ''It is an open confession of the State Government about its inefficiency to administer acts and to maintain public order in the State'' என்று உங்கள் ஒப்புதல் வாக்கு மூலம் என்ற அடிப்படையிலே தெரிவித்து இருக்கிறீர்கள். எங்களால் இருக்கின்ற சட்டங்களை வைத்து போலீஸ் துறையை வைத்து பப்ளிக் லா அன்ட் ஆர்டரை மெயின்டெயின் பண்ண முடியவில்லை என்று நீங்களே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக் கிறீர்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களைப்பற்றிய வழக்கு களை எடுத்துப் பார்ப்போம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தபோது சாதாரணமாக காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்கு ஜாமீன் போவது வழக்கமில்லை. மற்றக் கட்சிக்காரர்கள் போவார்கள், பெயிலபிள் அஃபன்ஸாக இருந்தது. கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதால் மக்கள் அதிகமாக இறக்கிறார்கள். அதிகமான அளவில் உபாதைகளுக்கு ஆளாகிறார்கள் என்று இந்த அரசு மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக்கியது. அது என்ன ஆயிற்று? முன்பு குடித்துவிட்டு ஒருவன் வந்தால் போலீஸுக்கு 2 ரூபாய் கொடுத்தால் விட்டு

விடுவார்கள். ஆளைக்கொண்டுபோய் காண்பித்தால் ஜாமீனிலே வெளிவரமுடியும் என்ற நிலைமை இருந்தது. இப்போது அப்படி ஜாமீனிலே வெளிவரமுடியாது. இப்படி நீங்கள் சட்டத்தைக் கடுமையாக ஆக்கியதன் விளைவு என்னவென்றால் போலீஸ் காரனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்த நிலைமை போய் 500 ரூபாய் வரையில் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமையை தமிழகத்தில் உருவாக்குவதைத் தவிர குற்றங்கள் குறைந்தனவா என்றால் குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கடைசியாக என்ன செய்தீர்கள்? மதுவிலக்கையே ரத்து செய்துவிட்டீர்கள். மீண்டும் மதுவிலக்கை அமல்படுத்தப் போகிறீர்களா? யார் வேண்டுமானாலும் மது அருந்தலாம் என்ற அருமையான தத்துவத்தை உதிர்த்துவிட்டீர்கள். இதேபோன்ற நிலைமைகளில் போனால் Immoral traffic legalise செய்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதைத் தாழ்மை யோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிக வேடிக்கையான, விநோதமான சட்டத்தை நான் பார்க்கிறேன். 'Prosecutor is becoming Judge'. யார் ஒருவன் குற்றம் சாட்டு கிறானோ அவனே அந்தக் குற்றத்திற்கான தீர்ப்பையும் அளிக்கின்ற நீதிபதியாகவும் ஆகின்ற விந்தையை இந்தச் சட்டத் திலே நான் காண்கிறேன். இவன் குற்றவாளி என்று போலீஸ் அதிகாரி கைது செய்கிறார். ஆனால் கைது செய்யப்பட்டவன் கோர்ட்டுக்குப் போக முடியாது; நீதி கேட்க முடியாது. அது அட்வைசரி போர்டுக்குப் போக வேண்டும். அதில் உள்ள மூன்று பேர்கள் உங்களால் நியமிக்கப்பட்டவர்கள். எனவே, யார் குற்றம் சுமத்துகிறானோ அவனிடத்திலேயே — உங்களால் நியமிக்கப்பட்ட அந்த ஆட்களிடத்திலேயே சென்றால் அங்கே நீதி கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா?

இதுகூடத் தெரியாமல் இந்த அளவிற்கு நாம் செய்கிறோம் என்றால் நிச்சயமாக இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பது மட்டுமல்ல; சாதாரண அடிப்படை நீதிக்கேகூட ஒவ்வாத சட்டம் it is against the fundamental principles of natural justice. It is inhuman law என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் வேடிக்கையான புரவிஷன் ஒன்றைக் கொடுத்திருக் கிறீர்கள். யாராவது குற்றம் செய்து விட்டு if he is absconded அவன் தப்பித்துக் கொண்டு விட்டால் என்ன நடவடிக்கை எடுப்போம் என்று அழகாகச் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவரை நோட்டிஃப செய்து விடுவோம்; அவா எங்களிடம் சரணாகதி அடையாவிட்டால் அவருடைய சொத்து பறிமுதல் செய்யப்படுவதற்கான அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக் கிறோம் என்று சொல்கிறீர்கள். நான் தாழ்மையோடு ஒன்றைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சத்தியவேட்டிலிருந்து ஒருவன் இங்கே வந்து, விபச்சார விடுதிகளை நடத்தி, இலட்சக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்து, சத்தியவேட்டிற்குச்



சென்று அங்கே சொத்துக்களை வாங்கியிருந்தால், அங்கேயுள்ள அவருடைய ப்ராப்பர்டீஸையெல்லாம் பறிமுதல் செய்யச் செல்ல முடியுமா என்பதைப்பற்றிச் சிந்திக்கும்படியாகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி அவசரம் அவசரமாக, ஓட்டை உடைசல்கள் நிறைந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இது அரசியலமைப்புக்கு விரோதமானது; நீதிக்குப் புறம்பானது; நேர்மைக்கும், நியாயத் திற்கும், ஜனநாயகத்திற்கும் புறம்பானது. எனவே, இந்தச் சட்டம் தேவையா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பாதுகாப்புச் சட்டம் என்று இந்தச் சட்டத்தை வருணித்து, இந்தச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்து அமர்கிறேன்

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவரவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப்பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டாகள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுப்பதற்கு வகை செய்யும் இந்தச் சட்டத்தை ஜனதா கட்சி வன்மையாக எதிர்க்கிறது. ஏற்கனவே, இந்த நாட்டு மக்களைக் கொடுமைப் படுத்திக் கொண்டிருக்கின்ற தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் மறுபதிப்பாகத்தான் நாங்கள் இதைப் பார்க்கிறோம்.

உண்மையிலேயே இத்தகைய குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால் நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கின்ற தண்டனை களுக்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன.

குறிப்பாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் போன்றவர்களை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும்; அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும்; அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தர முடியும். ஏற்கனவே உள்ள சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் முதன் முதலாகக் குற்றம் செய்பவர்களுக்கு 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையில் சிறைத் தண்டனை கொடுப்பதற்கு அந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. மறுபடியும் இதே குற்றத்தை அவர் செய்தால் அதிகப்படியாகத் தண்டனை தண்டனை வழங்கவும் வகையிருக்கிறது. இத்தகைய சட்டங்கள் இருக்கின்றபொழுது நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டங்கள் தேவையில்லை என்பதால் நாங்கள் இதை எதிர்க்கிறோம்.

மருந்துப் பொருட்கள் சட்டத்தின்கீழ், குற்றம் இழைப்பவர்களுக்கு இதே சட்டத்தின் கீழ் Indian Drugs and Cosmetics Act என்ற அடிப்படையிலேயும், Dangerous Act என்ற அடிப்படையிலேயும் தண்டிக்க சட்ட விதிகள் இருக்கின்றன. எனவே, அதைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குண்டர்களைத் தண்டிப்பதற்கு Indian Penal Code எத்தனையோ ஷரத்துக்கள் இருக்கின்றன. அதன் துணை கொண்டு நீதிமன்றத்திற்கு எத்தனையோ குண்டர்கள் எடுத்துச் செல்லப் படுகிறார்கள்.

வழக்குகள் போடப்படுகின்றன. அவர்கள் தண்டனை பெற்று வருகிறார்கள். எனவே இந்த இன குற்றவாளிகளைப் பொறுத்த அளவிலே இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணர்கிறோம். விபச்சார குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதற்கு The Suppression of Immoral Traffic in Women and Girl's Act 1956. என்ற சட்டம் ஏற்கனவே இருக்கின்றது. அந்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற மூன்றாவது சட்டப் பிரிவின் கீழ் அந்தக் குற்றம் செய்பவர்களை தண்டிப்பவர்களுக்கும், அதிலே குறைந்தபட்சம் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை, முதல் குற்றத்திற்குத் தண்டனை வாங்கித் தர வழி இருக்கிறது. மீண்டும் இதே குற்றங்களை செய்வதாக இருந்தாலும் அதிகப் படியான தண்டனை வழங்குவதற்கும் சட்டம் வகை செய்கிறது. எனவே இந்த வகை குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணருகிறோம்,

அதேபோல, பிறருடைய நிலத்திலே ஆக்கிரமிப்புச் செய் பவர்களைத் தடை செய்வதற்காக, இண்டியன் பீனல் கோடிலே ஏற்கனவே பல ஷரத்துக்கள் இருக்கின்றன. எனவே இத்தகைய சட்டங்கள் அனைத்தும் இருந்தபோதிலும் புதியதாக இந்தச் சட்டம் கொண்டு வரும் உள்நோக்கம் வழக்குத் தொடரப் பட்டவர்கள் அல்லது கைது செய்யப்பட்டுக் கொண்டு இருக் கின்றவர்கள், நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படாமலேயே அவர்களைக் கைது செய்து காராக்கிரகத்திலே அடைப்பதற்கு அரசாங்கத்திற்குத் துணை நிற்கின்ற ஒரு சட்டமாக இது அமையும். எனவே இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்வதற் கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அஞ்சுகிறோம். குறிப்பாக இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எதிர்வழக்கு ஆடுவதற்காக வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற ஒரு நண்பர் குறிப்பிட்டதைப் போல, இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுள் கின்றவர்கள் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்தவராக தன்னுடைய டிபன்சைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளுகின்ற ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்கள் என்று அரசு எதிர்பார்ப்பது தவறு என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதேபோல



இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தாங்கள் தவறான முறையில் கைது செய்யப்பட்டோம் என்று சுட்டிக் காட்டுவதற்கோ அல்லது அதிகார வர்க்கம் தவறாக செயல் பட்டுவிட்டது என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கோ வகை கிடையாது. இந்த சட்டத்தின் கீழ் செயலாற்றுகின்றவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இங்கே தரப்பட்டிருக்கின்ற 16 ஆவது ஷரத்து, அரசு அதிகாரிகள் இந்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்தால்கூட அவர்களுக்கு எதிராக சிவில் வழக்கோ அல்லது கிரிமினல் வழக்கோ போடுவதற்கு இடம் இல்லாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படுகிறது. அரசாங்கத்தைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள் சட்டம், சட்டப்புத்தகத்தில் வருமே தவிர, நிச்சயமாக அது துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது. அதிகமாகப் பயன்படுத்துகின்ற சட்டம் கொண்டு வரப்படவில்லை என்று விளக்கம் தரப்படும். இதே விளக்கம்தான் திருமதி இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது 'மிசா' என்ற சட்டத்தைப் பற்றி ஆளுகின்ற வர்க்கம் விளக்கம் தந்தது. இப்போது அமலில் இருக்கின்ற தேசியப் பாதுகாப்புச் சட்டம் உருவாகி நடைமுறையில் இருக்கிறபோதும் இதே விளக்கம்தான் சொல்லப்பட்டது. அந்தச் சட்டம் தாறுமாறாகப் பயன் படுத்தப்பட மாட்டாது. அரசு இதை அரசியல் காரணங்களுக்காக நிச்சயமாகப் பயன்படுத்தாது என்று உத்தரவாதம் தந்திருந்த போதும் கூட தேசியப் பாதுகாப்புச் சட்டம் அரசியல் காரணங்களுக்காக அரசியல் தலைவர்களை ஒடுக்குவதற் காக இன்றையதினம் பயன்பட்டு வருகிறது என்பது பல எடுத்துக் காட்டுகளின் மூலம் நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று பேசினார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்பதை தாங்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்வாதிகாரம், ஜனநாயகம் எல்லாம் சாதாரணமாக சட்டமன்றத்திலே பேசப்பட்டு வருவது தான். அவர் சர்வாதிகாரி என்று சொன்னால் அவர்கள் ஆண்ட ஆட்சியை நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) எல்லாவற்றையும் குறித்துதான் இங்கே பேசுகிறார்கள். ஏற்கனவே பல முறை பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இது புதிதல்ல.

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவர் அவர்களே, எமர்ஜென்சி ஆட்சிக் காலத்தில் சில சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப் பட்டன என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அதேபோன்ற தவறுகள் இந்தச் சட்டத்தின் கீழ் இருப்பதற்கான வாய்ப்பு

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

அவர்கள் வீட்டு வரி பற்றி அறிவிக்கும்போது நாங்கள் பாராட்டினோம். எதையெல்லாம் பாராட்ட வேண்டுமோ அதை நாங்கள் பாராட்டத்தான் செய்கிறோம்.

அதேபோல் குண்டர் ஆக்டில் போடுவதுபற்றிச் சொல்லுகிறீர்கள். என்ன செய்கிறீர்கள் நீங்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு எஸ். பி. சிபாரிசு செய்ய வேண்டும். அதன் பிறகு கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை எல்லாம் எடுக்கவிடுகிறீர்களா? அதிகாரம் படைத்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். முதலில் இங்கே எஸ்.பி.-யை மிரட்டுகிறார்கள். அதன் பிறகு கலெக்டரிடம் போய் ரெப்பரசென்ட் செய்கிறார்கள். என்ன செய்கிறீர்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு யாரை யார் விடுகிறார்கள்? வாஸ்தவத்திலே குண்டர் ஆக்ட்டில் போடுகிறவர்களை போட விடுவது இல்லை. யாராவது அப்பாவிகளைப் பிடித்துப் போடுவதுபோல் எங்களுக்கு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எஸ்.பி. அங்கே பயமுறுத்தப்படுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லப்படுகிறது. இதை எல்லாம் பார்க்கும்போது இது சட்டமாகத்தான் இருக்குமே தவிர நடைமுறையில் இது சரியாக நடக்காது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * பொறுப்பேற்காத முறையிலே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரியவர் இப்படி பேசுவது உகந்தது அல்ல. எந்த மாவட்ட ஆட்சித் தலைவர், எந்த எஸ்.பி. யாரை தடுப்புக் காவல் சட்டத்தில் போட வற்புறுத்தப் பட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். நான் *பொறுப்பேற்காதவர் என்று சொன்னதற்காக வருத்தப்படக்கூடாது. ஆனால் முக்கியமாக இதுபோன்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரைக்கும், அரசைப் பொறுத்த வரைக்கும் எந்த ஒரு பிரச்சினையிலும் அரசாங்கம் தலையிடுவது கிடையாது. தடுப்புக் காவல் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறவர்கள் கிட்டத்தட்ட 60-க்கும் மேற்பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



1987 நவம்பர் 18]

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்வது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அதற்கு அவர் வருத்தப்படுகிறேன் என்று சொல்லிவிட்டாரே, அதோடு முடிந்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்பேற்காமல் என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொறுப்பேற்காத என்று அமைச்சரவர்களே திருத்திவிட்டார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில் குண்டர் ஆக்டில் போடச் சொல்லி, பல பேருக்கு எஸ்.பி. பரிந்துரை செய்திருக்கிறார்கள். உங்கள் ரிக்கார்டுகளை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இதைத்தான் பொறுப்பேற்காத என்று வகையில் சொன்னேன். அரசைப் பொறுத்த வரைக்கும் தடுப்புக் காவல் சட்டத்தில் யாரையும், இவர்களைக் கைது செய்யுங்கள் அல்லது வேண்டாம் என்று சொல்லாமல் இதுகாறும் பாரபட்சமற்ற முறையில் செயல்பட்டு வருகிறது.

1982-லே 144 பேர், 1983-லே 249 பேர், 1984-லே 550 பேர், 1985-ல் 476 பேர், 1986-ல் 458 பேர். தற்போது 1987-லே 421 பேர். இந்த 421 பேரிலே கிட்டத்தட்ட 60 பேர்கள் அண்ணா தி.மு.க.வைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது பொறுப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர் அரசினுடைய அணுகுமுறையை மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அரசின் மீது மட்டும் குறை சொல்லவில்லை. அதிகாரம் படைத்தவர்களை சொல்கிறேன். நான் சொல்ல விரும்புவது, அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு

எஸ்.பி. சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் குண்டர்கள் ஆக்டில் போடப்படவில்லை. அது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசை மட்டும் தப்பு என்று நான் சொல்லவில்லை. அதிகாரம் படைத்தவர்களைப் பற்றி சொல்கிறேன். அதிகாரம் படைத்தவர்களின் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கிறது. அரசை மட்டும் குறை சொல்ல வில்லை. அரசை மட்டும் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தடுப்புக் காவல் சட்டத்திலே ஒருவரைக் கைது செய்யவேண்டுமென்றால், ஐ.பி.சி. கிரிமினல் புரொசீஜர் கோடையொட்டி கைது செய்வது என்பது முடியாது. காரணம், மாண்புமிகு உறுப்பினருக்கு அதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Thert should be disturbance to public tranquility. பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அளவிற்கு தடயங்களைப் பெறுகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்று, தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் ஒருவரைக் கைது செய்ய முடியும். அப்படி அந்தத் தடயங்களோடு பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் இருந்தால், அப்படி ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அல்லது மாவட்டக் காவல் அதிகாரியிடம் சொல்லி நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதை எழுத்து மூலமாகத் தரவும். கட்டாயம் அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** அதைப்பற்றித்தான் நான் சொன்னேன். சென்ற வருடமே காமராசர் மாவட்டத்தில் 5 பேரைத் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் போடும்படி சிபாரிசு செய்திருக்கிறார்கள். மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் முறைப்படிதான் செய்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, குறைபாடுகள், குற்றங்கள் எல்லாம் இருந்துதான் செய்திருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதைத்தான் சொன்னேன். ஐ.பி.சி. கிரிமினல் புரோசீஜர் கோட் குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்ட வழக்குகளையும் தடுப்புக் காவல் சட்டத்தில் போடுங்கள் என்று பல இடங்களில் மாவட்ட ஆட்சித்





தலைவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தடுப்புக் காவல் சட்டத்தின், குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்ட வழக்குகளை, தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவர் விளக்கம் கேட்டிருப்பார். அதனால்தான் தாமதம் இருக்கும். அந்தத் தகவல்களைத் தாருங்கள். நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விளக்கம் கேட்கிறோம். நீங்கள் சொல்வது சரியாக இருந்தால் நடவடிக்கை எடுப்போம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. உரிய நடவடிக்கை எடுப்பதற்குச் சான்றுகளைத் தருகிறேன்.

சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கும், விளக்கம் தந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். திருத்தத்திற்கான நோக்கம் காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகை தொகையின்றி பல விலங்குகளை, அதிலும் குறிப்பாக யானைகளைச் சாகடிப்பதும் இந்த மாநிலத்தில் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு கள்ளத்தனமாக வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்குகளைச் சாகடிப்பதும், நபர்களுக்கும், சொத்துக்கும் மற்றும் அப்பகுதியில் உயிரின வாழ்க்கைச் சூழல் முறைக்கும் ஆபத்தை விளைவிப்பதோடு, பொது அமைதியையும் குலைக்கின்றன என்கின்ற வகையில் இந்தச் சட்டத்தை திருத்தி, குண்டர் ஆக்டில் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த நோக்கக் காரண விளக்க உரையிலே அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள மலைகளிலேயுள்ள மரங்கள் அழிக்கப்படுகின்றன. நமது தமிழகத்தில் இருக்கின்ற மலைகளிலேயுள்ள வனவிலங்குகள் இல்லாமல் போய்விட்டன. அதுமட்டுமல்ல. நான் 1979 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக் குழுவில் பல்வேறு மலைகளைச் சுற்றிப் பார்த்தேன். அப்போது முது

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 18

மலைக் காட்டில் யானைகள்தான் நான்கு, நான்கு பேர்களை ஏற்றி, அந்த மலைக்குள்ளே கொண்டு போயிற்று. அந்த அளவிற்கு எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மரங்கள். யானையே உள்ளே நுழைந்து போக முடியாது. மலையிலே ஏறி அந்த யானை கீழே இறங்குகின்றபோது கண்கொள்ளாக் காட்சிகளாகப் பார்த்து வந்தோம். அவ்வளவு யானைகளும், மிருகங்களும், மரங்களும் இருந்தன. ஆனால் அதே காட்டிற்கு 1987-ஆம் ஆண்டு மதிப்பீட்டு குழுவில் நாங்கள் சென்று பார்த்தோம். ஒரு மரம் கூட இல்லை. வன விலங்குகள் மற்றும் யானைகளைப்பற்றிக் கேட்டோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக அலைந்து கொண்டிருந்தன. அந்த அதிகாரியைப் பார்த்து கேட்டபோது சொன்னார்கள், அந்தக் காட்டில் உள்ள யானைகள் எல்லாம் கேரளாவிற்குச் சென்று விட்டன என்று சொன்னார்கள். இது நான் கண்கூடாகப் பார்த்த காட்சி. அப்போது நான் அங்கு பார்த்ததை, இப்போது காரண நோக்க விளக்கங்களில் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை வரவேற்போம்.

(பிற்பகல் 1-50)

குண்டர்கள் ஆக்ட்டில் மட்டும் அல்ல. இப்படி வன இலாக்காவில் இருக்கக்கூடிய மரங்களை வெட்டக்கூடியவர்கள், இந்தக் காடுகளில் இருக்கக்கூடிய மிருகங்கள் எல்லாம் தங்குவதற்குக்கூட வசதி இல்லாமல் பிற மாநிலங்களுக்கு ஓடக்கூடிய அபாயத்தை உருவாக்கக்கூடியவர்களுக்கு, அவர்களைக் கண்டுபிடித்து விட்டால் உண்மையிலேயே அவர்களுக்கு இந்தத் தண்டனை போதாது. ஒருவன் கொலை செய்துவிட்டால் தூக்கு தண்டனை கிடைக்கின்றதே, அப்படிப்பட்ட தூக்கு தண்டனையைக்கூட அரசாங்கம் கொண்டு வந்தால் நான் ஆதரிப்பேன். காரணம் இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள அத்தனை மரங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. மலையில் உள்ள மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டதால் மழை பொய்த்துவிட்டது. மழை பொய்த்துவிட்டதால் இன்றைக்குத் தமிழக மக்கள் வறட்சிக்கு ஆட்பட்டு இருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே இந்த குண்டர்கள் ஆக்டின்கீழ் இதுவரையிலும் மரம் திருடியவர்கள் எத்தனை பேர்கள் அகப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது? இதிலே எத்தனை



1987 நவம்பர் 18] [திரு. பொ. உத்திராபதி]

அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலே இதுவரையிலும் நாம் எப்படி போய் இருந்தாலும் எதிர்காலத்தில்—இதைத் தீவிரமாக விசாரணை செய்ய வேண்டும். எங்களுடைய இளைஞர் மன்றம் கூட சென்ற மாதம் 10,000 பேர்கள் ஒரே கோரிக்கையை வைத்து நிதியமைச்சரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே இந்த வன இலாக்காவைப் பாதுகாப்பதற்கும், வன இலாக்காவில் அழிக்கப்பட்ட மரங்களை மீண்டும் உற்பத்தி செய்வதற்கும், அந்த மரங்கள் அழிக்கப்பட்டதற்குப் பிறகு வேறு மாநிலங்களுக்குப்போன மிருகங்களை கொண்டுவருவதற்கும் அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளச் சாராயத்தைப் பற்றி இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. 1982-லே சட்டம் கொண்டு வந்தோம். நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்ததற்குப் பிறகு ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். தமிழகத்தில் தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். சர்க்காருக்கு 250 கோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்பட்டாலும், அந்தச் சாராயத்தையும், கள்ளுக் கடைகளையும் ஒழிக்க வேண்டும் என்று ஜனவரி மாதம் 1-ந் தேதி அறிவிக்கப்பட்டது. அந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு தனி போலீஸ் படை. ஒரு ஐ.ஜி., அவருக்குக் கீழே அதிகாரிகள் என்று ஒவ்வொரு தாலுக்கா நகரங்களிலும் காவல்துறை மாதிரி இன்னொரு காவல்துறை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு மக்களுடைய வரிப் பணம் கோடிக்கணக்கான ரூபாயை ஒரு பக்கம் செலவழிக்கின்றோம். ஆனால் கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறதா? இரண்டு மூன்று முறை சொன்னார்கள். இங்கே ஒரு லட்சம் லிட்டர் பிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு லட்சம் லிட்டர் அழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர உண்மை அதுவல்ல. நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர். சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில் நானே போய்ச் சொன்னேன். என்னுடைய வீட்டுக்குப் பின்னாலே கொண்டு போனார்கள். இன்னின்ன இடத்தில் இருக்கிறது என்று சொன்னேன். இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது என்ன நிலைமை இருக்கிறது என்று சொன்னால் கள்ளச் சாராயத்தைப் பற்றி யாராவது சொன்னால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நானே சொன்னேன். ஆனால் இதுவரை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை

அதுவும் இன்றைக்கு கள்ளச் சாராயத்தை ஒழிப்போம் என்று ஒரு சட்டத்தை குண்டர்கள் ஆக்ட்டில் கொண்டு வந்தபோதும் கூட அந்தக் கள்ளச் சாராயம் கரை புரண்டு ஓடுகிறது. சாராய சாம்ராஜ்யமாக மாறி வருகிறது. நான் அமைச்சர் அவர்களிடம் கவலைப்பட்டு, வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். இந்த வன இலாக்காவை அமைத்திருக்கிறோமே, அவர்களுக்கு என்ன வழி செய்துகொண்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கிறார்களா? இல்லை. அவர்கள் ஒரு பக்கம் சொல்லப் போனால்—அமைச்சர்! அவர்கள் குறுக்கிடுவார்கள். நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாயை நாம் கொடுத்தும்கூட அந்தக் கள்ளச் சாராயம் ஒழிவதற்குப் பதிலாக வளர்ந்து கொண்டே வருகிறது. இது இப்படி வளருமேயானால் எதிர்காலத்திலே ஒரு கள்ளச் சாராய ஆட்சி நடக்கிறது என்ற அவப் பெயர் வரும், அது இந்த ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் வருத்தத் தோடு சொல்ல விரும்புகிறேன். இன்றிலிருந்தாவது அந்த ஐ.ஜி. அவர்கள் தலைமையில் உள்ள அமைப்பின் மூலம் உண்மையிலேயே ஒரு வார காலத்தில், இந்த ஆட்சியில் கள்ளச் சாராயத்தை ஓரளவிற்கு ஒழித்திருக்கிறோம் என்ற இந்த பெயர் கிடைக்கக் கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையில்லாமல் வன விலங்குகளை, குறிப்பாக, யானைகளை தனதத்திற்காக சாகடிப்பதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதனாலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொன்னதுபோல், "அரசாங்கமே ஒத்துக்கொண்டது, அதிகமான மரங்கள் வெட்டப் படுகின்றன. யானைகள், மற்ற விலங்குகள் இல்லவே இல்லை" என்று சொல்வது பொருத்தமில்லாதது ஆகும்.

இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்குக் காரணம், ஏற்கனவே 1977-லிருந்து '79, '81, '82, '84 என்று பல்வேறு ஆண்டு களில் பல்வேறு திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருக் கின்றன. அவ்வப்போது விதிகளும் திருத்தப்பட்டு, 'எக்சிக்யூடிவ்



ஆர்டர்ஸ்' என்ற முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 139 இடங்களில் செக்போஸ்ட்கள் இருக்கின்றன. அதுமாத்திரம் அல்லாமல், 'ஷெட்யூல் ஆப் டிம்பர்' என்று ஒரு பட்டியல் போட்டு, அந்தப் பட்டியலில் இருக் கின்ற எந்தெந்த மரங்களைத் திருடுவது கடுமையான குற்றத் திற்கு ஆளாக்கப்படும் என்ற ஒரு பட்டியல் போடப்பட்டு, அந்தப் பட்டியலில் உள்ள மரங்களைத் திருடுபவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தண்டனையைவிட அதிகமாக கொடுக்கப்பட வேண்டும் என்றுகூட போடப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் இதுவரையில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. வனக் குற்றங்கள் மாத்திரம், 1984-85-இல் 38,513 வழக்குகளாகப் போடப்பட்டிருக்கின்றன. 1985-86-இல் வனக் குற்றங்கள் 38,619 வழக்குகளாகச் செய்யப்பட்டு கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. அதைப்போல, 1982 முதல் 1986-87 வரையில் சந்தன மரம் திருடுகிற வழக்குகள் மாத்திரம் 2672 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 5165 பேர் மீது வழக்குகள் போடப்பட்டி ருக்கின்றன. அதில் சம்பந்தப்பட்ட சந்தன மரங்களின் மதிப்பு மாத்திரம் ரூ. 1 கோடியே 67 இலட்சம் ஆகும். ஏற்கெனவே 1974-75 காலத்தில், கம்பவுண்டிங் என்று சின்ன குற்றங்களை வனத்திலே புரிபவர்களிடம் வசூல் பண்ணிய தொகை ரூ. 16 இலட்சம் ஆகும். ஆனால், இன்றையதினம் அது ரூ. 41 இலட்ச மாக அதிகரித்திருக்கிறது.

மரங்கள் வெட்டப்பட்டன என்று சொல்வதை ஒத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு நான் சொல்கிற காரணம், 1974-75-இல் வனத்தின் மூலமாக வந்த வருமானம் ரூ. 9 கோடியே 21 இலட்சம் ஆகும். ஆனால் இன்றையதினம் 1986-87-இல் அரசிற்கு வனத்துறை மூலம் வருகிற வருமானம் ரூ. 30 கோடியே 37 இலட்சம் ஆகும். இப்படி கம்பவுண்டிங் செய்கிறதன் மூலம் வருகிற வருமானம் மற்றும் வனத்துறை மூலம் வருகிற வருமானம் ஆகியவை இரண்டு பங்கு, மூன்று பங்கு அதிகமாக ஆகியிருக் கின்றன. சட்டங்களையும், 1979-ல் ஆக்ட் 45/79 என்று போட்டி ருக்கிறோம். அதே 1979 இல் ஆக்ட் 68 என்ற ஒன்று கொண்டு வந்திருக்கிறோம். பின்னர் 1981 ஆம் ஆண்டு ஆக்ட் 41 என்று கொண்டு வந்திருக்கிறோம். அதுமாத்திரம் அல்லாமல், நமது சி.ஐ.டி. போலீஸ் என்று தனியாக ஒன்று வைத்து அவர்கள் மூலம் 1985-86-இல் 37 சோதனைகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் சர்க்காருக்கு ரூ. 3 இலட்சம் வருமானம் வந்திருக்கிறது. அதைப்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

போல், 1986-87-ல் 71 சோதனைகள் நடத்தப்பட்டு, 28 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. அது சம்பந்தப்பட்ட குற்றங்கள், பாம்புத் தோல், சந்தனம் கைப்பற்றுதல் ஆகியவை ஆகும். நடப்பு ஆண்டில், 1987-இல் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையில் கூட, 35 சோதனைகள் செய்யப்பட்டு, ரூ. 7 இலட்சம் வருமானம் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறது. சர்க்கார், இந்தக் குற்றங்களைத் தடை செய்வதற்கு, கட்டுப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்த ஆயுதங்களின் எண்ணிக்கை 194 ஆகும், 1977-ல் இருந்த ஆயுதங்கள். ஆனால் இன்றையதினம் 297 ஆயுதங்கள் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது போதாது என்று நவீனமயமான ஆயுதங்களைக் கொடுத்து, தேவையான மருந்து களையும் கொடுப்பதற்காக ரூ. 22 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்குவதற்கு முதல்வர் அவரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் போக்கு வரத்து தொடர்பு வெகு வேகமாக நடக்கவேண்டும், அதற்கு இடைவெளி அதிகமாக இருக்கக்கூடாது, குற்றம் புரிந்தவர்கள் என்ற தகவல் கிடைத்தவுடன் குற்றம் புரிந்தவர்களைப் பிடிக்க வேகமான தகவல் தொடர்பு வேண்டும் என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 2-00)

இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத அளவிற்கு நீலகிரி மலையில், 17 இலட்சம் ரூபாயில், இந்தியாவின் பாதுகாப்பு இலாக்காவினுடைய அனுமதியுடன், கம்பித் தொடர்பு இல்லாத, இந்த தகவல் தொடர்பு நிலையம் ஒன்றை அங்கு ஏற்படுத்தி இருக்கிறோம். அதை சேலத்திற்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதுவுமில்லாமல், வன இலாக்காவைக் காப்பாற்றுவதற்கென்று 12 பாரஸ்ட் ப்ரடக்ஷன் ஸ்குவாட்ஸ் இருக்கின்றன. 3 பறக்கும் படைகள் இருக்கின்றன. மூன்று டிடெக்டிவ் ஃபிளையிங் ஸ்குவாட்ஸ் இருக் கின்றன. அதுவுமில்லாமல், அதிரடிப்படைகள் என்ற முறையில், சேலத்தில் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் என்ற அளவில் ஒருவரை தனியாக, எஸ்.பி. டி.எஸ்.பி.-க்களை வைத்து இந்த வனக் குற்றங்களைத் தடுக்கிறோம். இருந்தாலும் வனக் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

ஆண் யானைத் தந்தம்போல் பெண் யானைக்கும் சிறிய தந்தம் இயற்கையிலே இருக்கும். அதன்மீது அயல் நாட்டினர் இப்போது மோகம் கொண்டுள்ளனர். பெரிய யானைத் தந்தங் களைக் கடத்துவது கஷ்டம் என்று இப்போது பெண் யானைத் தந்தத்தை, சிறியதாக இருக்கிறது என்று, அதன்மீது ஒரு மோகம் வந்து, பெண் யானைத் தந்தங்களை இப்போது சில வர்களிலிருந்து, தமிழ்நாட்டில் தென் பகுதிகளிலிருந்து, பம்பாய்க்கு, பாலில் உறையூற்றி, தயிராக்கப்பட்டு அந்தத் தந்தத்தை அதனுள்ளே வைத்து அனுப்புகிறார்கள் என்ற தகவல் கிடைத்து, அதன்பேரிலும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சந்தன மரத்தினுடைய விலை உலகத்திலேயே இதுவரையில் விற்காத அளவிற்கு இப்போது ஒரு டன் 1 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்றிருக்கிறது. உலகத்திலேயே தமிழ்நாட்டிலேதான் அதிகமான சந்தன மரங்கள் இருக்கின்றன. உலகத்திலேயே அதிக மணம் தரக்கூடிய சந்தன மரங்கள் இங்குதான் இருக்கின்றன. உயரமான, பருமனான மரங்களும், அதிக எடையுள்ள மரங்களும் இங்குதான் இருக்கின்றன. ஆகவே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டுவராத நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுடைய வழிகாட்டிக் கொள்கையினால், அறிவுரையினால், குண்டர்கள் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. காரணம், பல்லாயிரக்கணக்கான வழக்குகளைப் போடுகிறோம். இதை எதிர்த்து வழக்கு தொடுக் கிறார்கள். சென்னை உயர்நீதி மன்றத்தில் மாத்திரம், வன இலாக்கா சம்பந்தமாக நாம் போட்ட வழக்குகளை எதிர்த்து போடப்பட்ட ரிட் மனுக்களின் எண்ணிக்கை 555 ஆகும். உச்சநீதி மன்றத்தில் 22 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. 170 வாகனங்கள் குற்றங்களின் அடிப்படையில் பிடிக்கப்பட்டால், மாஜிஸ்டிரேட் கொடுக்கக்கூடாது என்று சட்டத்திலே இருக் கிறதே தவிர, ஹைக்கோர்ட் நீதிபதிகள் மாஜிஸ்டிரேட்டுகள் அல்ல, ஆகவே நாங்கள் இந்தச் சட்டத்தின்கீழ் வரமாட்டோம் என்று சொல்லி அந்தக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட வாகனங் களை, 100-க்கும் மேற்பட்ட வாகனங்களை விடுவித்து விட் டார்கள்.

இந்த வன இலாக்காவினால் எடுக்கப்பட்ட பல்வேறு ஆயிரக் கணக்கான வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் எளிதிலே ஜாமீனில் வந்துவிடுகிறார்கள். ஆகவேதான், இந்த வன இலாக்கா சம்பந்தமான குற்றங்களில், மரங்களை வெட்டினாலும் அல்லது

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 18

அபூர்வமான விலங்குகளை அழித்தாலும், அவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது நல்லது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியதன்மீது இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்படுகிறது. வனத்தைப் பாதுகாப்பதோடு, மக்களுடைய இயற்கைச் சூழ்நிலையை, உயிரினங்களுடைய இயற்கைச் சூழ்நிலையை, 'எக்காலஜி' என்கிறார்களே அதைப் பாதுகாப்பதற்கு இது நன்றாகப் பயன்படும் என்ற முறையிலேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றார்கள். ஆனால் இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவதில் அதிகாரிகள் பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும், அப்பாவிகள் இதிலே மாட்டிக்கொள்ளக் கூடாது என்றும் சொன்னார்கள். இதிலே அரசு மிகவும் கவனமாக இருக்கிறது. மாதத்திற்கு ஒரு முறை, இந்த குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் யார் யார் கைது செய்யப்படுகிறார்கள், மாவட்டவாரியாக யார் யார் கைது செய்யப்படுகிறார்கள் என்ற விவரங்கள் முதல் அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு மாதமும், வழக்குகள் தவறாகப் போடப்படுகிறதா அல்லது அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்களா என்று ஆய்வு நடக்கிறது. அதுவுமல்லாமல், தனியாக ஒரு குழு போட்டு, அந்தக் குழுவும் ஆய்வு செய்து, அப்படித் தெரியாமல் யாராவது அப்பாவிகள் இதிலே கைது செய்யப்பட்டால் அவர்களை, சென்னை உயர்நீதி மன்றம் விடுதலை செய்வதற்கும் வழிவகை இருக்கிறது. இருந்தாலும் நாம் இதில் கவனமாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களோடு நாமும் ஒத்திருக்கிறோம். அந்த முறையில் இந்தச் சட்டம் வரவிருப்பதை நீங்கள் எல்லோரும் ஆதரித்திருப்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வன இலாக்கா சம்பந்தமாகத் தனிப்பட்ட முறையில் ஏதாவது குற்றங்கள் நடந்திருந்தால் அதைப்பற்றி ஸ்பெசிபிக்காகக் குறிப்பிட்டு, குற்றம் சாட்டப்பட்டு கடிதம் கொடுக்கப்பட்டால் அதன் மீது, அதிகாரிகளாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

மலைவாழ் மக்களைப் பலாத்காரமாக அடித்துவிட்டு வேறு ஒருவரை அங்கே குடி வைத்திருக்கிறார்கள், பயிர் செய்துவிடுகிறார்கள் என்றெல்லாம் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவுமல்லாமல், சில செக்போஸ்ட்களை எடுக்கச் சொல்லியும் எடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். அதுபற்றியெல்லாம் நான் வனத்துறை மாநில அதிகாரிகளிடம் கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல்—எந்தக் கட்சிப் பாகுபாடும் இல்லாமல் குண்டர்கள், விபசாரம் சம்பந்தமாக குற்றங்களைச் செய்பவர்கள், நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் போன்ற 5 பிரிவினர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது பல வழக்குகள் போட்டும் பலர் கைது செய்யப்பட்டும்கூட இந்தக் குற்றங்கள் தொடர்ந்து கடுமையாக நடைபெற்று வருவதாலும், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

சத்தியமங்கலம் பகுதியில் யானைத் தந்தம் எடுத்துச் செல்லப்படுகிறது என்று கேள்விப்பட்டு சிதம்பரம் என்ற அந்த நல்ல இளைஞர்—அவர் அங்கே துப்பாக்கியுடன் செல்லவில்லை—அதுதான் துரதிருஷ்டமானது—துப்பாக்கியோடு மட்டுமல்லாமல், சென்றவர் 4 அல்லது 5 பேராகச் சென்றிருக்க வேண்டும்—அப்படிச் செல்லாததால் உயிரிழந்திருக்கிறார். குற்றம் புரிகிறவர்கள் 5 அல்லது 10 பேராக வருகிறார்கள். ஆகவேதான் அவர் அவர்களிடம் மாட்டிக்கொண்டு உயிரிழக்க நேர்ந்தது.

அதைப்போலவே வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்கா அருகில் ஒரு ரேஞ்சர்—திரு. இராஜசேகரன் என்பவர்—இறந்துவிட்டார். அவர் சம்பந்தப்பட்ட 7 பேர்களை இதுவரை போலீசார் பிடித்துவிட்டார்கள். ஆனால் திரு. சிதம்பரம் என்ற அந்த நபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் நம்முடைய மாநில ஐ.ஜி. அவர்களாலும், கருநாடக மாநில ஐ.ஜி. அவர்களாலும் வீரப்பன் என்ற நபர் தேடப்பட்டு வருகிறார். அவர் விரைவில் கண்டு பிடிக்கப்படுவார் என்று போலீஸ் தரப்பில் தகவல் தந்திருக்கி

றார்கள். இதனால்தான் இதுபோன்ற தனிப்பட்ட மனிதர்கள் மாத்திரமல்ல, பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகிற மக்களின் ஆரோக்கியமான உயிரின வாழ்க்கைக்குப் பாதகம் ஏற்படுத்துகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதில் வனத்துறை சம்பந்தமான குற்றங்களைச் செய்பவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்





தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஐ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 54/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமாக 3, 4 சட்ட முன்வடிவுகள் இருப்பதால் அவற்றிற்கெல்லாம் சேர்த்தே கருத்தைச் சொல்லிவிடலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்தைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் சேர்த்தே சொல்லி விடுங்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி அவற்றை எடுத்துக் கொள்ளும்போது தனித் தனியாக பாஸ் செய்து விடலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் பற்றியும் ஒரு பில் இருக்கிறதே அதையும் சேர்த்துச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சேல்ஸ் டேக்ஸ் பொறுத்தவரையில் கருத்தைச் சொல்லுங்கள்.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாயத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாயத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

**(அ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு,



(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு Act 14/82 என்று இயற்றப்பட்ட இந்த கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் என்ற இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து இப்போது சினிமா துறைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சீரமைப்பதற்காக, இப்போது திருட்டு வி.சி.டி. வைத்திருப்பவர்களையும் குண்டர் சட்டத்திலே போடுவதற்கான ஒரு அவசரச் சட்டம் ஏற்கெனவே அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வந்து, அதையே இப்போது சட்டமாக்குகிற இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

ஏற்கெனவே கள்ளச் சாராயம், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர் சட்டம், விபச்சாரத் தொழில் குற்றம், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை இயற்றியும்கூட பல இடங்களிலே அதுபோன்ற தொழில்கள் இன்னமும் நடந்து, இன்னமும்கூட குண்டர் சட்டத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்தாத காரணத்தினாலே-ஒரு சில இடங்களில் மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள்- சில நேரங்களிலே காவல் துறைக்கே கூட இந்த குண்டர் சட்டம் போடுவது என்று சொன்னால் Goondas Act போடுவதற்கு அந்த papers-ஐ ready செய்வதற்கே பணம் நிறைய செலவாகிறது. அந்தப் பணத்தை அரசு சரியாக உடனுக்குடன் கொடுக்காத காரணத்தினாலே சில Inspector-கள் அந்த paper-க்கு செலவாகிற பணத்தைக்கூட நாங்கள் முதலீடு செய்வதற்கு சிரமமாக இருக்கிறது, குண்டர் சட்டம் என்று வைத்துவிட்டால் அதற்கு ground case create செய்து, பிறகு நாங்கள் இதை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்குள் படாதபாடு படவேண்டும் என்று இருக்கக்கூடிய ஒரு

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [2004 நவம்பர் 18

நிலையை ஆய்வாளர்கள் ஒரு குறையாக சொல்லி அதில் கொஞ்சம் அமுக்கமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம் Goondas Act-ஐ prepare செய்வதற்கு அந்த papers மற்ற வகையிலெல்லாம் எந்த அளவிற்குச் செலவினங்கள் தேவைப்படுகிறதோ அதைக் கணக்கீடு செய்து அவர்களுக்கு முழுமையான பணத்தை உடனுக்குடன் வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்தால், இந்தக் காவல் துறை ஆய்வாளர்கள் இதிலே கொஞ்சம் சுணக்கம் காட்டாமல் குண்டர் சட்டத்தை அவர்கள் உடனடியாக கையில் எடுப்பதற்குத் தயார் ஆவார்கள் என்கிற கருத்தை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வழக்கறிஞர் தொழிலில் இப்பொழுது நான் இருக்கிற காரணத்தினாலே பொதுவாக குண்டர் சட்டத்தை அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னாலே அவர்கள் மூக்கால் அழுதுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தனை சட்டத்தை நாம் கொண்டுவந்தாலும்கூட, இன்னும் சில துறைகளிலே பல நிகழ்வுகள் இருந்துகொண்டிருக்கின்றன. நம்மால் முழுமையாக அடக்க முடியவில்லை. ஆனால், இப்பொழுது திருட்டு வி.சி.டி. என்று சொன்னவுடன் அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து பார்த்தால், குண்டர் சட்டம் பாய்ந்துவிடுமோ என்று சிலபேர் இப்பொழுது இந்த சி.டி.-யே கிடைக்காமல் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை தமிழகத்திற்கு வந்திருக்கிறது என்று சொன்னால் அது ஒரு வெற்றிதான். பொதுவாக, நீங்கள் திருட்டு வி.சி.டி. கடை, அதேபோல் கேபிள் டி.வி. மூலம் காட்டப்படுவதை வேண்டுமானால் தடுத்து நிறுத்திவிடலாம். ஆனால், சில நேரங்களிலே இதே திருட்டு வி.சி.டி. பொதுவாக வெளிநாட்டிற்குச் சென்று, அங்கே போட்டு, பிறகு download செய்து, இங்கே இந்த obscene காட்சிகள் எல்லாம் வரக்கூடிய படங்களையெல்லாம்கூட, நம்முடைய தமிழகத்திலே சில இளைய சமுதாயங்கள் Browsing Centres போன்றவற்றிற்கெல்லாம் சென்று இதையே கண்டுகளித்து இன்று சீரழிந்து கொண்டிருப்பதை நாம் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்தத் துறையும் பொதுவாக, இது போன்ற obscene காட்சிகளை, Browsing Centre-லோ அல்லது வெளிநாடுகளிலேயிருந்து download செய்து, இங்கே பார்க்கக்கூடிய ஒரு சூழல் இருப்பதை அறிந்து எப்படி நாம் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்துகூட, அப்படிச் சீரழியக்கூடிய நிலையை உருவாக்கிக்கொண்டிருப்பவர்களையும் தண்டிப்பதற்கு இந்தச்



2004 நவம்பர் 18] [திரு. சி. ஞானசேகரன்]

சட்டத்திலே ஏதாவது இடம் இல்லாமல் இருந்தால், புதிதாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்தத் திருட்டு வி.சி.டி. போன்றவை எல்லாம் நகரப் பகுதிகளில்தான் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் இல்லை. ஆனால், நகரப் பகுதிகளிலே சில அதிகாரிகளேகூட திருட்டு வி.சி.டி.-களை வாங்கிப் பார்க்கக்கூடிய சூழல் வருகிறபோது அவர்களால் அந்தக் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, அதிகாரிகள் யாராக இருந்தாலும்கூட இப்படிப்பட்ட திருட்டு வி.சி.டி.-கள் ஓ.சி.-யிலே கிடைக்கின்றன என்பதற்காக, அதை வாங்கி பார்க்காத ஒரு நிலையை அவர்கள் எடுத்தால்தான் இவர்களை முழுமையாக அடக்க முடியும். இல்லையென்று சொன்னால், அங்கொன்றும், இங்கொன்றுமாகக்கூட இங்கே திருட்டு வி.சி.டி.கள் கிடைத்து மீண்டும் சினிமா பழைய பாணிக்கே சென்றுவிடக்கூடிய ஒரு சூழல் உருவாகும். ஆகவே, நீங்கள் இதைக் கொஞ்சம் கடுமையாக்க வேண்டும்.

இப்பொழுது குண்டர் சட்டம் என்று சொன்னவுடன் ஓரளவிற்கு வெற்றி கிட்டியிருக்கிறது. இருந்தாலும் பழைய குருடி, கதவைத் திறடி என்ற கதையாக கொஞ்சம் நாள் ஆனவுடன் இது அப்படியே மறைந்துபோய் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக தலைகாட்ட ஆரம்பிக்கும். அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து ஏதாவது இதிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா? எந்தெந்த மாவட்டங்களில் அதிகமான வழக்குகள் இதில் வந்திருக்கின்றன? இதிலே இந்த 1 1/2, 2 மாத காலகட்டத்திற்குள் ஏதாவது குண்டர் சட்டத்திற்குரிய ground case உருவாக்கப்பட்டிருக்கிறதா? யார் மீதாவது குண்டர் சட்டம் போடப்பட்டிருக்கிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டும என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.

•**திரு. ராதாரவி:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பணிவான வணக்கங்கள்

"உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும், தாழ்ந்தாலும், தலை வணங்காமல் நீ வாழலாம்"

என்ற புரட்சித் தலைவரின் பாடலுக்கேற்ப இன்று உங்களையும் அறிந்துகொண்டு, உங்களை அறியாமல் இருந்த பலரை உங்களை அறியச்

செய்து தலைநிமிர்ந்து ஆட்சி செய்யும் எங்கள் தாயே! அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் அறிவு, அம்மா என்றால் கல்வி, அம்மா என்றால் நீர், அம்மா என்றால் நெருப்பு, அம்மா என்றால் காற்று, அம்மா என்றால் ஆகாயம், அம்மாவே ஐந்து சக்தி, அவரே எங்கள் தெய்வம். அந்தத் தெய்வத்தின் பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 12-10

அம்மா, நான் ஏற்கெனவே பேசும்போது, எங்கள் குடும்பம் ரத்தக் கண்ணீர் வடித்த குடும்பம் என்று சொன்னேன். அது நான் மட்டுமல்ல. எங்கள் கலைத் துறைக் குடும்பமே ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருந்தது, ஒரு காலகட்டத்தில். ஆனால், இப்போது இந்தத் திருட்டு வி.சி.டி.யை ஒழித்ததால் இன்றைக்குத் திரை உலக மக்களே ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்ணில் இருந்து வந்தது உண்மையான கண்ணீர். ஒற்றுமையாக இருக்கும் அந்தக் காக்காய்க் கூட்டம் வடித்தது உண்மையான கண்ணீர். அதைத்தான் 8 ஆம் தேதி நாம் அனைவரும் பார்த்தோம். Visual Compact Disc, திருட்டு வி.சி.டி. கும்பலை நீங்கள் ஒழித்தீர்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள். 1982 ஆம் ஆண்டு தமிழநாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல், இது தமிழ்நாடு சட்டம் 14/1982. ஆனால், இந்தத் திருட்டு வி.சி.டி-காரர்களை நீங்கள் இதிலே சேர்த்தீர்கள் பாருங்கள்—அவர்கள் யாருக்கு equal என்றால், விபச்சாரம் செய்பவர்களுக்கும், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இவர்கள்தான் equal என்று சேர்த்தீர்கள் பாருங்கள், அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

மேலும் இந்தச் சட்டத்தில் சொல்லப்படுவது என்னவென்றால் "Video Pirate means a person, who commits or attempts to commit or abets the commission of offences of infringement of copyright in relation to a cinematograph film or a record embodying any part of sound track associated with the film, punishable under the Copyright Act, 1957." அதாவது, அந்த abetment கொண்டுவந்தீர்கள் பாருங்கள், அதுதான் பெருமைக்குரிய விஷயம். ஏனென்றால், அதில் ஈடுபட்டாலே அல்லது attempt செய்தாலே என்று இல்லாமல் abetment-உடந்தையாக இருந்தால்



என்றால்தான் முதலாளிகள் எல்லாம் இதிலே கைதாவார்கள் என்று ஒரு அற்புதமான சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல அம்மா, இதுவரையில் டி.வி.யிலே எல்லாம் பெரிய பெரிய படங்கள், Trailer-ஆக 100 நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது நீங்கள் திருட்டு வி.சி.டி. சட்டத்தைக் கொண்டுவந்ததால், இனிமேல் தியேட்டரிலே 100 நாட்கள் ஓடப்போவது என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, 1996 வரை, தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல; தமிழ்த் திரை உலகுக்கே பொற்காலம். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல அம்மா, ஒட்டுமொத்த திரை உலகத்தின் கருத்து. ஏனென்றால் அப்போது இருந்த மொத்தத் திரை அரங்குகள் எவ்வளவு என்றால் Permanent, Semi-permanent, அதாவது நிரந்தர, தற்காலிக—இவற்றின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 2850. ஆனால், இப்போது எவ்வளவு என்றால் 1,931. ஏறக்குறைய 920 திரை அரங்குகள் எல்லாம், கல்யாண மண்டபங்களாக ஆகிவிட்டன. பாதி, அரிசி Godown களாக ஆகிவிட்டன.

அதுமட்டுமல்லாமல், 1996 ஆம் ஆண்டு வரை ரிலீஸ் ஆன படங்கள் வருடம் ஒன்றுக்கு சுமார் 110 முதல் 150 வரை. ஆனால், இப்போது பெரிய படங்கள் 50, சிறிய படங்கள் 60-70. ஆனால், 1996-க்குப் பிறகு 50 முதல் 60 வரை படங்கள்தான் ரிலீஸ் ஆயின. 1996-க்குப் பிறகுதான் வீடியோ கேசட், கேபிள் டி.வி. ஆதிக்கம் வளர்ந்தது. சினிமா உலகின் அழிவும் ஆரம்பித்தது. அது எந்த அளவுக்கு வளர்ந்தது என்றால், திருட்டு வி.சி.டி. என்றால்—பஸ்ஸிலே நிம்மதியாகப் போய் தூங்கலாம் என்று பார்த்தால் அப்போது போட்டுவிடுகிறார்கள். என்ன என்று பார்த்தால், வீடியோ கோச் என்று போட்டு, பாடல் அல்லது படத்தைப் போட்டுவிடுகிறார்கள். பார்த்தால் நாம் நடித்த படத்தையே போட்டுவிடுகிறார்கள். அது முழுமையாக இருந்தாலும் பரவாயில்லை interval வரை திருடி விற்றிருக்கிறார்கள். இதிலே என்னவென்றால், வீட்டுக்கு வீடு வி.சி.டி., விறகுத் தொட்டியில் வி.சி.டி., மளிகைக் கடையில் வி.சி.டி. இன்னும் கொஞ்சம் விட்டால், திருட்டு வி.சி.டி. நடைபாதை வியாபாரிகள் சங்கம், சிறு முதலீட்டு திருட்டு வி.சி.டி. வியாபாரிகள் சங்கம், பெருமுதலீட்டு திருட்டு வி.சி.டி. வியாபாரிகள் சங்கம் என்று இப்படியெல்லாம் வந்திருக்க வேண்டிய கால கட்டங்களில் நல்லவேளை நீங்கள் வந்தீர்கள், இதையெல்லாம் ஒழித்துக் கட்டினீர்கள். ஆனால், அந்தக் காலத்திலேயே, அப்போதே நடிகர் கே. ராஜன் 1997-லே பல

போராட்டங்களைச் செய்தார்கள். கேஸ் போட்டார்கள். அதிலே அண்ணா நகரைச் சேர்ந்த ஒரு நபரும், கே.கே. நகரைச் சேர்ந்த ஒரு நபரும் கேஸ் போட்டு, சாட்சியாகவும் இருந்தார் இந்த நடிகர் கே. ராஜன் அவர்கள்.

*பிற்பகல் 12-15*

அப்போது என்னவென்றால் திருட்டு வி.சி.டி. சட்டம் வந்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த ஆசையிலே இவரும் கேஸ் எல்லாம் போட்டு இவரே சாட்சியாகவும் இருந்தார். அப்போதுதான் நீதிபதி ஐயா திரு. பத்மனாபன் அவர்கள் இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கும்போது சொன்னார்கள், இந்தச் சட்டமே இன்னும் வரவில்லையே அப்பா; அப்புறம் இவர்களை நான் எந்தச் சட்டத்திலே பிடிப்பது என்று விட்டுவிட்டார்கள் அம்மா. அப்புறம்தான் தெரிந்தது ஓகோ இது கண் துடைப்புபோல இருக்கிறது; அது உண்மையாக எங்களைச் சாந்தப்படுத்துவதற்காக அல்ல. ஆனால், அந்தச் சட்டம் உண்மையிலேயே வருவது உங்களுடைய ஆட்சியிலே மட்டும்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலேதான் அம்மா நான் இதைச் சொல்கிறேன்.

இதற்கப்புறமாக இந்தக் கலைத் துறையைச் சார்ந்தவர்கள் எல்லோரும் 1996-க்குப் பிறகு சத்தம் போட்டார்கள், போராடினார்கள், எல்லாம் செய்தார்கள். ஆனால், 2001-லேயிருந்து அம்மா இதே நடிகர் திரு. கே. ராஜன் அவர்கள்கூட வெறுமனே உங்களுக்கு வேண்டுகோள் கொடுத்தார்கள், அம்மா, இப்படி இருக்கிறது, எங்களைக் காப்பாற்றுங்கள் என்று. அப்புறம் நடிகர் பார்த்திபன் அவர்கள்கூட அவர்களுடைய சொந்தப் படத்தின் தயாரிப்பாளர் என்ற முறையில், யாரும் திருட்டு வி.சி.டி. பார்த்துவிடாதீர்கள் என்று சொல்லி ஒரு Public awareness-க்காக Film Chamber-லே உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்கப்புறம் எல்லா சினிமா கலைஞர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள். என்னடா இது; எப்போதுமே போராடுகிறவர்கள், உண்ணாவிரதம் இருந்தும் இவ்வளவு அமைதியாக இருக்கிறார்களே என்று பார்த்தால், அப்போதுதான் எனக்குச் சின்ன கதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

இந்த மாமன்றத்தின் தலைவர், ஐயா சபாநாயகர் அவர்கள் சொன்ன கதைதான் அது. அது என்னவென்றால், எல்லா குழந்தைகளுக்கும் ஸ்வீட் கொடுத்துக்கொண்டே வந்தார்களாம்.



அப்படி அந்த ஸ்வீட கொடுத்துக்கொண்டே வரும்போது, எல்லா குழந்தைகளும் அந்த ஸ்வீட்டை வாங்கினார்கள். ஒரேயொரு குழந்தை மட்டும் வாங்க மாட்டேன் என்றதுடன் அழுதுகொண்டே இருந்தது. ஏன் வாங்கமாட்டேன் என்று கேட்டால், எங்கள் அம்மா கொடுத்தால்தான் நான் வாங்குவேன் என்று அந்தக் குழந்தை சொல்லியது. சரிதான், உங்கள் அம்மா கொடுக்கட்டும் என்று சொல்லி அம்மா கொடுத்தவுடனேயே அந்தக் குழநதை அழுகையை நிறுத்திவிட்டது. அது ஏன், உங்கள் அம்மா கொடுத்ததும் நீ அழுகையை நிறுத்திவிட்டாய் என்று கேட்டபோது, எங்கள் அம்மா கொடுத்தார்கள்; அதனாலேதான் நிறுத்தினேன் என்று நினைக்காதீர்கள்; எங்கள் அம்மா அவர்கள் கொடுத்தால் நிறைய கொடுப்பார்கள்; ஏன் என்றால் அவர்கள் கை அகலமானது.; நான் எடுத்துக்கொண்டால் ஒன்றே ஒன்றைத்தான் எடுத்துக்கொள்வேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லியது. அதேமாதிரி எல்லா சினிமா கலைஞர்களும் இவ்வளவு காலமும் அமைதியாக இருந்ததற்குக் காரணம் என்னவென்றால் அம்மா வரட்டும், அம்மா அவர்கள் கொடுத்தால் அள்ளிக் கொடுப்பார்கள் என்ற எண்ணம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராதாரவி, திருட்டு வி.சி.டி. மாதிரி, கதையையே என்னிடமிருந்து எடுத்துவிட்டீர்களே? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ராதாரவி:** நான் இந்தக் கதையையே, உங்களிடமிருந்து உரிமையை வாங்கிக் கொண்டுதான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்றால், நேற்றே உங்களிடம் சொல்லிவிட்டேன் இந்தக் கதையைத் திருடப் போகிறேன் என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இந்தக் குழந்தைகள் எல்லாம் கொஞ்சம் கிளுகிளுப்புக் காட்டியவர்கள் பக்கம் இருந்தது என்பது உண்மைதான் அம்மா. நான் இல்லை என்று சொல்லவில்லை. அது ஏன் என்றால் பசி ஆறிய குழந்தை, தாயின் மடியில் தூங்கிக் கொண்டிருக்கும்போது கிளுகிளுப்புக் காட்டியவுடனே அந்தப் பக்கம் உடனே தாவிப் போய்விட்டது. அப்போது கிளுகிளுப்புக் காட்டியவர்கள் சொன்னார்கள், பார்த்தாயா உங்கள் குழந்தை இப்போது என்னிடம் வந்துவிட்டது அம்மா என்று. அதற்குத் தாய் சிரித்துக்கொண்டே இருந்தார். ஏன் அம்மா சிரித்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு, அப்பா, இப்போது

உன்னிடம் வந்திருக்கலாம். ஆனால், இருப்பதும் அதற்குப் பசி வரும்போது அது என்னிடம்தான் வர முடியும். உன்னிடம் இருக்க முடியாது என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேமாதிரி, இப்போது இந்தத் திரை உலகத்தினைச் சார்ந்தவர்களுக்குப் பசி வந்தவுடனே மீண்டும் அந்தத் தாயிடம்தான் வந்திருக்கிறார்கள். ஏன் என்றால், திரை உலக மக்களின் கண்களில் வழிந்த நீரை உண்மையாகவே உங்கள் தாய்க் கரத்தால் துடைத்து, எல்லோருடைய வயிற்றிலும் பாலை வார்த்தீர்கள். அதனால்தான் 4 ½ வருடங்களாக தண்ணீரே இல்லாத பாலாற்றிலேகூட இப்போது தண்ணீர் ஓடுகிறது, அம்மா. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்) அதை நீங்கள் பார்க்கவில்லை, நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) பாலாற்றிலே நான் பார்த்திருக்கிறேன். (குறுக்கீடு) நானே பார்த்திருக்கிறேன். அதனாலேதான் சொல்கிறேன், அம்மா. (குறுக்கீடு) நான் சொல்வது ஆற்றுத் தண்ணீர்.

அம்மா, உங்கள் தாயன்போடு நீங்கள் போட்ட சட்டத்தினாலே, உங்கள் தாய் வீடாம் திரை உலகத்திலே பலர் பயனடைந்திருக்கிறார்கள். அதனால் எவ்வளவு பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்றால், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், அதனுடைய உறுப்பினர்கள் 1200 பேர். South Indian Film Chamber of Commerce, அதனுடைய உறுப்பினர்கள் ஏறத்தாழ 900 பேர். தமிழகம் முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள், north -south செங்கல்பட்டு, city, திருச்சி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, சேலம், கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய அனைத்து இடங்களையும் மொத்தமாகச் சேர்த்தால் ஏறத்தாழ 2,630 பேர். திரையரங்க உரிமையாளர்கள் 1,931 பேர். திரையரங்கப் பணியாளர்கள் ஓர் அரங்குக்கு 30 பேர் என்று வைத்துக்கொண்டால்கூட 5,730 பேர். அப்புறம் FEFSI - Film Employees Federation of South India, அதனுடைய தொழிலாளர் சம்மேளனத்திலே 24 சங்கங்கள், 23,000 பேர். தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர்கள் 2,700 பேர். ஆக மொத்தம் 38,000 பேருக்குமேலே வருகிறது அம்மா. இவர்களெல்லாம் நேராக சினிமாவிலே சம்பந்தப்பட்டவர்கள். இதுபோக, சினிமாவிலே அவ்வளவாக சம்பந்தப்படாதவர்கள் இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-20

அதாவது பின்னாடி இருக்கிறவர்கள். லேப் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். படச்சுருளைத் தியேட்டருக்குத் தியேட்டர் trip அடிக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். போஸ்டர் அடிக்கும் அச்சு



நிறுவனங்கள், போஸ்டர் ஒட்டுகிற தொழிலாளிகள், இவர்கள் எல்லோரையும் சேர்த்தால், இந்த Tea கடை, Bun கடை வைத்திருக்கிறவர்கள் இவர்கள் எல்லோரையும் சேர்த்தால் ஏறத்தாழ 3 இலட்சம் பேருக்கு மேல் வருகிறார்கள் அம்மா. ஏன் என்றால், 72 ஆயிரம் பேருக்கு மேல் வந்தால் ஒரு குடும்பத்திற்கு 4 பேர் என்று கணக்குப் போட்டால்கூட ஏறத்தாழ 3½ இலட்சம் பேருக்கு மேல் இன்றைக்கு நீங்கள் வாழ வைத்திருக்கிறீர்கள் என்றால் அந்தப் பெருமை உங்களைத்தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த success எல்லாம், இந்த வெற்றி எல்லாம் உங்களுக்கு எப்படி என்றால் Charles Limburgh என்ற அறிவாளி ஒருவன் சொல்லியிருக்கிறான் "Success is not measured by what a man accomplishes but by the opposition he has encountered and the courage with which he has maintained the struggle against overwhelming odds." அதாவது வெற்றி என்பது நீங்கள் வாங்கின வெற்றியிலே அதனுடைய அளவுகோல் அல்ல. ஆனால், அதற்கு வந்த எதிர்ப்புகள், அதையெல்லாம் நீங்கள் encounter பண்ணி எல்லாவற்றையும் தாண்டி இந்தக் கஷ்டமான காரியத்தை முடித்தீர்கள் பாருங்கள், அதுதான் அம்மா உங்களுக்கு ஒரு பெரிய வெற்றி. ஏன் என்றால் சில பேர் வெற்றியை வரிசைப்படுத்தினார்கள். ஆனால், நீங்கள் மிக அற்புதமாக அமைதியாக இருந்து இன்று வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஏன் என்றால் The only way to achieve the real success is to do it one day at a time. ஒரு நாளைக்கு ஒன்று ஒன்றாகச் செய்தீர்கள்.

வீரப்பனைச் சுட்டீர்கள். திருட்டு விசிடியைப் பிடித்தீர்கள். இப்போது வீராணம் தண்ணீரைக் கொண்டு வந்தீர்கள். இது உங்களால் மட்டும்தான் முடியும் அம்மா. அம்மா, உங்களை நோக்கி உண்மையிலேயே சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களிடம் இருக்கிற தைரியம், திறமை, அறிவு எல்லாவற்றையும் பார்த்துதான் அம்மா தோல்வி உங்களை விட்டு ஓடிப் போய்விட்டது. வெற்றி உங்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏன் இந்த வெற்றி உங்களிடம் வந்து சேர்ந்தது என்றால், அந்த வெற்றி இப்போது பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் நல்ல கரெக்டான ஆள்கிட்டே இருக்கிறேன் என்று. நீங்கள் அடைந்தது எல்லாம் வெற்றி, பெரிய வெற்றிதான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதிலே முதன்மையான வெற்றி என்ன என்றால், மழை பெய்து வெள்ளம் வந்ததற்குக் காரணம் யார் என்றால் ஆளுங்கட்சி. மழை பெய்யவில்லை

என்றால் அதற்கும் ஆளுங்கட்சிதான் காரணம். அப்புறம் காற்று அடித்தால் அது ஆளுபவர்களுடைய அலட்சியப் போக்கு. காற்று அடிக்கவில்லை என்றால் அது ஆளுபவர்களின் மெத்தனம். குழாய்களிலே தண்ணீர் வரவில்லை என்றால் அது ஆளுபவர்களின் சதி. குழாய்களிலே தண்ணீர் வந்தால் அது நீரல்ல, கானல் நீர். இப்படி எல்லாம் உங்களைக் கிண்டல் பண்ணியவர்கள் எல்லாம் இன்றைக்கு நன்றி சொல்லுகிற அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் அதுதான் அம்மா உண்மையான வெற்றி உங்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, உங்கள் ஆட்சியிலே வீராணம் தண்ணீர் சென்னைக்கு விட்டாச்சு, வீரப்பனைச் சுட்டாச்சு, திருட்டு வி.சி.டி.யை ஒழிச்சாச்சு. உங்கள் தீரச் செயல்களுக்காக உலக மக்களே நெஞ்சார இன்றைக்கு உங்களுக்கு வீரத் திலகம் இட்டாச்சு. அதுதான் தங்கத் தாரகை என்ற பட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்ததற்காக இன்றைக்குத் திரை உலகத்தின் தேசிய கீதமே "நன்றி அம்மா, நன்றி அம்மா, நன்றி அம்மா, பூவுலகம் உள்ளவரை நன்றி அம்மா" என்று பாடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எல்லாருமே, சினிமா உலகம் மட்டும் அல்ல, நீங்கள் செய்திருக்கிற சாதனைக்காக இன்றைக்கு அத்தனை மக்களும் உங்களை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் நடுவிலே அதைப் பண்ண மாட்டார்களோ, இதைப் பண்ண மாட்டார்களோ என்று நினைத்தது எல்லாம் உண்மைதான். ஏன் என்றால் சந்தைக்குச் சென்ற தாய் ஒரு குழந்தையை அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். அந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு செல்லும்போது அந்தக் குழந்தை, அம்மா, எனக்கு ரிப்பன் வேண்டும், அம்மா, எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும், அம்மா, எனக்கு அந்த பம்பரம் வேண்டும். அந்த பொம்மை வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தது. தாய் சொன்னார்கள், சும்மா இரு, சாமியைக் கும்பிட்டுவிட்டு நான் வாங்கித் தருகிறேன் என்று. தப்பேயில்லை.

சாமியைக் கும்பிட்டுவிட்டு வாங்கித் தருகிறேன் என்று சொன்னவுடனே இந்தக் குழந்தைக்குப் பொறுக்கவில்லை அம்மா. தாய் சாமி கும்பிட்டுக்கொண்டே இருக்கும்போது, பார்த்துவிட்டு ஆஹா, அம்மா வாங்கிக் கொடுக்கமாட்டார்கள்போல் இருக்கிறது என்று கூட்டத்திற்குள்ளே ஓடிப்போய் விட்டது. கூட்டத்திற்குள்ளே ஓடினவுடனேதான் அந்த இடிபாடு, அந்தக் கூட்டத்திற்கு நடுவிலே





அதற்குக் கிடைத்த அந்த இடிபாடு தாங்கமுடியவில்லை. ஏன் என்றால் அவ்வளவு நாளும், அவ்வளவு நேரமும் அந்த இடிபாடுகளைத் தாங்கிக் கொண்டு இருந்தது அந்தத் தாய். ஆனால், இப்போது தனியாக வந்தவுடனே அந்த இடிபாடு தாங்காமல் அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது ஒருவர் வந்து கேட்டார். குழந்தை உனக்கு என்ன வேண்டும்; ரிப்பன் வேண்டுமா? வேண்டாம், வேண்டாம்; எனக்கு ரிப்பன் வேண்டாம்; எனக்கு என் அம்மாதான் வேண்டும். அப்புறம் கேட்டாராம்; ஏம்மா குழந்தை உனக்கு ஐஸ்கிரீம் வேண்டுமா? எனக்கு ஐஸ்கிரீம் வேண்டாம், எனக்கு எங்க அம்மாதான் வேண்டும் என்று.

எந்தக் குழந்தை ஒரு ஐஸ்கிரீமுக்காகவும், ஒரு ரிப்பனுக்காகவும் அலைந்து, தாயின் கையை விட்டுவிட்டு கூட்டத்திற்குள் வந்ததோ, அதுதான் இடிபாடு தாங்காமல் அழுது இன்றைக்கு அம்மா, அம்மாதான் வேண்டும் என்று உங்கள் திசையை நோக்கி அழுதுகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

அதைப்போல, இன்றைக்கு திரை உலக மக்கள் மட்டுமல்ல, அத்தனை பேரும் அம்மாதான் வேண்டும், அம்மாதான் வேண்டுமென்று, உங்கள் திசை நோக்கி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மேலும் என்னுடைய அன்புச் சகோதரர்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருட்டு வி.சி.டி., திரையுலகத்தினுடைய நன்மையைக் கருதி, அவர்களுடைய பாதுகாப்பிற்காக ஒழிக்கப்பட்டது வரவேற்கக்கூடியது, கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டியது. இதில் எந்த மாறுபட்ட கருத்துக்கும் இடமில்லை. இதில் கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் இவர்களையெல்லாம் சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிற இந்தக் குற்றவாளிகளே தப்பிப்பதற்காகவும்.

தப்பிக்கிற நடவடிக்கை அல்லது இந்தக் குற்றத்திலே நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடிய நிலைகள் எல்லாம் நம்முடைய நாட்டிலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்திலும்கூட, மீண்டும் இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடக்கக் கூடாது, கட்டாயம் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கும்; அதையெல்லாம் தவிர்த்து எந்தவகையிலும் இந்தக் குற்றவாளிகள் மீண்டும் ஊடுருவக் கூடாது, ஊடுருவக் கூடாது என்று சொல்லக்கூடிய அதே வேளையில் நிரபராதிகளை வேண்டுமென்றே திட்டமிட்டுக் கைது செய்யக்கூடிய, வழக்குப் பதிவு செய்யக் கூடிய நடவடிக்கைகளெல்லாம் தொடரும். இவையெல்லாம் இல்லாத வகையிலே உரிய கவனத்தோடு இந்தச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று சொல்லி, கட்சியின் சார்பிலே தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் எழுப்பிய கேள்வியிலே ஒரு கேள்வி தகவல் தொழில்நுட்பத்தைச் சார்ந்தது. வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தில் ஒரு challenging - ஆக, இதை நம்முடைய அம்மா அவர்கள், இந்த obscene-ஐ முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்கள். அதற்காக இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் cyber crime என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தியவர் நம்முடைய அம்மா அவர்கள். அது சென்னையிலே இன்றைக்குச் சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக்கூட பத்திரிகைகளைப் படிக்கின்ற பழக்கம் முழுமையாக இருக்கின்றது. ஒரு 15 நாட்களுக்கு முன்பாக மும்பையில் இருக்கின்ற ஒருவர் இங்கே இருக்கின்ற ஒரு பெண் பெயரிலே ஒரு e-mail create செய்து, அந்த e-mail மூலமாக அவர் வெளிப்படுத்திய ஆபாசங்களையெல்லாம் நம்முடைய புலனாய்வுத் துறை, நம்முடைய அம்மாவின் உத்தரவின்பேரிலே கண்டுபிடித்து, அதற்கு தண்டனை இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாட்டிலே (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்டது என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, இது முழுமையாக ஒழிந்துவிடும். அந்தத் தண்டனை வந்தபிறகு internet-லும் சரி, cellular phone-லும் சரி, யாருமே நிச்சயமாக





இந்தமாதிரி குறும்புகள் செய்ய முடியாது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இதற்கு நிரந்தரத் தீர்வு என்கிற அடிப்படையிலே SETS—Society for Electronic Transaction and Security இந்த SETS -ஐப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அகில இந்திய அளவிலே ஒரு போட்டி இருந்தது, எந்த மாநிலத்தில் இது அமைக்கப்பட வேண்டுமென்று. அப்படி ஒரு போட்டி இருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இதை அமைக்க வேண்டும், உங்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டுமென்றாலும் தருகின்றேன், அதைப்போல பணம் தருகிறேன் என்று சொல்லி, 60 இலட்சம் ரூபாயைக் கொடுத்து, கூடவே நிலத்தையும் கொடுத்து, இன்றைக்கு அந்தப் பணிகளை ஆரம்பித்திருக்கின்றார்கள். எனவே, இவர்கள் முழுமையாகச் செய்யும்போது, இதுபோன்ற obscene-கள் எல்லாம் download செய்து இங்கே பார்ப்பவர்களுக்கு நிச்சயமாக கடுமையான தண்டனைகள் காத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தில் ஒரு திருத்தத்தை அரசு இதிலே இணைத்து, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோன்று, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் சட்டத்தோடு இன்றைக்கு வி.சி.டி.யையும் சேர்த்து, அதைத் திருட்டுத்தனமாக தயாரித்து, விற்பனை செய்கின்ற ஒரு மோசமான நிலையில், இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குறிப்பாக, சினிமா தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற திரைப்பட நடிகர்கள், திரைப்படக்காரர்கள், பட விநியோகஸ்தர்கள் எந்த அளவுக்கு அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் இங்கே விவரமாகவே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, திருட்டுத்தனமாக தயாரிக்கப்படுகின்ற திருட்டு வி.சி.டி.களைத் தடுப்பதற்காக கொண்டு வந்திருக்கிற இந்தக் குண்டர் சட்டம் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

பிற்பகல் 12-30

ஒன்றை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்பது, சமீபத்திலே கர்நாடகாவிலே திரைப்படங்கள் வெளியிடுகிறபோது 2 மாதங்களுக்கு வெளி மாநிலங்களில் இருக்கிற திரைப்படங்கள் கர்நாடகாவிலே திரையிடக்கூடாது என்பதற்கான ஒரு பெரிய கிளர்ச்சி அந்த மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது. எந்தவொரு படமும் அந்த மாநிலத்தில் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசு இதைச் சட்டமாக்கி இருக்கிறது.

தமிழகத்திலே தயாரிக்கக்கூடிய தமிழ்த் திரைப்படங்களைப் பட விநியோகஸ்தர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் தாங்கள் போட்ட முதலைக் காலத்தோடு எடுக்க வேண்டுமென்பதற்காகப் படத்தைச் சிங்கப்பூருக்கும், மலேசியாவிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் விற்பனை செய்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டிலே இந்தச் சட்டம் இன்றைய தினத்திலே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர்கள்மீது குண்டர் சட்டத்தைப் பயன்படுத்தலாம். இந்தப் படங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறபோதும், சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் சில நாடுகளுக்கும் செல்கிறபோதும், போனவுடனேயே அங்கேயிருந்து விசிடி தயார் பண்ணி வருகிறது. அங்கேயிருந்து வருகிற விசிடி-க்கள்தான் தமிழகத்திலே அதிகமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டு வருகிறபோது, தமிழகத்திலே தயாரிக்கப்படக்கூடிய தமிழ்த் திரைப்படங்களைக் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு வெளி மாநிலங்களுக்குகோ, வெளி நாடுகளுக்கோ அனுப்பாமல் இருப்பதற்கு இந்தச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கொண்டு வந்தால், அந்தப் படத்தினுடைய விநியோகஸ்தர்கள், பட நடிகர்கள், போன்றவர்களுக்கு வருகின்ற நஷ்டத்தைத் தடுப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பாக இருக்கும். ஆக, படம் வந்தவுடனே போட்ட முதலை, பணத்தை எடுக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு நாடுகளுக்கு, பல்வேறு மாநிலங்களுக்கு விநியோகிக்கிறபோது, இந்தத் திருட்டு விசிடி, உடனடியாக வந்து விடுகிறது. இதை நம்முடைய திரு. ராதாரவி போன்ற நடிகர்கள் நடிகர் சங்கத்திலே பேசி, பட விநியோகஸ்தர்களிடத்திலே பேசி, இதுபோன்ற ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவருவது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.



அதைவிட, 1982 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் வந்திருக்கலாம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே, குடிசை நில ஆக்கிரமிப்பாளர்களுக்கென்று பொதுப் பணித் துறையிலே பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயிருந்து ஒரு சட்டம் இருக்கிறது. நிலங்கள் ஆக்கிரமிப்பதை எந்தவகையிலே எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால், 1982-லே எப்படி கவனம் செலுத்தினார்கள் என்பது தெரியவில்லை. என்னைப் போன்றவர்களும் மற்றவர்களும் அன்றையதினம் சட்டமன்றத்திலே விவாதித்து இருப்போம் என்று கருதுகிறேன். அதேபோன்று, விபச்சாரத் தொழில், கள்ளச்சாராயம், குண்டர் இப்படிப்பட்டவர்களோடு ஏழையெளிய மக்கள், கிராமப்புறங்களிலே ஆக்கிரமித்து குடியிருப்பதற்கே நிலம் இல்லாதவர்களை இந்தச் சட்டத்திலே கொண்டுபோய் 1982 ஆம் ஆண்டிலே இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஷரத்துகளை நீக்குவதற்கு அரசு ஒரு தனி சட்டமுன்வடிவு கொண்டு வர வேண்டும். ஏற்கெனவே இருக்கிற பொதுப் பணித் துறை சட்டத்தோடு இதை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை இந்த அரசு உருவாக்குமா என்று கேட்டு, இதை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே சொல்கிறபோது, கர்நாடகாவிலே 2 மாதத்திற்குப் பிற மொழிப் படங்கள் போடக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டதாகச் சொன்னார்கள். அந்தமாதிரி அங்கு சட்டம் எதுவுமில்லை. அங்குள்ள திரையரங்குகளில்கூட அங்குள்ள அரசே, போடுங்கள் என்று தான் சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய மக்கள்தான் சிலபேர், எதிர்ப்பு தெரிவித்து, அந்த மொழி வெறியர்கள் தான் அவ்வாறு இருந்துகொண்டிருக்கிறார்களேயொழிய, சட்டம் அதுபோன்று இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாம் இந்தச் சட்டமுன்வடிவை அவசரமாகக் கொண்டு வந்துவிட்டோம். இப்போதுதான் சட்டமுன்வடிவை நிறைவேற்றுகிறோம். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். அதேபோன்றுதான் கர்நாடகாவிலே அவர்களும் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவது என்பதைப்போல, அதை அமல்படுத்துவதிலும், முறையாகச் செயல்படுத்துவதிலும்தான் ஒரு சட்டத்தினுடைய நோக்கம் வெற்றிபெறுகிற நிலையை அடையமுடியும். திரை உலகைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு பாதுகாப்பு நிலை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையினை அறிந்துதான் இந்தச் சட்டத்தைப்பற்றிய அறிவிப்பு வந்தவுடன் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் வரவேற்றார்கள். இன்னொன்று, ஏற்கெனவே உரிமையை வழங்கியிருக்கிறவர்கள், ஏற்கெனவே பழைய திரைப்படங்களின் உரிமையை வழங்கி அவற்றை வெளியிடுகிற சூழ்நிலை வருகிறபோதும், அவர்கள் இதன்மூலமாக பாதிக்கப்படாத ஒரு சூழ்நிலையும் இருக்குமேயானால், இது முழுமையாக பாதுகாப்பினை அளிக்கக்கூடிய ஒரு நிலையாக இருக்குமென்று என்னுடைய கருத்தாக இங்கே எடுத்துச்சொல்லி, என்னுடைய கருத்துகளை வெளியிட்டு, அமர்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு திருட்டு வி.சி.டி. ஒழிப்பு சம்பந்தமான இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. இன்று தமிழகத்திலே இருக்கின்ற கலைத் துறையைச் சேர்ந்த அத்தனை பேரும் பாராட்டுகின்ற அளவிலே இது அமைந்திருக்கின்றது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று சொல்கின்ற வள்ளுவன் வாக்குப் பிரகாரம் முதலமைச்சர் அவர்கள் இங்கு சொல்லியதோடு நின்றுவிடாது, இந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற நிலையிலும் அதைக் கண்டிப்பாக அமல்படுத்துகின்ற காரணத்தினால் இன்றைக்குப் பெரும்பாலும் அது ஒழிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். பல்வேறு திரையரங்குகளிலே இந்த ஒரு மாத காலத்திலே இந்தத் திருட்டு வி.சி.டி. ஒழிக்கப்பட்டதன் காரணமாக,



அதிகப்படியான வசூல்கள் எல்லாம் ஏற்பட்டு அதன்மூலமாக சினிமாத் துறையினர் எல்லோரும் மகிழ்ச்சியடைகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்திலே வருகின்றபோது கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், விபச்சாரக் குற்றவாளிகள் எல்லாம் தண்டிக்கப்படுகின்ற ஒரு நிலையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று வருகின்றபோது அது எப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் என்பது இந்தச் சட்டத்திலே தெளிவாக இல்லை.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களிலே தங்களுக்குரிய வீட்டுவசதி இல்லாத காரணத்தினால், தங்களுக்குரிய நிலங்கள் இல்லாத காரணத்தினால், அவர்கள் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து குடிசைகளை அமைத்து, பல ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களையும் இந்தச் சட்டம் பாதித்துவிடாத அளவிற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளித்திருக்கிறது என்பது இதிலே விளக்கப்படவில்லை என்கின்ற காரணத்தினால், ஏதோ பெரிய தாதாக்கள் நகர்ப்புறங்களிலே இருக்கின்ற விலை உயர்ந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தால் அவர்களுக்கு இந்தச் சட்டம் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற நலிவுற்ற மக்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அங்கு பல ஆண்டுகளாக தங்களுக்குரிய வீட்டுமனை இல்லாத காரணத்தினால் புறம்போக்கு நிலங்களிலே தங்களுடைய குடிசைகளை அமைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கின்றவகையில், அப்படி இருக்கின்றவர்களுக்கு எல்லாம் ஒரு சட்டத்தை இயற்றிகூட, கடந்த காலங்களிலேகூட அப்படியெல்லாம் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அப்படி பல ஆண்டுகளாகக் குடியிருந்து கொண்டிருப்பவர்களுக்கு அரசு ஒரு தனிச் சட்டத்தை உருவாக்கி, அவர்களுக்கே பட்டா வழங்குகின்ற ஒரு நிலையைக்கூட ஏற்படுத்த வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற நலிந்த குடிசைவாசிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதையும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருட்டு வி.சி.டி. ஒழிப்பிற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில்,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கேற்ப இதனுடைய மூலத்தையும் கண்டறிந்து போக்குவதற்கான முறைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், விபச்சாரத் தொழில் செய்வோர் என்கிற வரிசையில் குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் என்பதையும் இணைக்க வேண்டாம் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். குடிசை நிலம் என்பது கருணையோடு பார்த்து ஒழுங்கமைக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் அதுகுறித்து தனியாக விவாதித்து முடிவு எடுக்கவேண்டும் என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்து, சட்டத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவு குறித்து எனது கருத்துகளை இப்பேரவைக்குக் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்:

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

*பிற்பகல் 12-40*

தமிழ்த் திரையுலகம் இந்தியாவில் திரைப்படத் தயாரிப்பில் இரண்டாம் இடத்தில் இருந்தது. திருட்டு வீடியோவினால் இந்த நிலை





மாறி நாளுக்கு நாள் நலிவுற்ற நிலையில், நம் கண் முன்னால் காட்சி அரங்குகள் எல்லாம் கல்யாண மண்டபங்களாகவும், வணிக வளாகங்களாகவும் மாறி வந்த நிலையில், இந்தியத் திரைப்படத் துறையையே நம்பி பிழைத்துக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள், பட்டினிக் கொடுமைக்கு ஆளானார்கள். எடுத்த திரைப்படம் ஏற்படுத்திய நஷ்டத்தின் விளைவால், அந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க இயலாத நிலை உருவானது. திரைப்படத் தயாரிப்பாளர்கள் மட்டுமின்றி, திரைப்படத்திற்குப் பின்னால் உழைக்கும் தொழில்நுட்பக் கலைஞர்கள், சண்டைப் பயிற்சிக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், ஒலி, ஒளியியல் கலைஞர்கள், உப நடிகர், நடிகையர் போன்ற ஏராளமான தொழிலாளர்கள் திரைப்பட வாய்ப்பின்றி, திக்கற்று இருந்த நிலையில், அவர்கள் வாழ்விற்கு ஒரு வெளிச்சமாக இச்சட்டத் திருத்தம் அமையும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருட்டு வீடியோவினால் திரைப்படத் துறையில், திருட்டு வீடியோ தயாரிப்பாளர்களுக்கும், இரசிகர்களுக்குமிடையே பல இடங்களில் மோதல் ஏற்பட்டு, சட்டம்-ஒழுங்கு பாதிக்கும் நிலையும் ஏற்பட்டது. சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்துவதும் இச்சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, திரைப்படத் துறையைச் சார்ந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், வினியோகஸ்தர்கள், நடிகர், நடிகைகள் மற்றும் பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் சந்தித்து, திருட்டு வீடியோவினால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பாதிப்பை எடுத்துரைத்து, பல்லாயிரக்கணக்கான ஏழைகளின் துயர் துடைத்து, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றிட கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பல்லாயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் வறிய நிலையில் வேதனைப்படக் கூடாது என்று விரும்பி, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றிடும் எண்ணத்தில், திருட்டு வீடியோவை முழுமையாக ஒழித்திட வேண்டி, 'தடுப்புக் காவல்' சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்து, வீடியோ திருட்டுக் குற்றத்தில் ஈடுபடுவோருக்கும் இத்தடுப்புக் காவல் சட்டம் பொருந்தும் வகையில், இச்சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

[2004 நவம்பர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.



2004 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2004) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2004) மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2004) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 17-11-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

7/13A



பத்திரிகை சுதந்திரம் என்பது மிக முக்கியமானது. ஆனால், அவை நடவடிக்கைகளில் இடம்பெறாத ஒரு நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் வெளியிட்டிருப்பது சட்டமன்ற மரபுக்கு மாறானதாகும். ஜனநாயக அமைப்பில் சட்டமன்றத்திற்குள்ள மிக முக்கியமான ஆளுமையையும், நீதிமன்றத்திற்கு உள்ள தனித் தன்மையையும் நாம் அனைவரும் அறிவோம். இதில் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படுகின்ற பத்திரிகைகள், மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. சில பத்திரிகைகள் அவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. பத்திரிகைகள் இதுபோன்று செய்திகள் வெளியிடுமானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, முதல்வர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, இனிமேல் இப்பத்திரிகைகள் நடுநிலையுடன் விருப்பு வெறுப்பின்றி உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு உணர்த்தும்வகையில் செய்திகள் வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10—50

### (ஆ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**•மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

### (அ) கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கலவித் துறை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,14,76,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 51, திரு. சு. சிவராஜ்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 365, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்திற்குப் போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழிலநுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் கட்டாய நன்கொடை வசூல் செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,85,68,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,14,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 59, திரு. என். நன்மாறன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 4—8—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

#### பிரிவு 3

பிரிவு 3, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, in clause 3, in sub-clause (2) (a), *for* the words "sand-offenders" *substitute* the words "sand-offenders, slum grabbers"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

மருந்துப் பொருட்கள் சட்டத்தின்கீழ், குற்றம் இழைப்பவர் களுக்கு இதே சட்டத்தின் கீழ் Indian Drugs and Cosmetics Act என்ற அடிப்படையிலேயும், Dangerous Act என்ற அடிப்படை யிலேயும் தண்டிக்க சட்ட விதிகள் இருக்கின்றன. எனவே, அதைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குண்டர்களைத் தண்டிப்பதற்கு Indian Penal Code எத்தனையோ ஷரத்துக்கள் இருக்கின்றன. அதன் துணை கொண்டு நீதிமன்றத்திற்கு எத்தனையோ குண்டர்கள் எடுத்துச் செல்லப் படுகிறார்கள்.

வழக்குகள் போடப்படுகின்றன. அவர்கள் தண்டனை பெற்று வருகிறார்கள். எனவே இந்த இன குற்றவாளிகளைப் பொறுத்த அளவிலே இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணர்கிறோம். விபச்சார குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதற்கு The Suppression of Immoral Traffic in Women and Girl's Act 1956. என்ற சட்டம் ஏற்கனவே இருக்கின்றது. அந்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற மூன்றாவது சட்டப் பிரிவின் கீழ் அந்தக் குற்றம் செய்பவர்களை தண்டிப்பவர்களுக்கும், அதிலே குறைந்தபட்சம் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை, முதல் குற்றத்திற்குத் தண்டனை வாங்கித் தர வழி இருக்கிறது. மீண்டும் இதே குற்றங்களை செய்வதாக இருந்தாலும் அதிகப் படியான தண்டனை வழங்குவதற்கும் சட்டம் வகை செய்கிறது. எனவே இந்த வகை குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் இந்தச் சட்டம் தேவையற்றது என்று நாங்கள் உணருகிறோம்.

அதேபோல, பிறருடைய நிலத்திலே ஆக்கிரமிப்புச் செய் பவர்களைத் தடை செய்வதற்காக, இண்டியன் பீனல் கோடிலே ஏற்கனவே பல ஷரத்துக்கள் இருக்கின்றன. எனவே இத்தகைய சட்டங்கள் அனைத்தும் இருந்தபோதிலும் புதியதாக இந்தச் சட்டம் கொண்டு வரும் உள்நோக்கம் வழக்குத் தொடரப் பட்டவர்கள் அல்லது கைது செய்யப்பட்டுக் கொண்டு இருக் கின்றவர்கள், நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படாமலேயே அவர்களைக் கைது செய்து காராக்கிரகத்திலே அடைப்பதற்கு அரசாங்கத்திற்குத் துணை நிற்கின்ற ஒரு சட்டமாக இது அமையும். எனவே இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்வதற் கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அஞ்சுகிறோம். குறிப்பாக இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் எதிர்வழக்கு ஆடுவதற்காக வழக்கறிஞர்களை நியமிப்பதற்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற ஒரு நண்பர் குறிப்பிட்டதைப் போல, இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின் றவர்கள் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்தவராக தன்னுடைய டிபன்சைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளுகின்ற ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்கள் என்று அரசு எதிர்பார்ப்பது தவறு என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதேபோல





இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தாங்கள் தவறான முறையில் கைது செய்யப்பட்டோம் என்று சுட்டிக் காட்டுவதற்கோ அல்லது அதிகார வர்க்கம் தவறாக செயல் பட்டுவிட்டது என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கோ வகை கிடையாது. இந்த சட்டத்தின் கீழ் செயலாற்றுகின்றவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இங்கே தரப்பட்டிருக்கின்ற 16 ஆவது ஷரத்து, அரசு அதிகாரிகள் இந்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்தால்கூட அவர்களுக்கு எதிராக சிவில் வழக்கோ அல்லது கிரிமினல் வழக்கோ போடுவதற்கு இடம் இல்லாத வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படுகிறது. அரசாங்கத்தைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள் சட்டம், சட்டப்புத்தகத்தில் வருமே தவிர, நிச்சயமாக அது துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது. அதிகமாகப் பயன்படுத்துகின்ற சட்டம் கொண்டு வரப்படவில்லை என்று விளக்கம் தரப்படும். இதே விளக்கம்தான் திருமதி இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது 'மிசா' என்ற சட்டத்தைப் பற்றி ஆளுகின்ற வர்க்கம் விளக்கம் தந்தது. இப்போது அமலில் இருக்கின்ற தேசியப் பாதுகாப்புச் சட்டம் உருவாகி நடைமுறையில் இருக்கிறபோதும் இதே விளக்கம்தான் சொல்லப்பட்டது. அந்தச் சட்டம் தாறுமாறாகப் பயன் படுத்தப்பட மாட்டாது. அரசு இதை அரசியல் காரணங்களுக்காக நிச்சயமாகப் பயன்படுத்தாது என்று உத்தரவாதம் தந்திருந்த போதும் கூட தேசியப் பாதுகாப்புச் சட்டம் அரசியல் காரணங்களுக்காக அரசியல் தலைவர்களை ஒடுக்குவதற் காக இன்றையதினம் பயன்பட்டு வருகிறது என்பது பல எடுத்துக் காட்டுகளின் மூலம் நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் இந்திராகாந்தியின் சர்வாதிகார ஆட்சியின்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று பேசினார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்பதை தாங்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்வாதிகாரம், ஜனநாயகம் எல்லாம் சாதாரணமாக சட்டமன்றத்திலே பேசப்பட்டு வருவது தான். அவர் சர்வாதிகாரி என்று சொன்னால் அவர்கள் ஆண்ட ஆட்சியை நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடு) எல்லாவற்றையும் குறித்துதான் இங்கே பேசுகிறார்கள். ஏற்கனவே பல முறை பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். இது புதிதல்ல.

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவர் அவர்களே, எமர்ஜென்சி ஆட்சிக் காலத்தில் சில சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப் பட்டன என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அதேபோன்ற தவறுகள் இந்தச் சட்டத்தின் கீழ் இருப்பதற்கான வாய்ப்பு

உண்டு என்று நான் அஞ்சுகின்ற காரணத்தினால், இந்தச் சட்ட தேவையில்லை, கொண்டு வரக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சட்டத்திலே 17ஆவது பிரிவில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்குப் பதிலாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இந்தச் சட்டம் வந்த பின்னர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் ஷரத்துக்கள், விதிகள் பயன்படுத்தப்பட மாட்டாது. இந்தச் சட்டத்தின் கீழ்தான் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டி இருப்பது தேசியப் பாதுகாப்பு சட்டத்திற்குப் பதிலாக இந்த சர்க்கார் இத்தகைய ஒரு விரோதமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நாங்கள் எண்ணு கிறோம். எனவே இந்த சட்டம் தேவையற்றது, ஜனநாயக முறைகளுக்குப் புறம்பானது, அரசியல் காழ்ப்புணர்ச்சியாக அதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே கருப்புச் சட்டம் என்ற காரணத்தால் ஜனதா கட்சி இந்த சட்டத்தை வன்மையாக எதிர்க்கிறது.

(பிற்பகல் 12.40)

*திரு. க. அன்பழகன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அரசாங்கம் கொண்டு வந்து இருக்கிற இந்தச் சட்டத்தைக் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வெவ்வேறு கருத்து உள்ளவர்கள் இந்தச் சட்டத்தை ஏற்பதற்கில்லை என்பதற்கான நியாயங்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அத்தகைய வேறுபட்ட கருத்து உடையவர்கள் கூட ஒருமுகமாக ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கும்போது, ஒரு ஆளும் கட்சி, இந்தச் சட்டத்தை எப்படியும் நிறைவேற்றித் தீரவேண்டும் என்று கருதுமானால், அது பெரும்பான்மைக் கருத்துக்கு மாறுபட்ட சிறுபான்மைக் கருத்து என்பதை கருத்தளவிலாவது ஆளும் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பெரும்பான்மை என்பது எண்ணிக்கை அளவிலே என்று ஆளும் கட்சி கருதுமானால், ஒரு புதிய சட்டம் அல்லது புதிதாகக் கொண்டு வரப்படுகிற விதிமுறைகள் பெரும்பாலான கருத்து வேறுபாடுள்ள பல்வேறு கட்சிகளாலே மறுக்கப்படுகிறபோது, ஒருசார்புடைய கருத்துடையவர்களால் அது ஏற்றுக்கொள்ளப் படுவதால், அது பெரும்பான்மையாகிவிடாது என்று கருத வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அகில இந்தியாவில் பல்வேறு விதமான கொடுமைகள் அல்லது கள்ளக்கடத்தல்கள் அல்லது கேடுகள் விளைவிக்கிற போது தேசிய அளவில் நாட்டினுடைய பாதுகாப்புக்கே அவை மிகப்பெரிய இடையூறு ஆகிவிடும் காரியங்கள் என்ற காரணத் தாலே, அங்கே கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம்





எந்த நோக்கத்திலே கொண்டு வரப்பட்டதோ அதே நோக்கத்திலே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது என்று பேசுவது, அதனுடைய பொது நோக்கத்தோடு இது ஒத்து வரவில்லை என்பதை மறந்து விட்டுப் பேசுகிற ஒரு கருத்து என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

சட்டங்கள் என்ற அடிப்படையில் அரசாங்கம் அதிகாரம் எடுத்துக்கொண்டு, தான் நினைத்தபடி அதைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு, நீதிமன்றத்தின் மூலம் பாதுகாப்பு இல்லாத அளவிற்கு, சட்டத்தின் மூலமாக யாரையும் தண்டிக்கக்கூடிய வாய்ப்பு பெறக்கூடாது என்ற வகையில், தேசிய பாதுகாப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல என்ற கருத்துக்கு இடம் உண்டு என்று சொன்னாலும், அது நாட்டினுடைய பாதுகாப்புக்குத் தொடர்புடைய ஒரு அமைப்பிலே பயன்படுத்த வேண்டிய காரணத்தால், ஒரு கோணத்தில் அதைச் சகித்துக்கொள்ள வேண்டிய அவசியம் நாட்டுக்கு ஏற்படக்கூடும். ஆனால் இந்தச் சட்டம் நாட்டின் பாதுகாப்புக்கு இல்லை. பொதுமக்களின் பாதுகாப்புக்காகத்தான் இந்தச் சட்டம் வருகிறது என்று சொல்லமுடியுமா என்று கேட்டால், சமுதாயத்திலே குற்றம் செய்கிறவர்கள் குண்டர்களாகவோ, விபசாரிகளாகவோ, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களாகவோ, சமூக விரோதக் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபட்டு உள்ளவர்களோ என்று இருந்தால், இந்த அரசு இந்தச் சட்டத்தைக் காட்டி, இதன் மூலமாக கைது செய்து, அவர்கள் ஜாமீனில் வரமுடியாமல், குறைந்தது 3 மாதமாவது சிறை தண்டனை அனுபவிக்கவேண்டிய அளவிற்கு, தண்டனை பெறும் அளவிற்கு அதிகாரத்தைப் பெறுகிறபோது, எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று, உண்மையிலேயே இந்தச் சட்டம் யார் மீதாவது தவறாகப் பயன்படுத்தப்பட்டு விட்டால், குண்டராக இல்லாத ஒருவர் ஒரு வேளை அவர் வைத்து இருக்கும் மீசையைப் பார்த்து அல்லது மற்றவர்கள் அவரைப் பார்த்து அப்படிச் சொன்னதை வைத்து, அல்லது ஒரு வேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே யாரையாவது குற்றம் சாட்டுகின்றபோது அவர்களெல்லாம் குண்டர்கள் என்று சொல்லியிருக்கிற அந்தக் காரணத்தை வைத்து, அல்லது ஒரு வேளை அவர் இப்போது ஒரு கண்ணியம் உள்ள மனிதராகக் கூட ஆளும் கட்சியில் சேர்ந்தபிறகு ஆகியிருந்தாலும் கூட, அவர் களையும் கூட ஏற்கனவே குண்டர்கள் என்று முதலமைச்சர் சொன்ன காரணத்தால் அதை நினைவில் வைத்து, இந்தச் சட்டத்தின்மூலம் கைது செய்யப்படுவாரானால் இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்ய மாட்டார்கள் என்பதற்கு ஆளும்கட்சியில் இருப்பது பாதுகாப்பாக இருந்தாலும், ஒரு வேளை ஆளும் கட்சியில் இல்லாவிட்டால், இதே சட்டம் அவர் மீது பயன் படுத்தப்படுமானால், அவர் இப்போது அப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்கு உரியவர் இல்லை என்று சொன்னாலும் கூட இந்த தண்டனையையோ, தொல்லையையோ, இந்த அவமானத்தையோ ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலிருந்து அப்படிப்பட்டவர்கள்

பாதுகாப்பு பெறமுடியாது. ஆகவே, கொடுமையான சட்டம்
கொண்டு வருகிறபோது, கொடுமையான தண்டனை உடைய
சட்டம்கொண்டு வருகிறபோது, உங்களுக்கு நான் ஒன்றை
நினைவுபடுத்த விரும்புகிறேன். The rigours of law untempted with
equity is not justice but the denial of it. என்று சொல்லப்பட்டு
இருக்கிற அந்தக் கருத்தின் அடிப்படையில் இது கொடுமையான
சட்டம். நான் மதுவிலக்கு தீவிர தண்டனைச் சட்டம் கொடுமை
யான சட்டம் என்று அதைக் கொண்டு வந்தபோதே
சொன்னேன். இந்தச் சட்டம் தோல்வி அடையுமே தவிர இந்தச்
சட்டத்தாலே இம்மி அளவு பலனும் இந்த அரசு எதிர்பார்க்க
முடியாது. இதற்கு மாறான விளைவு தான் ஏற்படும் என்பதை
அந்தச் சட்டம் வருகிறபோதே எனக்குத் தெரிந்த சமுதாய நல
கருத்தை வைத்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் எடுத்துச்சொல்லி
இருக்கிறேன்.

அதைப்போலவே நான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தினால்
ஏற்படுகின்ற நன்மைகளைவிட, பொது நலன்களைவிட, பொது
நலன்களுக்கு ஏற்படுகிற அநீதிகள்தான் அதிகமாகும். ஒரு
சட்டத்திற்கு இருக்கிற இலக்கணத்தை மீறி இந்தச் சட்டம்
வருகிறது என்பதால் அந்த இலக்கணத்திற்கு உட்பட்டே இது
கொடுமையான சட்டம் என்ற குற்றச்சாட்டை தெரிவிக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகமான தண்டனையே, கடுமையான தண்டனையே நீதி
வழங்கி விடாது என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும்.
அந்தத் தண்டனை கூட சில நேரங்களில் நியாயம் வழங்கும்.
ஆனால் முறையற்ற தண்டனை அது குற்றவாளி என்று ஒரு
நீதிமன்றம் மூலம் தீர்ப்பு வழங்காத தண்டனை எப்படி இருந்
தாலும் அது நிச்சயமாகக் கேடு விளைவிக்கும். சமுதாயத்திலே
குற்றவாளிகளாக இல்லாத சிலரை குற்றவாளிகளாக ஆக்க அது
பயன்படுமே தவிர குற்றங்களைத் தடுக்கப் பயன்படாது
என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்பு
கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
பரம்பரை குண்டர்கள் என்பவர்கள் தங்களுடைய தொழிலை
ஒரு தொடர் தொழிலாக, தொடர்ந்து செய்கிறார்கள்.
அவர்கள் ஏற்கெனவே காவல்துறையின் தயவினால், அவர்
களுக்குத் தெரிந்தே செய்கிறார்கள் என்பதை அமைச்சர்கள்
மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் அரசாங்
கத்தின் சில இலாகாக்களுக்குத் தெரிந்துதான் காய்ச்சுகிறார்கள்.
அவர்கள் ஆதரவிலேதான் அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள்
என்பதை இந்த அமைச்சரவை மறுக்க முடியாது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.



வேண்டுமென்றால் விபச்சாரம் நடைபெறுவது இந்த
அமைச்சரவைக்குத் தெரியாமல் இருக்கலாம்; தெரியும் என்று
நான் சொல்லமாட்டேன். ஆனால் காவல் துறைக்குத் தெரியும்
என்பதை மறுக்கமாட்டேன். இந்தக் குற்றத்தைச் செய்கிற
வர்கள், அவர்களிடம் சிக்கிக் கொள்ளக்கூடாது; அவர்களிடம்
மாட்டிக்கொள்ளக்கூடாது; அவர்களுடைய தயவு வேண்டும்
என்பதற்காக ஏதோ ஒரு முறையிலே அவர்களுடைய தயவை,
அவர்களுடைய ஆதரவைப் பெற்று இந்தக் குற்றத்தைச் செய்கிற
முயற்சியிலே ஈடுபடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த
ஒன்று. இன்றைக்கு இருக்கிற நாட்டு நடப்பில் இதை யாரும்
தனிப்பட்ட முறையில், யாருக்கும் தெரியாமல் செய்யவில்லை;
சிலருடைய உதவியோடுதான் இந்தக் குற்றத்தைச் செய்
கிறார்கள்.

சமுதாயம் மேலும் மேலும் சீரழிந்து வருகிற நிலை இன்றைக்கு
இருக்கிறது. இந்தக் குற்றத்தைச் செய்கின்றவர்கள் யாரால்
தண்டிக்கப்படுவோம் என்று கருதினார்களோ, யாரிடம் சிக்கிக்
கொள்வோம் என்று கருதுகிறார்களோ, யாரால் நிர்ப்பந்தம்
ஏற்படும் என்று கருதுகிறார்களோ அவர்களை ஏதோ ஒரு
வகையில் தொடர்கொண்டு, ஏதோ ஒரு வகையில் அவர்களைச்
சரிக்கட்டி, அவர்களை சாதகமாக வைத்துக்கொண்டு இப்படிப்
பட்ட குற்றத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை இந்த அரசு
மறந்துவிடக்கூடாது.

ஏற்கெனவே கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப் பற்றிக்
குறிப்பிடும்போது, இந்த அரசின் சார்பிலே முதலமைச்சர்
அவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் பட்டியல் எல்லாம்
என் கையில் இருக்கிறது என்று அறிவித்தார்கள். அப்படி
இருக்கும்போது காவல் துறைக்கு நடவடிக்கை எடுக்க என்ன
தடை இருந்தது? அந்தப்பெயர் பட்டியல் அரசாங்கத்திற்குத்
தெரிந்த இருந்தபோதிலும் இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை
எடுக்க முடியவில்லை. இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கை
எடுக்க முடியாததால் இந்த சட்டம் வருகிறது என்று சொல்ல
இந்த அரசுக்கு வாய்ப்பு இருக்கிறதா? ஏற்கெனவே இருக்கிற
சட்டத்தின்படி யாராவது கைது செய்யப்பட்டார்களா? ஏற்
கெனவே உள்ள சட்டம் யாரை கைது செய்வதை தடுத்தது?
ஏற்கெனவே உள்ள சட்டம் காவல் துறை முறையாக இயங்காமல்
எங்கே தடுத்தது? ஏற்கெனவே உள்ள சட்டம் அந்த தண்டனை
விதிகள் இல்லாத காரணத்தால் அந்தச் சட்டம் மீறப்பட்டதா,
ஏற்கெனவே உள்ள சட்டம் விபசாரத்தைத் தடுக்க பயன்பட
வில்லையா? ஏற்கெனவே உள்ள சட்டத்தில் விபச்சாரத்திற்கு
தண்டனை இல்லையா? குண்டர்களைப் பிடித்து போலீசார் நீதி
மன்றத்திலே நிறுத்தினால் தண்டனை கிடையாதா? கொலை
காரர்களைப் பிடித்து நீதிமன்றத்திலே நிறுத்தினால் தண்டனை
கிடையாதா? இவ்வளவும் இருந்து கூட நாங்கள் முறையோடு

செய்கிறோம் என்ற அந்த நம்பிக்கை எங்களுக்கு இல்லை; இனி நாங்கள் முறையில்லாமல் காரியங்கள் செய்யப் போகிறோம் என்று இந்த அரசாங்கம் சொல்லுமேயானால் நாளையதினம் நீங்கள் மாறி, வேறு ஒரு கட்சி ஆளுங்கட்சியாக வந்து அமருகிறது என்றால், இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கிறவர்களை இந்த சட்டத்தின் மூலம் பொய்யாகவாவது, உண்மையில்லாமலே கூட பிடித்து உள்ளே போடும் பழிவாங்கும் நிலைமை ஏற்படாதா? அந்த பழிவாங்கும் எண்ணத்தோடு காவல் துறை செயல்பட்டு, அவர்களை உள்ளே பிடித்துப்போடும் நிலைமை இன்றைக்கு இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கோ, அமைச்சர்களுக்கோ ஏற்படாவே ஏற்படாதா? எல்லோருமே நேர்மையாக இருப்பார்கள் என்று இந்த அரசு நம்புகிறதா?

நான் இன்னும் சொல்கிறேன் மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சாதாரண எ.டி.எஸ்.பி. என்ற அதிகாரியை நியமித்து, அவருக்குக் கீழே 40 அல்லது 50 காவல் துறையினரை நியமித்து, அவர்களுக்கு ஒரு வேன் கொடுத்து, அவர்களைக் கொண்டு ஒரு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டு பிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறீர்களே. இந்த 40 பேர்கொண்ட காவல் படையினர் ஒரு மாவட்டம் முழுவதும் சுற்றிவந்து; எந்த இடத்தில் கள்ளச்சாராயம் உற்பத்திச் செய்யப்படுகிறது, எந்த இடத்தில் விற்பனை ஆகிறது என்று அந்த இடங்களைக் கண்டுபிடித்து, கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா? காவல் துறையினர் மொத்தமாக இருக்கும் போது தவறு ஏற்படுகிறது. ஆகையால் இவர்களை நியமித்திருக்கிறோம் என்று சொல்வீர்களேயானால் இவர்களால் தவறு நடக்காதா? எந்த ஊருக்குப் போகவேண்டுமென்றாலும் அந்த ஊர் காவல் துறையினர் ஆதரவு இருந்தால் தான் இவர்களால் போக முடியுமே தவிர, தவறு செய்கிறவர்களைக் கண்டுபிடிக்க முடியுமே தவிர, இவர்கள் தனித்துப்போய் செய்யமுடியாது அந்த ஊரில் இருக்கிற காவல் துறையினருக்கு நேரடியாக அங்கே உள்ள கள்ளச்சாராய வியாபாரிகளிடம் தொடர்பு இருந்தால் இவர்கள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்திய நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி அரசாங்கத்திற்கு வரவில்லையா?

(பிற்பகல் 12.50)

காவல் துறையை மொத்தமாக நம்ப முடியாத நீங்கள், சாதாரண கள்ளச்சாராய வியாபாரத்திலே, காவல் துறையினரை மொத்தமாக நம்பி நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கலாம், எல்லா காவல் துறையினருக்கும் இந்த பொறுப்பு உண்டு என்று சொல்லமுடியாத நீங்கள் இந்தச் சட்டத்தை யாரிடத்திலே ஒப்படைக்கப் போகிறீர்கள்? கலெக்டரிடத்திலே மட்டுமா? அமைச்சருக்குத் தெரிந்துதான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்கு ஏதாவது முறை



உண்டா? நாளையதினம் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டால், அமைச்சரைக் குற்றம் சாட்டினால், அந்த அமைச்சர் பதவியை விட்டு விலகத் தயாரா? இந்தச் சட்டம் தவறாகவே பயன்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பான முறையிலே செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது, இதை நீங்கள் யாரிடத்திலே ஒப்படைத்து செயல்படுத்த வேண்டுமோ, அவர்கள் அம்முறையில் செயல்படுவார்கள் என்று நம்புகிறீர்களா?

விபச்சாரக் குற்றம் என்பது சமுதாயத்திலே யாரோ சில பேர், ஏழைகளோ அல்லது வேறுவிதமாக வாழ வழியில்லாதவர்களோ, அல்லது எப்பொழுதோ கெட்டுப் போனவர்களாக சொல்லப்படுபவர்களோ, அல்லது வசதி மிக்கவர்களோ, யாரோ சிலபேர் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை இப்போதுள்ள சட்டத்திலே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்களைப் பிடிப்பதிலே என்ன தடை இருக்கிறது?

நாளையதினம் இந்தச் சட்டத்தின் மூலமாக ஏதோ ஒரு யாரோ ஒரு இளைஞனிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறாள், பழகிக் கொண்டிருக்கிறாள்; என்பதால் காவல் துறை அந்தப் பெண்மணியினுடைய நடவடிக்கையைச் சந்தேகப்படுகிறது. அந்தப் பெண்மணியைக் கைது செய்கிறது. போர்டுக்குப் போகிற வரை, 3 மாத காலம் அந்தப் பெண்மணி சிறையிலே இருக்க வேண்டும். போர்டுக்கு போயுங்கூட நியாயம் தெரியவில்லையென்றால், அந்தப் பெண்மணி மறுபடியும் சிறையிலே இருக்க வேண்டும். அப்படி 3 மாத காலம் ஒரு பெண்மணி விபச்சாரக் குற்றம் செய்யாமலேகூட தவறாகப் போடப்பட்டிருந்தால், அந்தப் பெண்மணி 3 மாதகாலம் சிறையிலே இருந்தது, பின்னாலே அந்தப் பெண்மணியினுடைய வாழ்க்கை என்னவாகும்? யார் அதற்கு பொறுப்பு? ஒரு விபச்சாரமே நடைபெற்று இரண்டு பேர் பணம் கொடுத்து ஏமாந்து போயிருந்தால் கூட, நோய் வாங்கிக் கொண்டு போனால்கூட இந்த சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை. ஆனால் ஒரு பெண்மணி தவறாக கைது செய்யப்பட்டு ஒரு குற்றத்திற்கு ஆளாகி 3 மாத காலம் அவள் குற்றம் செய்யாமலே அந்தத் தண்டனையை அனுபவிக்க நேர்ந்து விட்டால், அந்தப் பெண்மணி நம்முடைய வீட்டு பெண்மணியாக இருந்தால், நம்முடைய குடும்பத்திலுடைய கதி என்ன? நம்மைப் போல சமுதாயத்திலே மதிக்கப்படுகிறவர்களுடைய வீட்டு பெண்மணி ஒருத்தி ஏதோ படிக்கிற இடத்தில் அல்லது பயில்கிற இடத்தில் எப்படியோ ஒரு நிலைமைக்கு ஆளாகி கைது செய்யப்பட்டால் யார் காப்பாற்றுவது? எந்த நீதிமன்றத்திலே இதற்கு நியாயம் கிடைக்கும்? அப்பொழுது நீதிமன்றத்திலே நியாயம் கிடைக்கிற வரையில் அந்தப் பெண்மணியினுடைய பெயர் பாழாக்கப்படுவதற்குக் காரணமாகும். இந்த அரசாங்கம் அந்தப் பழியிலிருந்து எப்படி தப்பும்?

நான் கேட்க விரும்புகிறேன், இப்படி யாரையாவது குண்டர் என்றோ, அல்லது கள்ளச்சாரயம காய்ச்சுபவர் என்றோ, அல்லது அக்கிரமக்காரர் என்றோ, அல்லது விபச்சாரி என்றோ இந்த அரசாங்க, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கைது செய் வதற்கு முன்னால் இரண்டு மூன்று தடவையாவது, ஏற்கனவே உள்ள சட்டத்திலே கைது செய்து, அவர்களை நீதிமன்றத்திலே நிறுத்தி ஒரு முறை, இரு முறை தண்டிக்கப்பட்டு, அப்படி தண்டிக்கப்பட்டவர்கள் மறுபடியும் தொடர்ந்து இந்தக் குற்றம் செய்ததாக காவல் துறைக்கு தெரிந்து மேலே தெரிவிக்கப்பட்ட நீதிமன்றத்திற்கு கொண்டு போனாலும் அவர்கள் ஜாமீனிலே வந்தால் தொடர்ந்து அந்தக் குற்றம் செய்வார்கள் என்று விளக்கம் தந்து, கைது செய்யக்கூடிய வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இருக் கிறதா? அந்த பாதுகாப்புக் கூட இல்லாமல் அப்படி ஒரு சட்டமா? அக்கிரமத்தை அரசாங்கமே செய்வது என்று ஆரம் பித்தால், நாட்டிலே மற்றவர்கள் செய்தால் மட்டும் எப்படி குற்றம் என்று நான் கேட்கிறேன். அரசாங்கத்திலே எத்தனையோ அதிகாரிகள் இலஞ்சம் வாங்குகிறார்கள் என்ற கதை நாட்டிலே இருக்கிறபொழுது, அரசாங்கத்திலே காவல் துறை யிலே சிலபேர் காவல துறையிலே உள்ளவர்களைக் கற்பழித் தார்கள் என்ற ஒரு கதையோ, செய்தியோ வெளியிலே வருகிற பொழுது, காவல் நிலையத்திலே கொண்டுபோய் வைக்கப்பட்ட பெண்கள் இரவு நேரத்திலே வீட்டிற்கு அனுப்பப்படாமல் அங்கே கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வருகின்றபொழுது சில இடத் லே பெண்களை விபசாரத்திலே ஈடுப்பட்டதாகக் குற்றத்தைச் சாட்டி அழைத்து வந்து யாரோ பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற செய்தி வருகின்றபொழுது, அந்த அநீதிக் கெல்லா அப்பாற்பட்ட வகையில் ஒரு பொது நீதியை காப்பாமிறக்கூடிய ஒரு அரசாங்கத்தை இந்த நாட்டிலே யாரும் நடத்த முடியாது, என்ற நிலையில் முதலமைச்சர் எம். ஜி. ர். மட்டுமல்ல, யாரும் நடத்த முடியாது. எனவே அவர்மீது மட்டும் சொல்கிற குற்றமாகக் கூடக் கருதவேண்டாம். அவர் அவ்வளவு புரிய நவர். ஆனால் நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன், கடுமையான சட்டம் விபரீதமான விளைவை ஏற்படுத்தும். இந்தச் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய ஆற்றல் இந்த அரசாங்கத் திற்குக் கிடையாது. ஜனநாயகத்திலே இன்றைக்கு ஏறத்தாழ பல அரசாங்கங்களுக்குக் கிடையாது. இந்தச் சட்டத்தைக்கடுமையாக தயாரித்திருக்கிற நீங்கள் இதனை நிறைவேற்றுவதை யாரிடத் திலே ஒப்படைக்கப் போகிறீர்கள்? அதனுடைய விளைவு பேரா பத்தானதாக இருக்கு , எனவே என்னுடைய முழு அறிவையும் பயன்படுத்தி, நான் சார்த்திருக்கிற கட்சிக்காக அல்ல என்னுடைய கட்சியைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரி யு. ஆனால், நான் மனித சமுதாயத்தினுடைய நீதி என்ற டிப்படையில் இதுவரையில் ஏற்பட்டிருக்கிற னுபவத்திற்குப் பின்னாலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது, அரசாங்கம் ன்னைத் தானே ஒரு சிக்கலுக்கு ஆளாக்கிக்கொண்டு, அபலை



களை, அனாதைகளை பாதுகாப்பற்றவர்களைக் கொடுமைக்கு ஆளாக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஒரு பயங்கரமான நிலைமை இந்தச் சட்டத்திற்குப் பின்னாலே இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்து, இந்த சட்டத்தை மறுபடியும் வலியுறுத்தி, இந்த அவையிலே நிறைவேறவேண்டிய நிலைமை ஒரு வேளை இருக்குமானால், நாங்கள் இங்கேயிருந்து இந்தச் சட்டம நிறைவேறுவதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருப்பாம என்பதையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசு கின்றபோது இந்தத் தடுப்புக் க வல் சட்டத்தின்படி தவறு செய்யாதவர்கள் மீதும் கூட காழ்ப்புணர்வோடு நடவடிக்கை எடுப்பதற்கு பயன்படக்கூடிய சட்டமாக இது அமைந்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றும் சிலர் பேசுகின்றபோது என்,எஸ்.ஏ இருக்கும் போது ஏன இந்த சட்டம் என்றும் இந்தச் சட்டம் குடிசை வாழ் மக்களையு , பெண்களையும் மிகவும் பாதிக்கும் சட்டமாக அமையும் என்றும் இங்கே சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை சட்ட முன் வடிவிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச சட்டம் சரியான சட்டமா என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் எழுப்பினார்கள்., Whereas the instructions of the President have been obtained in pursuance of the proviso to clause 1 of Article 213 of the Constitution. என்று இதிலே காட்டப்பட்டிருக்கின்றது. எற்கெனவே குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்றுதான் இந்த அவசரச் சட்டமே வந்தது. ஆகவே சட்டத்திற்கு உட்பட்டுத்தான் வந்திருக்கின்றது. (Interruption). I am coming to it.

அடுத்து என்.எஸ்.ஏ. இருக்கின்றபோது இந்தச் சட்டம் ஏன் என்ற வினாவை எழுப்பினார்கள். என்.எஸ்.ஏ. சட்டத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது பாராளுமன்றத்திலே இந்த2 சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை. இந்தச் சட்டத்தினுடைய பிரிவுகள் தவறாகப் பயன்பட்டுவிடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது நான் மகிழ்வடைகிறேன் என்று கூட மாண்புமிகு மாறன் அவர்கள் சொன்னதாக இந்த அவையிலே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் படித்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக என்.எஸ்.ஏ. சட்டத்திற்கு உங்களுடைய ஆதரவைத் தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர் கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது என்.எஸ்.ஏ. சட்டம் கூட பொதுநோக்கம் உடையது. அந்த

பொது நோக்கம் கூட இதிலே இல்லையே என்றும் நாட்டுப் பாதுகாப்பாவது அதிலே இருக்கின்றதே. இதிலே அது கூட இல்லையே என்று சொன்னார்கள். என்.எஸ்.ஏ. விலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது அதிலே

"If satisfied with respect to any person, that with a view to preventing him from acting in any manner prejudicial to the defence of India." என்று இருப்பது மட்டுமல்ல, அதை அடுத்து

In Clause 3 (2) "the Central Government or the State Government may, if satisfied with respect to any person, that with a view to preventing him from acting in any manner prejudicial to the security of the State or from acting in any manner prejudicial to the maintenance of the public order'.

என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"or from acting in any manner prejudicial to the maintenance of the supplies and services essential to the community it is necessary so to do" எனவும் இருக்கின்றது.

in any manner prejudicial to the maintenance of public order. என்று இருக்கின்றது.

என் எஸ்.ஏ.விலே மிகவும் "பிராடாகச்" சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் என்.எஸ்.ஏ.விலே மெய்ட்டனன்ஸ் ஆஃப் பப்ளிக் ஆர்டர் என்று சொல்லி விட்டு, அந்த பப்ளிக் ஆர்டர் என்ன என்பதைப் பற்றி தெளிவாகச் சொல்லவில்லை அதற்கு விளக்கமும் தரவில்லை. அப்படி தெளிவாக்கப்படாத நேரத்திலே என்.எஸ்.ஏ.விலே யாரை வேண்டுமானாலும் கைது செய்வதற்குக் கூட சில நேரங்களிலே வாய்ப்பு இருக்கின்றது. பப்ளிக் ஆர்டர் எந்தெந்த விதத்திலே பாதிக்கப்படுகின்றது என்பதை அங்கே சுட்டிக்காட்டவில்லை.

(பிற்பகல் 1.00)

ஆங்கு அதை கண்டிப்பாக எதிர்த்திருக்க வேண்டும். அந்த Prejudicial to the maintenance of Public Order என்பதை, என்ன வென்றுதான் இந்தச் சட்டத்திலே, இந்த சட்டமுன்வடிவிலே நாங்கள் விளக்கியிருக்கிறோம். அதற்கும் இதற்கும் உள்ள மாறுபாடு, மிக முக்கியமான மாறுபாடு அதுதான். என்.எஸ்.ஏ.வில் வெறுமனே பப்ளிக் ஆர்டர் என்று மட்டும் போட்டு அதை எப்படி வேண்டுமானாலும் யார் வேண்டு மானாலும், யாருக்கு எதிராக வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இருப்பதை மாற்றி, அதிலே பப்ளிக் ஆர்டர் என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறோம். தெளிவாக எக்ஸ்பிளனேஷன் சொல்லப்பட்டிருக்கிறது.



"Explanation— For the purpose of this clause (a), public order shall be deemed to have been affected adversely, or shall be deemed likely to be affected adversely, inter alia, if any of the activities of any of the persons referred to in this clause (a) directly or indirectly is causing or calculated to cause any harm, danger or alarm or a feeling of insecurity, among the general public or any section thereof or a grave or widespread danger to life or public health

ஆகவே, இதைத்தான் நான் முக்கியமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல சட்டங்கள் இருக்கிறபோது அந்தச் சட்டங்களிலே நடவடிக்கை எடுக்கலாமே, சப்பிரஷன் ஆப் இம்மாரல் பிரிவென்டிவ் ஆக்ட் இருக்கிறதே, டிரக் அபெண்டர்ஸ் ஆக்ட் இருக்கிறதே, இண்டியன் பீனல் கோடு இருக்கிறதே, கிரிமினல் புரொசீஜர் கோடு இருக்கிறதே, டிரஸ் பாஸ் ஆக்ட் இருக்கிறதே, குண்டர்களுக்கு என்று தனியாக ஆக்ட் இருக்கிறதே, அப்படி இவைகள் எல்லாம் இருக்கிறபோது இந்தச் சட்டம் தேவைதானா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்போது கூறினார்கள். அதிலே நான் ஒன்றை தெளிவாக்க விரும்புகிறேன். தற்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற, பப்ளிக் ஆர்டர் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தந்து கொண்டு வரப் பட்டிருக்கிற, இந்தச் சட்டமுன்வடிவிற்கும், நடைமுறையில் இருக்கிற சட்டங்களுக்கும் பெருத்த மாறுபாடு இருக்கிறது. தற்பொழுது கொண்டு வருகிற சட்ட முன்வடிவினைப் பொருத்தவரைக்கும் This is preventive ஏற்கெனவே இருக்கிற சட்டங்களைப் பொறுத்தவரைக்கும் They are punitive in nature. இதை அவை நன்றாக அறியும்.

இதுகுறித்து சுப்ரீம் கோர்ட்டிலே கூட ஒரு தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள், A prosocution or the absence of it is not an absolute bar to an order of prenventive detention என்று.

இந்தச் சட்டமே செல்லுமா என்று கூட கேள்வி எழுப்பினார்கள். உச்ச நீதிமன்றமே ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. இதை ஒட்டிய சட்டம் தமிழகத்தில் மட்டும் அல்ல, மற்ற மாநிலங்களிலேகூட நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பிறகு நான் அதை விளக்கிச் சொல்கிறேன். A prosecution or the absence of it is not an absolute bar to an Order of Preventive Detention. The authority may prosecute the offender for an isolated act or an act of an offence for violation of any Criminal law .. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். It is not an absolute bar, to an order of detention. The authority may prosecute the offender for an isolated act or an act of offence for violation of any criminal law but if it is satisfied that the offender is an Agency to go on violating such law, then there will be no bar for the State to detain him under the Preventive Act in order to disable him to repeat such offences,

உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஒருவன் ஒரு குற்றத்தை செய்வானேயானால், அந்தக் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்படுமேயானால், அதற்குப் பிறகும் தொடர்ந்து அந்தக் குற்றத்தையே அவன் செய்வானேயானால் If he indulges in an offence, not merely because he commits an offence, even if he indulges in an offence . . . . பிறகு அதனை தடுத்தாக வேண்டும். அந்த நடவடிக்கைகளிலிருந்து சமுதாயம் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். பொது அமைதி பாதுகாக்கப்பட வேண்டும். பொது சுகாதாரம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

அது மட்டும் அல்ல, Order of detention was essentially a preautionery measureand was based on the reasonable fresh Not ce of the futurebe haviour of a person, based on his past conduct judged in law by the surrounding circumstanc e, என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். The past conduct or antecedent history of a person can appropriately be taken into account in making a detention order. It is indeed largely from prior events showing the tendency or inclination of a person with an inference can be that he is, in future, likely to act in any manner prejudicial to the maintenance of a publicorder or public health.

என்ற அடிப்படையில்தான், இது தடுப்புக் காவல் சட்டமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, இந்தச் சட்டம் ஏதோ எங்குமே இல்லாது இங்கு மட்டும் வருகிற சட்டம் என்று பொருள்படச் சொன்னார்கள். அப்படி இல்லை. மத்திய அரசு கூட 16-9-1980-ல் மாநில அரசுகளுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிறார்கள். At the meeting recently held by the Home Ministry the Senior Officers of this department discussed various measures with a view to improve the law and order situation in the country. To deal effect-ively with anti-social elements, it was felt that some legal powers should be made available to the law enforcing Agencies for the exter-mination of criminal, anti-social elements and goondas. நாடு கடத்தப்படவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாநில அரசு சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது அவர்கள் உதாரணத்திற்காகச் சுட்டிக் காட்டுகிறார்கள். The consensus wasthat such power if effectively used, apartfrom having good impact in the public mind, would also help in containing the activities of bad characters. அது மட்டுமன்று, in this regard various Acts such as The Utter Pradesh Control of Goondas Act of 1970, The Rajasthan Control Act of Goondas 1975, The Punjab prvention of Anti-Social and Hazarduous activities



Bill 1976 which was subsequently made into law, and the Bihar Control of Criminals Bill of 1978 which was subsequently made into law, were passed. The Central Government has stated that the Bills inducted by the Governments of Uttar Pradesh, Rajasthan, Punjab and Bihar were considered to be useful. மாநில அரசு இதைப் பயன்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பார்த்து அதேபோல் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

திரு. அ. [illegible]: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இதுபோன்ற சட்டங்களை எல்லாம் போடவேண்டும் என்று கேட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். இந்திதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் தமிழகத்தில். அதுதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று மத்திய அரசு சொல்லி வந்தால் ஏற்பீர்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஏதோ தமிழ்நாட்டுக்கு மட்டுமே புதிதாகக் கொண்டு வரப்படுகிற சட்டம் என்ற கருத்துவரும்படி சில உறுப்பினர்கள் பேசியதற்காக சொல்லப்படுகிற பதிலே தவிர—மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரராஜ் அவர்கள் பேசுகிறபோது என்.எஸ்.ஏ.-க்கும் இதற்கும் ஒப்பிட்டு பேசுவது அது வேறு இது வேறு என்று, மற்ற எங்கும் இப்படிப்பட்ட சட்டம் இல்லை என்ற உணர்வுபட பேசியதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், ஆகவே விளக்குகிறேன்.

இந்திமொழியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மைய அரசு தாக்கீது அனுப்புமானால் அதை அறவே இந்த அரசு ஏற்காது என்பதை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம். அதை அவையும், உறுப்பினர்களும் அறிவார்கள்.

இது மட்டுமல்ல. நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதுபோல், மராட்டிய மாநிலம், ராஜஸ்தான் மாநிலம் போன்ற மாநிலங்களில் எல்லாம் கூட பல ஆண்டுகளாக இது நடைமுறையில் இருந்து வருவதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது இந்தச் சட்டத்தால் கைது செய்யப்படுகிறவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் இல்லை என்று பொருள்படும்படி சொன்னார்கள். அப்படி இல்லை. என்.எஸ்.ஏ.-க்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்று சொல்லிவிட்டேன். இந்தச் சட்டத்தில் என்.எஸ்.ஏ.-வில் இருப்பதுபோல் இருக்கிறது என்று சொன்னேன். அதுபோல் இதில் [illegible] ஒரு அட்வைசரி போர்டு இருக்கிறது. கைது செய்யப்பட்டவுடன் ஐந்து தினங்களுக்குள் எதற்காகக் கைது

செய்யப்பட்டார் என்ற காரணத்தை அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். அப்படி அவர்கள் அதைச் சொன்ன பிறகு 12 தினங்களுக்குள் அரசாங்கத்தினிடம் அதற்கு அனுமதி பெற்றாக வேண்டும். பிறகு 21 நாட்களில், என்ன காரணத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டார் என்பதையும் அந்தக் காரணங்களையும் அப்படிப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அனுப்பி அவர்களிடமிருந்து பெற்ற விளக்கங்களோடு அட்வைசரி போர்டுக்கு அனுப்பவேண்டும். (குறுக்கீடு)

(பிற்பகல் 1.10)

அட்வைசரி போர்டைப் பொறுத்தவரைக்கும், மிகமிகத் தெளிவாக இந்தச் சட்டமுன்வடிவிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு அங்கே வாய்ப்பு தரப்பட்டிருக்கின்றது. 11-வது பிரிவிலே,

'........in any particular case the Board considers it essential so to do or if the person concerned desires to be heard, after hearing him in person, submit its report to the State Government, within seven weeks from the date of detention of the person concerned.'

என்றிருக்கிறது. அட்வைசரி போர்டிலே அவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பு தரப்படுகிறது.

வழக்கறிஞர் ஒருவரை வைக்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஏற்கனவே எழுப்பியிருக்கிறார்கள். மற்றவர்களும் இதுகுறித்துப் பேசினார்கள். வழக்கறிஞர் ஒருவரை வைப்பதைப் பொறுத்தவரைக்கும், "For a preventive detention, you cannot engage a Counsel. This is constitutionally prohibited under Article 22(1) (2) and (3) provisos." அரசியல் சட்டத்திலே இந்தத் தடை இருக்கின்ற காரணத்தினாலே, வழக்கறிஞரை வைக்க முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அரசியல் சட்டத்திலே என்ன தடை இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பிரிவு 22(1)லே

'No person who is arrested shall be detained in custody without being informed, as soon as may be, of the grounds for such arrest nor shall he be denied the right to consult, and to be defended by a legal practitioner of his choice.'

Nothing in clauses (1) and (2) shall apply—

(a) to any person who for the time being is an enemy alien; or



(b) to any person who is arrested or detained under any law providing for preventive detention. என மிகத் தெளிவாக இருக்கிறது. 2 (பி) யில் (b) to any person who is arrested or detained under any law providing for preventive detention என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, உதாரணமாக விபசாரம் என்ற பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது, பெண்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள்—காதலன் ஒருவனோடு காதலி பேசிக் கொண்டிருந்தால், அவனைக்கூட கைது செய்து 3, 4 மாதங்கள் தடுப்பில் வைத்துவிடலாம் என்ற பொருள்பட மாண்புமிகு பேராசிரியர் உள்படப் பலர் பேசினார்கள். விபசாரம் செய்வது,

"Under Article 22(5) when any person is detained in pursuance of an order made under any law providing for preventive detention, the authority making the order shall as soon as may be, communicate to such person the grounds on which the order has been made and shall afford him the earliest opportunity of making a representation against the order."

There is a constitutional prohibition to engage a legal practitioner of his choice. Therefore, under Art. 22(5) சட்டப்படி குற்றமாகும். ஆனால், சட்டப்படி குற்றமாகாது.

இந்த விபசாரத் தொழிலிலே ஈடுபடுகிறவர்களால் எழுகின்ற பிரச்சினைகள் காரணமாகத் தான் இந்தச் சட்டம் இங்கு பயன்படுத்தப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், பெண்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் இந்தச் சட்டம் போடப்பட்டது. பெண்களுக்கு கண்டிப்பாக இதனால் பாதிப்பு இருக்காது என்பதை நான் இந்த அவைக்கு முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விபசாரம் செய்கின்ற காரணத்தினால், 'பப்ளிக் ஆர்டர்' கெட்டுவிடாது.

There cannot be disturbance to public tranquility or peace.

விபசாரத்திலே ஈடுபடுகின்றவர்களைப் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

The Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956.

உறுப்பினர் இங்கேயும் அவைக்கூட சொன்னார்கள். செக்ஷன் 3-லே அதிலே பல பிரிவுகள் இருக்கின்றன.

3. Punishment for keeping a brothel or allowing premises to be used as a brothel.

விபசாரத் தொழில் தொழிலுக்காக இடத்தைத் நடத்துகின்றவர்கள், விபசாரத் தொழிலை வியாபாரமாக தருகின்றவர்கள்; விபசாரத் தொழில் நடத்துகிறவர்கள் அதைப் போலவே, செய்கின்றவர்கள், அதன்மூலம்

Punishment for living on the earnings of prostitution.

Procuring, inducing or taking woman or a girl for the sake of prostitution. Detaining a woman or girl in premises where prostitution is carried on. Prostitution in or within the vicinity of public places என்றிருக்கிறது. பெண்களுக்கு முழுக்க முழுக்க பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது. விபச்சாரத் தொழில் ஈடுபடுகிறவர்கள் என்றல் பெண்களை இந்தச் சட்டம் கைது செய்யும் என்று நீங்கள் எண்ண வேண்டாம். இந்தச் சட்டம் பெண்களுக்குப் பாதுகாப்பு தருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் சொன்னதுபோல் பஸ் நிலையத்திலே பேருந்துக்காக காத்துக் கொண்டிருக்கின்ற பெண்களைக்கூட கடத்திச் சென்று காணாமல் போன பெண் விபச்சார விடுதியில் மீட்கப்பட்டாள் என்ற நிலைகளை பாரதம் தழுவிய பல இடங்களில் கேள்விப்படுகிறோம். நடைபெற்று வருகிற உண்மை. ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று அவளை ஈடுபடுத்திய பிறகு ஒரு குடும்பப் பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்திய பிறகு சட்டம் இருக்கிறது, சப்ரஷன் ஆப் இம்மாரல் டிராபிக் ஆக்ட் இருக்கிறது, ஐ.பி.சி. இருக்கிறது. சி.ஆர்.பி.சி. இருக்கிறது அவைகளின் பிரகாரம் தடுத்துக்கொள்ளலாம் என்றால் அந்தப் பெண்ணுக்கு கண்டிப்பாக பாதுகாப்பு கிட்டாது. விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்ற ஒருவன் ஒரு பெண்ணைக் கடத்திவிட்ட பிறகு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்திய பிறகு அவனை இருக்கின்ற சட்டப்படி தண்டனைக்குள்ளாக்குவதற்காக எத்தனை ஆண்டுக்காலம் ஆகும் என்பதை நாட்டிலே உள்ள நீதிமுறையின் அடிப்படையில், வரைமுறையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதது அல்ல. ஆனால் அதற்குள் அவன் தண்டனையை ஒருவேளை பெறுவான் என்றாலும்கூட ஆண்டு பலவாகும் என்ற காரணத்தினால் எத்தனை பெண்களை அவன் விபச்சாரத்தில் ஈடுபடுத்துவான், பெண்களை கிட்நாப் செய்வான், அப்டக்ட் செய்வான் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கண்டிப்பாக அத்தகைய கொடியவர்களிடமிருந்து நம் தாய்க்குலத்தைப் பெண்களைக் காப்பாற்றியாக வேண்டும். விபச்சாரத்தில் குடும்பப் பெண்களை ஈடுபடுத்துகின்ற தொழிலில் ஈடுபட்டு தாய்க்குலத்திற்கு அச்சமும் பயமும் ஏற்படக்கூடிய அளவுக்கு நமது திராவிடப் பண்பாட்டிற்கு பெண்குலத்திற்கு உள்ள பெருமையைக் கெடுக்கக்கூடிய அளவுக்கு ஈடுபடுகிறவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்தின் மூலம் இது தாய்க்குலத்திற்கு ஒரு பாதுகாப்புத் தரும் என்ற காரணத்தினால் இதை ஆதரிக்க வேண்டுமே தவிர பாராட்ட வேண்டுமே தவிர இனதப்பற்றிக்குறை கூறவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. துரைமுருகன் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர், வித் தி பர்மிஷன் ஆப் தி சேர் சார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: The hon. Member can raise the point of order after I conclude my speech. Now I am not yielding

திரு. துரை முருகன்: I am raising a point of order. When I raise a point of order, the Hon. Minister should yield.

அமைச்சர் ஒரு அபாண்டமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். கேள்வி கேட்போம், பதில் சொல்லட்டும், இல்லாவிட்டால் போகட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் பேசுகின்றபோது பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனோ அல்லது பாயின்ட் ஆப் எக்ஸ்பளநேஷனோ கேட்கலாம். அதற்குக்கூட இடம் கொடுத்தால்கூட சொல்லலாம். இடம் கொடுக்கவில்லையென்றால் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) அமைச்சர் கோர்வையாகச் சொல்லிக்கொண்டு வருகிறபோது வேண்டாம். அவர்கள் முடித்த பிறகு விளக்கம் வேண்டுமானால் இருந்தால் கேளுங்கள். குறுக்கீடுகள் வேண்டாம் என்று சொல்வதற்குப் பிறகு அதை கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நாவலர் அவர்கள் அமைச்சர் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கொடுக்கலாம் என்று சொன்னதால் அமர்கிறேன்.

(பிற்பகல் 1.20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உதாரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், விபச்சாரத்தின் காரணமாக தாய்க்குலம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதற்காக சில புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பல ஆண்டுகளினுடைய புள்ளிவிவரங்கள் இருந்தபோதிலும் குறிப்பாகச் சில ஆண்டுகளினுடைய புள்ளி விவரங்களை மட்டும் சொல்கிறேன். 1979 இல் கிட்டத்தட்ட 8,355 பெண்களைக் கடத்திச் சென்று விபச்சாரத்திலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அதனால் 6,839 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குடும்பப் பெண்களைக் கடத்திச் சென்று, விபச்சாரத்தில் ஈடுபடுத்திய காரணத்திற்காக. அதைப்போல, 8,443 பெண்களை 1980 ஆம் ஆண்டு கடத்திச் சென்று அவர்கள் விபச்சாரத்திலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். 8,019 பெண்களை 1981 ஆம் ஆண்டு கடத்திச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். இப்படி வழக்குகள் மட்டுமே ஒட்டுமொத்தமாக இது

காறும் 24,150 வழக்குகள் பல ஆண்டுகளாகப் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 24,150 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 24,880 குடும்பப் பெண்கள் இப்படிக் கடத்திச் செல்லப்பட்டு, குடும்பப் பெண்கள் கற்பழிப்பு, விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டதற்காக அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் பெண் குலத்திற்கு இது போன்று இழிவு ஏற்படக்கூடாது என்பதற்காக Those who are perpetually ndulgihg in activities of this sort should be prevented from indulg ng in such activities in future by wap of preventive deten ion That is the intention behin the proposed Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்போலவே கள்ளச் சாராயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது, இருக்கின்ற சட்டத்தில் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று கேட்டார்கள் இருக்கின்ற சட்டத்தில் நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படுகிறது. இருந்தபோதிலும் கூட, இந்தத் தடு புச் சட்டத்தின் மூலம் நான் ஏற்கெனவே சொன்னேன், ஒருவன் தவறைச் செய்தவுடன் நடவடிக்கை எடுத்து அவன் தண்டனை பெற மூன்றாண்டுகள் ஆகின்றன. ஆனால் தவறு எத்தகைய தவறு என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசியல் வாதிகள் மீது பாய்ச்சுவதற்காகக் கொண்டு வரப் பட்ட சட்டம் அல்ல பெண்களைக் கடத்தி, விபச்சாரத்தில் ஈடுபடுத்துகின்றவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும், கட்சி பேதம் இல்லாமல் நாம் அனைவரும் அதைத் தடுத்த க வேண்டும். அதைப்போலவே, கள்ளச்சாராயத்தைக் காய்ச்சுகின்ற காரணத்திற்காக மட்டும் நடவடிக்கை இல்லை; கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றபொழுது, இந்தச் சட்டத்தில் If it is prejudicial to Public health என்ற பிரிவும் சேர்க்கப்பட்டிருக் கிறது. இந்த அவையிலேயே பல உறுப்பினர்கள் சொல்லியிருக் கிறார்கள், எத்தகைய பொருட்களைக் கள்ளச் சாராயத்தில் கலக்கிறார்கள் என்பதைப்பற்றியும் எத்தகைய தீங்கு பொது மக்களுக்கு அதனால் விளைகிறது என்பதைப்பற்றியும் அ வையிலே பல சட்டங்களில் கூறியிருக்கிறார்கள். கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றவர்கள் அந்தக் கள்ளச்சாராயத்தில் ஊமத்தங் காயைக் கலக்கிறார்கள்; அதைப்போலவே கள்ளச்சாராயத்தில் மெத்தனால் என்ற விஷத்தைக் கலக்கிறார்கள். ஊமத்தங்காய் மனிதனுக்கு பைத்தியத்தை ஏற்படுத்திவிடும். ஹார்ட் அட்டாக் க ந்துவிடும் எனக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல க்ளோரைட், ஹைப்ரைட் என்று சொல்லப்படும் ஒரு விஷப் பொருள், போதை தரும் விஷ்ப்பொருள்களைக் கலக்கிறார்கள் இவைகள் கண் பார்வையை மங்கச் செய்து விடுகிறது ஹார்ட் அட்டாக்கை ஏற்படுத்துகிறது. அதைப் போலவே, விவசாயத்திலே பயன்படுத்துகிறோமே அமோனியம் குளோரைட், அதைக் கலக்கிறார்கள். அதனால் உடலுக்குப் பல தீங்குகள் ஏற்படுகின்றன. இப்படி ஒரு கள்ளச் சாராயப்



பேர்வழி கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்றபொழுது அவன் விஷப் பொருட்களை இப்படிக் கலந்து விடுவானேயானால் அப்படி கலந்து விட்ட பிறகு அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குள் எத்தனை உயிர்கள் மாய்கின்றன என்பதை அவை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பெங்களூரிலே அண்மையிலே நடந்த நிகழ்ச்சி தெரியும். எத்தனை பேர், நூற்றுக்கணக்கான பேர் கள்ளச் சாராயத்தில் விஷப்பொருள் கலக்கப்பட்ட காரணத்தால் எத்தனை உயிர் களைப் பலி வாங்கியது என்பது தெரியும்.

பம்பாயிலே சில ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி தெரியும்.

தமிழகத்தில் கள்ளச் சாராயத்தில் விஷப் பொருள்களைக் கலந்த காரணத்தினால் எத்தனைபேர் மாண்டார்கள் என்பதும், 1976-லே அதற்காகச் சட்டத் திருத்தமே கொண்டு வரப்பட்டதும் கூட அவைக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள் இதுபோன்ற கொடிய பொருட்களைச் சேர்ப்பதன் காரணமாக எவ்வளவு உயிர்கள் போகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி உண்டா என்றுகூட நீங்கள் ஒரு ஐயத்தை எழுப்பலாம். தற்போது இந்தச் சட்டம் வந்தபிறகுகூட கைது செய்யப்பட்டவர்களுள் சிலர், அந்தக் கள்ளச்சாராயத்தை போர்ரான்சிக் கெமிகல் லேபாரட்டரிக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அந்தக் கள்ளச் சாராயத் தில் பேட்டரி செல்கள், ஊமத்தங்காய், குளோரைட் போன்ற விஷப்பொருட்கள் எல்லாம் கலக்கப்பட்டதாக இரசாயனச் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இதுகாறும் கிட்டத்தட்ட 45 பேரை இந்தச் சட்டத்தின்கீழ் கள்ளச் சாராயம் காய்ச்சுதலில் ஈடுபட்டு விஷப்பொருளைக் கள்ளச்சாராயத்தில் கலந்து, அதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, கண்பார்வை மங்குதல், உடல் நலக் கோளாறுகள் ஏற்படுதல் போன்ற வழக்குகளில் இது வரையில் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்,

**திரு. துரை முருகன் :** சாராயம் எப்படிக் காய்ச்சுவது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். அதற்குத்தான் நெப்போலியன்களும் மாவீரன் களும் இருக்கிறார்கள்.

Let the Hon. Minister reply to the points raised by the Members. எதிர்க்கட்சிகள் கேட்டதற்கு, இந்த, இந்த பாய்ன்ட்டுக்கு, இது, இது பதில் என்று சொல்லவேண்டாமா? (குறுக்கீடுகள்)........

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கொடியவர்கள் உயிரைக் கொல்லக்கூடிய விஷச் சாராயத்தைக் காய்ச்சக் கூடாது என்பதற்

காகத்தான் இந்தத் தடைச் சட்டம், இந்தத் தடுப்புக் காவல் சட்டம் கொண்டுவரப்படுகிறது. தமிழகத்திலே இதிலே இதுகாறும், இதுபோன்ற விஷச் சாராயத்தைக் காய்ச்சுகின்ற வர்கள், இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் 45 பேர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கட்சி பேதமில்லாமல், யார் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் சரி, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கேட்டார், அனைவர் மீதும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என. கட்சிப் பேத மில்லை, இந்தக் கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று இல்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் இல்லை. அதிலே, 'நேச்சஸ்' நிருபணம் செய்யப் பட வேண்டும். கள்ளச் சாராயப் பேர்வழியாக இருந்து, கள்ளச்சாராயம் காய்ச்சி, அதனால் பாதிப்பு ஏற்பட்டு, நிருபணம் செய்யப்பட்டு, இரசாயனப் பரிசோதனையிலே நிருபிக்கப்படும் போது, அது யாராக இருந்தாலும், இந்தச் சட்டத்திலேயிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது.

நிரபராதிகள்மீது நடவடிக்கை கூட எடுக்க முடியாது. The Supreme Court has given several guidelines in this regard. மாண்பு மிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூடத் தெளிவாக அதை அறிவார்கள்.

குடிசைகளைப் பொறுத்த வரைக்கும் slum grabbers and goondas ஆகிய இரு சாரார்களைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி போன்றவர்கள் பேசுகின்ற போது, இது ஏழைகளைப் பாதிக்கின்ற ஒரு முறையிலே இருப்ப தாகச் சொன்னார்கள். அது மிகத் தவறான கணிப்பு. காரணம் ஏழைகள் மீது இந்த நடவடிக்கை இல்லை. சொல்லப்போனால் Slum grabbers and goondas ஆகிய இரு சாராரும் பணக்காரர்கள் என்ற நிலையிலே இருந்து பல தவறுகளைச் செய்துவருகிறார்கள். அரசுக்குச் சொந்தமான இடத்தை, தனியாருக்குச் சொந்தமான இடத்தை, ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். ரௌடிகளை வைத்து, தங்களுக்கே இருக்கிற திறமையின் காரணமாய், ஆக்கிரமிப்பு செய்து கொள்கிறார்கள். தனியாருக்குச் சொந்தமான எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. ஒருவர் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்கிறார், அடியாட்களை வைத்துக்கொண்டு ஆக்கிரமிப்பு செய்கிறார். இந்த இடத்தில் கட்டிடத்தைக் கட்டு கிறார். வாடகைக்கு விடுகிறார், சம்பாதிக்கிறார். அந்த இடத்தின் சொந்தக்காரர், என் சொந்த இடம், வீடு என்று நீதிமன்றத்திற்குச் செல்ல முயற்சித்தால்கூட, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகும்கூட, அவரை அடித்துத் துன்புறுத்தி, உதைத்து, பயமுறுத்தி, வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்ற நிகழ்ச்சிகள்கூட அங்கங்கே நடைபெற்றிருக் கின்றன.



அதுமட்டுமல்ல, சில இடங்களில் அரசுக்குச் சொந்தமான இடங்களிருக்கின்றன. கண்டிப்பாக அரசுக்குச் சொந்தமான இடங்களில் ஏழைகள் குடிசைகள் போடுவதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற சட்டம் இது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் பேசுகின்றபொழுது உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கு சென்று, குடிசைகளை அகற்றக் கூடாது என்று தடை வந்து விட்ட காரணத்தால் இது கொண்டு வரப்பட்டதோ என்று கேட்டார். அது மிகத் தவறு. எங்கே குடிசைகள் அகற்றப்பட்டன? அந்தக் குடிசைப் பகுதியிலே வாழ்கிற மக்கள், குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்குச் செல்ல வேண்டுமென்று வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால், அரசு தருகின்ற, குடிசை மாற்று வாரியம் தருகின்ற, கட்டிய வீடுகளுக்கு அவர்கள் செல்ல மறுத்து, நாங்கள் குடிசையிலேயே இருப்போம், ஆக்கிரமித்த இடங்களிலேயே இருப்போம் என்று சொன்னபொழுதுதான் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டார்கள். அதே போல், குடிசை என்றால், பல இடங்களில் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் குடிசை போட்டுக்கொள்கிறார்கள். அரசுக்குச் சொந்தமான இடங்களில் குடிசை போட்டிருக்கிறார்கள். அவர் களுக்குக் குடிசை மாற்று வாரியம் வேறு இடங்களில் கட்டிடம் கட்டித் தருகிறது. அவர்களை அங்கே அனுப்புகிறது. அவர்களுக்கு அங்கே பாதுகாப்புத் தரப்படுகிறது. ஆனால், சில சமுதாய விரோதிகள் குடிசைகளைப் போட்டு, ஏழைகளிடமிருந்து வாடகை வசூலித்து, அவர்களை நசுக்குகின்ற காரணத்தால், அந்தக் சமுதாய விரோதிகளுக்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதி யுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டர்கள் என்பதற்கு விளக்கம் இல்லை என பல உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். 'Goondar' means a person, who either by himself or as a member of or leader of a gang, habitually commits, or attempts to commit or abets the commission of offences, punishable under Chapter XVI or Chapter XVII of Chapter XXII of the Indian Penal Code. என்று தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றங்களை அவர்கள் செய்கின்ற காரணத்தினாலேயே குண்டர்கள் என்ற பிரிவுக்கு அவர்கள் கொண்டு வரப்படமாட்டார்கள். அவர்கள், They must habitually indulge in such offences. Offences falling under Chapters containing offences like offences to human body, property or Criminal Intimidation. ஆகிய பிரிவுகளில் அவர்கள் குற்றங்களைச் செய்கின்றபோது ராபரியில் ஈடுபடுகிறபோது, கொலைக் குற்றத்தில் ஈடுபடுகிற

போது, கொள்ளை அடிப்பில் ஈடுபடுகிறபோது, 'House-breaking, Criminal Intimidation, Criminal tresspass with force.' இது போன்ற கொடிய செயல்களில் அடியாட்களை வைத்து வன்முறையில் ஈடுபடுகிறபோது, அது ஏற்கனவே பல முறை நடந்து 'ஹாபிச்சுவல்' தொடர்ந்து அவர்கள் ஈடுபடுகிறபோதுதான் அவர்கள் குண்டர்கள் என்ற பிரிவுக்கு கொண்டு வரப்படுகிறார்கள். அதற்கு ஆதாரம் இருந்தாக வேண்டும், நிரூபிக்கப்படவேண்டும். அட்வைசரி போர்டுக்கு அவர்கள் விளக்கம் கேட்டுத் தருகின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் டிடெய்ன் செய்கிறபோது கூட அந்த நெக்சஸ்—காரணத்தை கண்டிப்பாக சொல்லியாகவேண்டும். எந்த சூழ்நிலையில் நடந்தது, எந்த தேதியிலிருந்து எந்த நேரத்தில், பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள் யார் என்ற விவரம் அவர்களுடைய வாக்குமூலம் அனைத்தும் இருந்தால் தான் அது நிரூபணமாகுமே ஒழிய ஏதோ ஒருவரைப் பிடித்து—அரசியல்வாதி வேண்டாதவர்களைப் பிடித்து— குண்டர்கள் என்ற பெயரிலே போட முடியுமா? மாவட்ட ஆட்சித் தலைவர்களே இருக்கின்ற விதிகளின் அடிப்படையில் செய்யமுடியாது. மீறிச் செய்வார்களானால் அட்வைசரி போர்டு கண்டிப்பாக அவர்களைத் தடுத்து விடும். அதையும் மீறி அட்வைசரி போர்டு கூட தவறு என்று நீங்கள் எண்ணினாலு கூட உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகளை வழங்கியுள்ளது. இதுதான் பிரஸ்கிரைப்ட் கைட்லைன்ஸ் என்று சொல்லியிருக்கிறது. அதை மீறி யார் ஒருவர் டிடெய்ன் செய்யப்பட்டாலும் உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே சொன்னதைப்போல உயர்நீதி மன்றம் தலையிட்டு அவர்களுக்கு விடுதலை தந்துவிடும். அதற்கான ஆதாரங்கள் பல இருக்கின்றன என்ற காரணத்தினால் அதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதி 16 இல் No suit, prosecution or other legal proceeding shall lie against the State Government or any Officer or person, for anything in good faith done or intended to be done in pursuance of this Act என்று சொல்லப்பட்டிருந்தபோதிலு கூட உச்சநீதி மன்றம் சில விதிமுறைகளை, வழிமுறைகளை வகுத்திருக்கிறது. இப்படி இருந்தால் தான் ஒருவரை டிடெய்ன் செய்கிறோம். சிலர் தவறுகள் செய்கிறார்கள். ஒருவர் ஒரு தவறிலே ஈடுபட்டு கொலை செய்துவிடுகிறார், பொதுஅமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகிறார், இன்னுமொரு தவறு, அந்தக் கொலையில் அவர் ஈடுபடுகின்றபோது பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகின்றபோது வழியிலே ஒரு ஆட்டைத் திருடி சாப்பிட்டுவிடுகிறார் என்றால் அந்த ஆட்டைத் திருடியது திருட்டுக் குற்றமாக இருந்தாலும் கூட That will not leave the provisions of N. S. A. or P.L.O என்ற காரணத்தினால் அந்த அடிப்படையில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. நீதிமன்றம் அவர்களுக்குப் பாதுகாப்பு தரும். பலவழக்குகள் ஏற்கெனவே மிசா, என்.எஸ்.ஏ போன்ற சட்டங்களின் அடிப்படையில் தொடரப்பட்டு அந்த வழக்குகள் எல்லாம் உச்சநீதி மன்றம், உயர்நீதிமன்றங்களிலே சென்று கிட்டத்தட்ட They have given perfected guidelines in regard to detentions.



"There are perfected guidelines in regard to such detention. If such perfected guidlines are violated, definitely the Courts have got the right to interfere taking into account the judgements already delivered by the Supreme Court and High Court concerned" என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது.

எனவே, மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மக்களின் நலன் கருதி சமுதாய விரோதிகளிடமிருந்து மக்கள் பாதுகாக்கப்படவேண்டுமென்ற நல்ல நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த சட்டமுன்வடிவை அரசியல் கட்சிகள் யாராக இருந்தாலும் சரி, தாய்க்குலத்திற்காக கொடிய சமுதாய விரோதிகளிடமிருந்து தாய்க்குலத்தைக் காப்பாற்றவும் விஷ சாராயம் காய்ச்சுவது போன்ற கொடிய செயல்களிலிருந்து மனித சமுதாயத்தை, தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கோடு கொண்டுவரப்படுகின்ற இந்தச் சட்டமுன்வடிவை சந்தேகக் கண்ணோடு பார்க்காமல் அனைவரும் ஆதரிக்க வேண்டி அமைகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சட்டத்தின் வரிகளுக்குத் தரவேண்டிய விளக்கங்களை எல்லாம் இங்கே தந்தார்கள். அப்படித் தருகிறபோது பெண்களைக் காப்பாற்றுவதற்காகவும், உண்மையான சமூகக் கேடு செய்கிறவர்களை அடக்குவதற்காகவும், இப்படிப்பட்ட கடுமையான முறையில் விஷம் கலந்து சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட குற்றங்கள் தடுக்கப்படவேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் மாறுபாடு இல்லை. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் 'ஹேபிட்சுவல் அபன்டர்' என்று இங்கே சொல்லப்படுமானால், அல்லது அதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறார் என்ற கருத்தில் இருப்பார்களானால் தான் கைது செய்யப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கைது செய்யப்படுகின்ற நேரத்தில் முறைகேடுகள் இருக்குமானால், அவர் உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது உச்ச நீதிமன்றத்திற்கோ சென்று மனு கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று எல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றம் ஏற்கனவே கொடுத்துள்ள கெய்டு லைன்ஸ்படி அவர்கள் மனு கொடுப்பது, விடுதலை பெறுவது என்கிற கட்டம் பின்னாலே வருகிறது.

சாதாரணமாக ஒரு முறை கூட குற்றம் செய்து நீதிமன்றத்தின் முன்னாலே தண்டிக்கப்படாத ஒருவர் தொடர்ந்து குற்றம் செய்து வருகிறார் என்று தவறாகக் கைது செய்யப்பட்டு, அந்த போர்டின் முன்பு அவர் தொடர்ந்து குற்றவாளியாக இருக்கிறார் என்று அரசாங்கத்தின் சார்பில் அதிகாரிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டால், அதுவரையில். நீதிமன்றத்திலே நிறுத்தப்படாத பெண்ணோ, நிறுத்தப்படாத குண்டர் என்று சொல்லப்படுகிறவரோ, அல்லது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களோ, அல்லது

நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தூண்டுவதற்கு பணம் கொடுக்கிறவர்களோ இந்த சட்டத்தாலே கைது செய்யப் பட்டால், அப்படித் தவறு செய்யாத ஒருவர் கைது செய்யப் பட்டால், அவருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை முதலில் ஒரு 2—3 மாதத்திற்கு ஏற்படுகிறது. எனவே இதற்கு முன்னாலே நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டு, 'Habitual offender in that particular respect' என்று சொல்லக் கூடியவர்களைத் தான் இந்தச் சட்டம் அணுகும் என்கிற பாதுகாப்பை இந்தச் சட்டத்திலே அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'பெண்கள்' என்று சொன்னார்கள். பெண்களை பற்றி இந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். விபச்சாரத்திலே ஈடுபடுகிற பெண்களைத் தடுப்புக் காவல் என்ற முறையில் கைது செய்வதற்கு சட்டத்திலே இடம் இல்லை. பெண்களைக் கடத்திச் சென்று அல்லது 'கிட்நேப்' செய்து, அல்லது 'அப்டக்' செய்து விபசாரத்தில் ஈடுபடுத்துகின்றவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்வது என்று சொன்னேன். எத்தனை பேர் இது போன்ற கொடிய செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : 'பெண்கள்' என்ற வார்த்தை இதிலே பயன்படுத்துகிற காரணத்தால், அந்தக் கண்ணோட்டம் ஏற்படுகிறது. கடத்திச் செல்பவர்களில் ஓரிரு பெண்களும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நன்றி. பெண்களும் இது போன்ற கடத்தல் தொழிலில் ஈடுபட்டு, இதுபோன்ற கொடுமைகளைத் தாய்க் குலத் திற்கு இழைப்பார்களானால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே சட்டத்திலே இடம் இருக்கிறது. பேராசிரியர் அவர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்கள் என்று நம்புகிறேன், அதற்காகப் பாராட்டுகிறேன்.

இன்னொரு விளக்கத்தையும் நான் தருவதற்கு விரும்புகிறேன். கைது செய்த 5 தினங்களுக்குள் அவர் என்ன காரணத்தால் கைது செய்யப்பட்டார் என்பது அவருக்குத் தெரிவிக்கப்பட்டாக வேண்டும். 5 தினங்களுக்குள் இன்ன காரணத்திற்காக, இன்ன அடிப்படையில், இந்த விதிகளுக்கு உட்பட்டு, இந்தத் தவறான காரியத்தில் ஈடுபட்டார், என்பதற்கான ஆதாரத்தை எல்லாம் அவருக்குத் தரவேண்டும். அதன் பிறகு அரசு' 12 தினங் களுக்குப் பிறகு அந்த டிடன்ஷன் அதாரிட்டி, மாவட்ட ஆட்சித்



தலைவரிடமிருந்து அந்தக் காரணங்களைப் பெறுகிறது. 5 தினங்களுக்குப் பிறகு காரணங்களைப் பெற்றவுடனேயே அவர் உயர்நீதி மன்றத்திற்கு நேரடியாகச் செல்வதற்கு வழிவகை இருக்கிறது.

அந்த வழிவகைகள் சட்டத்திலே இல்லையென்றாலும், சில வற்றைத்தான் சட்டத்திலே போடமுடியும்— சிலவற்றிற்கு ஏற்கனவே உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் அளித்து இருக்கும் தீர்ப்பின்அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் டிடன்ஷன் செய்யப்பட்ட 5 தினங்களில் ''காஸ் ஆப் டிடன்ஷன்'' கொடுக்கப்படுவதால் அவர்கள் உச்சநீதி மன்றத்திலோ, உயர் நீதி மன்றத்திலோ அதைச் சாலஞ்ச் செய்யலாம், குறைபாடு இருந்தால் விடுதலை பெறலாம். விடுதலை பெற்றும் இருக் கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.40)

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 24 மணி நேரம்கூட ஒரு குற்றமுமே செய்யாத ஒருவர் தவறான முறையிலே பிடித்து வைக்கப்படக்கூடாது, அந்த நிலைமைக்கு அவர் ஆளாக்கப்படக் கூடாது என்பது என்னுடைய கருத்து. 5 நாளைக்குள் விளக்கம் தருவோம் என்ற நிலை இதிலே ஏற்படக்கூடாது குற்ற வாளிகளை நீங்கள் கடுமையாக நடத்துவதை அல்லது கடுமையாக நடத்தும் வாய்ப்பை உருவாக்குவதை நான் எதிர்க்கவில்லை. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. குற்றங்களைச் செய்கிற வர்களுக்கு அப்படி வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் குற்றமே செய்யாதவரை பிடித்து வைத்துவிட்டு, 5 நாளைக்குள் விளக்கம், 12 நாள் போர்டு, அதற்குமேல் நீதிமன்றம் என்ற நிலை குற்றம் செய்யாதவருக்கு வரக்கூடாது. ஏற்கெனவே குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டவர்கள்மீது இந்தச் சட்டம் பாயட்டும், அவர்கள் மீது கை வைக்க வேண்டுமேயன்றி மற்றவர்கள் மீது கை வைக்கக் கூடாது. எந்த ஒரு காரணத்தாலும் குற்றம் இழைக்காத ஒருவரை இதிலே சிக்க வைத்து, பின்னால் பரிகாரம் என்பது கூடாது என்பதற்காக நான் வாதாடுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர வர்களே, மிகத் தெளிவாக நான் முதலிலேயே விளக்கினேன். யாரையும் இதிலே சிக்க வைக்க முடியாது. மேலும் உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் கைடுலைன்ஸ்படி கைது செய்யப்பட வில்லை என்றால், Even the Detaining Authority would be subject to strictures passed by the Supreme Court or High Court. என்பது நியதி. எந்த அதிகாரியும் அந்த ரிஸ்கை எடுத்து, அந்தத் தவறைச் செய்யமாட்டார் என்று நாம் நம்ப வேண்டும்.

அது மட்டுமல்ல. ஒரு குற்றத்தை ஒருவர் தொடர்ந்து செய்யாமல் ஒருமுறை அந்தக் குற்றத்தைச் செய்தாலும்கூட சில நேரங்களில் அவரைக்கூட தண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பெங்களூரில் ஒருவர் கள்ளச் சாராயம் காய்ச்சி—அது விஷம் கலந்தது—விற்றதில் நூற்றுக்கணக்கானவர்கள் அதை அருந்தி றந்துவிட்ட செய்தியை நாம் அறிவோம். அப்படி ஒரு ற்றத்தைச் செய்தவர் தொடர்ந்து விஷம் கலந்த கள்ளச் சாராயத்தை விற்று, இன்னும் பல்லரை கொன்றபிறகு, நீதிமன்றத் திற்குப் போய் நிரூபணம் ஆனால்தான் கைது செய்ய வேண்டு மென்ற நிலைமை இருந்தால் அதற்குள்ளாக எத்தனையோ உயிர்கள் பலியாகிவிடும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, என்னுடைய இந்த விளக்கத்தை ஏற்று, இந்த சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்கனே, ஒரு சிறிய விளக்கம். மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிசைவாழ் மக்களைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களில் அல்லது தனியார் இடங்களில் அத்துமீறி குடியிருப்ப வர்கள் என்று சொன்னார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக அப்படிப்பட்ட இடங்களிலே அவர்கள் குடியிருந்து, 1977, 1980 தேர்தல்களிலே ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்களை இந்தச் சட்டத்தின்படி அப்புறப்படுத்த மாட்டோம் என்ற உறுதியை அமைச்சரவர்கள் தருவார்களா? அவர்களுக்கு வேறு இடம் கொடுத்தால், நாளைக்கே கொடுப்பதாக இருந்தால் கூட 10 ஆண்டுகளாக இருந்த இடத்தைவிட்டு போகத் தயாராக இருக் கிறார்கள். அவர்களுக்கு கேடு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஸ்லம் கிராபர்ஸ்' பற்றி நான் குறிப்பிட்டதைச் சொல்கிறார்கள் என்று ந்துகிறேன். ஸ்லம்மில் வாழ்கிறவர்கள் ஸ்லம் கிராபர்ஸ் என்ற யில் வரமாட்டார்கள், தனியாருக்கு அல்லது அரசுக்கு அல்லது ஒருஅட்டானமஸ் பாடிக்கு சொந்தமான நிலத்தில் சில ரௌடிகள் அத்துமீறி பிரவேசித்திருப்பார்கள்; ஆக்கிரமிப்பு செய்திருப் பார்கள். அவர்கள்கூட நேரடியாக அங்கே குடியிருக்கமாட்டார்கள் அங்கே குடிசைகள் போட்டு, ஏழை மக்களை குடியிருக்கச் செய்து, அவர்களிடம் வாடகை வசூல் செய்து கொண்டிருப்பார்கள். அந்த ஏழை மக்களுக்கு அரசாங்கம் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுத்தால் கூட, அவர்கள் அந்த வீடுகளுக்குச் செல்வதாக இருந்தால், அந்த ரௌடிகள் அவர்களை மிரட்டு வார்கள் நீங்கள் அங்கே போனால் உங்களுக்கு உதை என்று சொல்லுகின்ற ரௌடித்தனத்தை ஒழிப்பதற்கு இந்தச் சட்டம்; அந்த ஏழை எளிய மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகின்ற ரௌடிகளைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டம் பயன்படும். குடிசை



களில் வாழ்கிற மக்கள், அவர்கள் தனியார் நிலத்தில் இருந்தாலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் இருந்தாலும் அவர் களுக்கு எல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, படிப்படியாக அவர்கள் அந்த வீடுகளுக்கு அனுப்பப்படுவதை இந்த அவை அறியும். தொடர்ந்து அதைச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நானும் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். எனவே என்னையும் அனுமதிக்க வேண்டும். ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போகிறேன். இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள், குண்டர்கள் கைது செய்யப் படவேண்டும் என்ற கருத்திலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நான் பார்த்து இன்னின்னார் குண்டர்கள் என்று சொன்னால் அவர்களைக் கைது செய்வீர்களா? துரைமுருகன் சொன்னால் நாங்கள் கைது செய்யவேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அதன்படி கைது செய்ய வேண்டாமா? * * குண்டா கிங் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருணித்து இருக்கிறார்கள். குண்டர்களைக் கைது செய்கின்ற போது அவர்களை நீங்கள் கைது செய்ய மாட்டீர்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, குண்டர்கள் என்றால் என்ன என்பதற்கு விளக்கத்திலே சொல்லப் பட்டிருக்கின்றது. இந்தியன் பீனல் கோட் சேப்டர் 3-லே offences relating to human body, offences relating to property, offences relating to criminal intimidation என்ற பிரிவுகளிலே ஒருவர் தவறைச் செய்கின்றபோது குற்றத்தைத் தொடர்ந்து இழைக்கின்றபோது if he continues to indulgein such offences நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் குண்டர்கள் என்ற டெஃபனிஷனுக்கு உட்பட்டு அந்தக் குற்றத்தை இழைக்கக் கூடியவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனுக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் வேண்டாதவர்களாக இருந்தாலும் கண்டிப்பாக அனைவர் மீதும் சட்டம் பாயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது * * குறிப்பிட்டார்கள் அந்த * * பெயரை மட்டும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான்** அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாய கரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் 100(2)-வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்க வில்லை. திரு. ரகுமான்கான் அவர்கள் பிரிவை எதிர்த்து வேண்டு மானால் வாக்களிக்கலாம்.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி.

''பிரிவு 14 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் 100(2) வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்க வாக்களிக்கலாம் வில்லை. அவர் பிரிவை எதிர்த்து வேண்டுமானால்



பிரிவு 14 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 15, 16 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 17 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

பேரவையின் விதி 100(2) வது விதியின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தை மொழிய அனுமதிக்க வில்லை. அவர் பிரிவை எதிர்த்து வேண்டுமானால் வாக்களிக்கலாம்.

பிரிவு 17 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 18 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை நெடுந்தலைபபு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 1.50)

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எவ்வளவு நியாய வாதங்களோடு கொண்டு வரப்பட்டாலும்கூட, சட்ட நுணுக்கங்கள் எவ்வளவுதான் எடுத்துக்காட்டப்பட்டாலும் கூட, இதை நடைமுறைப்படுத்துகிறபோது, ஏற்படுகிற விபரீத விளைவுகளிலிருந்து, அந்தக் குற்றஞ் சாட்டுகளுக்கு உண்மையாக காரணம் இல்லாதவர்களும் இதிலே சிக்கி துன்புறுவார்கள் என்று ஐயுறுகிற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், தன்னுடைய உறுப்பினர்களுடன் வெளிநடப்பு செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ரா. உமாநாத்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கோட்பாட்டைப் பொறுத்தவரைக்கும், விசாரணையின்றி சிறைப்படுத்துவது என்ற கோட்பாட்டை, எந்த குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக இதை உபயோகப்படுத்தக்கூடாது என்று நாங்கள் வன்மையாகக் கண்டிக் கிறோம். கடந்த காலத்திலும் சரி. நிகழ்காலத்திலும் சரி

அதைக் கண்டிக்கிறோம். எதிர்காலத்திலும் அதை கடுமையாகக் கண்டிப்போம். இந்தச் சட்டத்தினுடைய தேசிய பாதுகாப்புச் சட்டத்தினுடைய கோட்பாட்டுக்கும், டிஃபரன்ஸ்ஸே இல்லை. Our positi n is entirely distinct. இரண்டிலும் ஒரே கோட்பாடுதான் ஆகவே, அதை எதிர்த்து நாங்கள் நாடாளுமன்றத்திலே வாக்-அவுட் செய்ததைப்போல, அதே கோட்பாட்டை உடைய இந்தச் சட்டத்தையும் எதிர்த்து நாங்கள் இங்கேயும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர் )

திரு, இரா. கருப்பையா: விசாரணை இன்றி காவலில் வைக்கக் கூடிய ஒரு சட்டம் முதல்முதல் தமிழகத்தின் சட்டப் புத்தகங்களிலே சட்டமாகக் காணப்படுவதற்காக கொண்டு வரப்படுவதை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. தன்னுடைய கண்டிப்பைத் தெரிவிக்குக் வகையில், விசாரணையின்றி காவலில் வைக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்படுவதை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

டாக்டர் கே. சௌரிராஜன்: இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் நான் பங்குதாரராக இருக்க விரும்பாத காரணத்தால், அடிப்படை நியாயத்திற்கே இது விரோதமாக இருக்கிற காரணத்தால், நான் சட்ட சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாரயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.''



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டமுன்வடிவு *சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவைற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்) 12/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாள் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

---

* 1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

என்று அந்த குறிப்பில கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கிருக்கக் கூடிய சிமெண்ட் ஆலையிலிருந்து வரக்கூடிய சிமெண்ட் டஸ்ட்டினால் கோயில் பாதிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பாதிப்பு இல்லை என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இருக்கிறதா, இல்லையா? என்று நானே நேரடியாகச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். அதிகாரிகள் கொடுத்திருக்கக் கூடிய தகவல்கள் தவறு என்று உறுப்பினர் கூறுகிறார். தவறு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் அந்த தொழிற்சாலையை நடத்தக் கூடியவர்கள் எலெக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக செய்வதாக கூறியிருக்கிறார்கள். உடனடியாக ஏற்படுத்தவில்லை என்றால் அவர்களுடைய அனுமதியை கூட ரத்து செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோபுரம் தமிழக அரசின் முத்திரை சின்னத்தை மாட்டாகக் கொண்டது. இது தமிழ்நாடு சர்க்காருக்கு சவால் விட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களே வருத்தப்படக் கூடிய விஷயம். இந்த கோபுர திருப்பணிக்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஆர். எம். வீ. அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூர் சாமி அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த கோவிலுக்கு, திருப்பணிக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் பல்வேறு நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து நஷ்ட ஈடு வேண்டும். 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வேண்டுமென்று கோர்ட்டிலே பக்தர்கள் சார்பில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கோவிலினுடைய பிரசித்தத்தைப் பற்றியும், வரலாற்றைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த கோவில் தொன்மையான கோவில். பல முறை அந்த கோவிலுக்கு நான் சென்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடன் கூட சென்றிருக்கிறேன். அற்புதமான கோவில் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. பக்தர்கள் வழக்கு கொண்டு வரலாமா என்று கேட்டார். பக்தர்கள் வழக்கு கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த கோவிலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(முற்பகல் 10.50)

## 7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

**(அ) கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்ரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை (தடுத்தல், திருத்த) சட்ட முன் வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஆ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்தலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

என்று அந்த குறிப்பில கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கிருக்கக் கூடிய சிமெணட் ஆலையிலிருந்து வரக்கூடிய சிமெண்ட் டஸ்ட்டினால் கோயில் பாதிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பாதிப்பு இல்லை என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இருக்கிறதா, இல்லையா? என்று நானே நேரடியாகச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். அதிகாரிகள் கொடுத்திருக்கக் கூடிய தகவல்கள் தவறு என்று உறுப்பினர் கூறுகிறார். தவறு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் அந்த தொழிற்சாலையை நடத்தக் கூடியவர்கள் எலெக்ட்ரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக செய்வதாக கூறியிருக்கிறார்கள். உடனடியாக ஏற்படுத்தவில்லை என்றால் அவர்களுடைய அனுமதியை கூட ரத்து செய்வதற்கு அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோபுரம் தமிழக அரசின் முத்திரை சின்னத்தை மாட லாகக் கொண்டது. இது தமிழ்நாடு சர்க்காருக்கு சவால் விட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களே வருத்தப்படக் கூடிய விஷயம். இந்த கோபுர திருப்பணிச்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஆர். எம். வீ. அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூர் சாமி அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த கோவிலுக்கு, திருப்பணிக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் பல்வேறு நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து நஷ்ட ஈடு வேண்டும். 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வேண்டுமென்று கோர்ட்டிலே பக்தர்கள் சார்பில் வழக்கு தொடர்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கோவிலினுடைய பிரசித்தத்தைப் பற்றியும், வரலாற்றைப்பற்றியும் மாணபுமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இந்த கோவில் தொன்மையான கோவில். பல முறை அந்த கோவிலுக்கு நான் சென்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடன் கூட சென்றிருக்கிறேன். அற்புதமான கோவில் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. பக்தர்கள் வழக்கு கொண்டு வரலாமா என்று கேட்டார். பக்தர்கள் வழக்கு கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த கோவிலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(முற்பகல் 10.50)

## 7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

**(அ) கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்ரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை (தடுத்தல், திருத்த) சட்ட முன் வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குச் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஆ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்தலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(ஐ) கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1986) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்** : : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்டம் இந்த அவையிலே நிறைவேற்றப்படுகிற நேரத்திலே கடுமையான எதிர்ப்புக்கு ஆளாக்கப்பட்ட சட்டம் இது என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இந்தச் சட்டத்தின்படி இன்று கள்ளச்சாராயக்காரர்களையும், குண்டர்களையும் கைது செய்து . நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே இதை அமுல் படுத்தக் கூடிய நேரத்தில், இதை பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்ற ஆபத்து இருக்கிறது என்பது அன்றையதினம் சுட்டிக்காட்டப்பட்டது. இன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே நீதி மன்றத்திற்குப் போய் பல நபர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செல்லாது என்ற முறையிலே நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வந்து, பலரை விடுதலை செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டதற்குப் பிறகு அரசு தற்போது ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டம் என்ன என்றால், அதாவது ஒருவர் மேல் ஏற்கனவே கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய ஆணையானது, அக்காரணங்களில் ஒன்றோ அல்லது பலவோ தெளிவாக இல்லை, உளதாயில்லை, தொடர்புடையதாயில்லை, அத்தகையவர்களோடு சம்பந்தப்பட்டதாக இல்லை என்ற முறைகளில் உள்ள காரணங்களால் ஒன்று அல்லது பலர் மேல் எடுக்கப்பட்டு இருக்கக் கூடிய நடவடிக்கை செல்லாது என்று நீதி மன்றம் தீர்ப்பு

*1986 ஆம் ஆண்டு மே 13-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



கொடுத்து இப்படி கைது செய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக என்ன திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால்.

"....such order shall not be deemed to be invalid or inoperative merely because one or some of the grounds is or are—(i) vague, (ii) non-existent, (iii) not relevant, (iv) not connected or not proximately connected with such person, or (v) invalid for any other reason whatsoever . . .''

ஏற்கனவே இந்தச் சட்டத்திலே கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்த திருத்தத்தைப் பார்க்கும் போது 1952-ஆம் வருடத்திலே

Preventive Detention Act.

கொண்டு வரப்பட்டு, உயர்நீதிமன்றம்

Preventive Detention Act.

என்பதால் மக்களுடைய அடிப்படையான சில உரிமைகள் பாதிக்கப்படுகிறது என்று தீர்ப்பு கொண்டு வந்த உடனே அந்த தீர்ப்பின் அடிப்படையில் பலர் விடுதலை செய்யப்பட்டு உடனே அவர்கள் அரசு என்ன செய்தார்கள் என்றால் அந்தச் சட்டத்தை திருத்தி விடுதலை செய்யப்பட்டவர்களை மீண்டும் கைது செய்தார்கள். அப்படிப்பட்ட ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையிலே அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த அரசுகள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தார்களோ அந்த முறையில் உள்ள நடவடிக்கையை இந்த அரசு எடுக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒருவர் அவர் உண்மையான குற்றவாளியாக இருந்தால் அவரை கைது செய்யக்கூடிய நேரத்திலே அந்த உண்மையான குற்றத்தைச் சொல்லி அந்த உண்மையான குற்றத்தை குறிப்பிட்டு அவரை கைது செய்ய முடியும். ஆனால் இன்று நாம் என்ன பார்க்கிறோம் என்றால், சில காவல் துறை அதிகாரிகளின் விரோதத்திற்கு காரணமானவர்களை, காவல் துறை அதிகாரிகளுக்கு வேண்டியவர்கள் சுட்டிக்காட்டியவர்களை அரசியல் விரோதம் காரணமாக பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்து கொண்டு இருக்கக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். கைது செய்ததற்குப் பிறகு அதை நியாயப்படுத்துவதற்காக சில குற்றச்சாட்டுக்களை தயாரித்து அந்த ஆட்கள் மேல் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் கொடுப்

பதன் காரணமாக இப்படிப்பட்ட Vague. non-existent, not relevant போன்று காரணங்கள் அமைகின்றன. இப்படிப்பட்ட காரணங்களால் தான் பலர் உயர்நீதிமன்றம் சென்று, உச்ச நீதிமன்றம் சென்று விடுதலை ஆகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் ஒருசில உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மணலியில் கோத்தாரி என்ற ஒரு கம்பெனி இருக்கிறது. அவர்கள் ஆயிரக்கணக்கான காண்டிராக்ட் தொழிலாளர்களை வைத்து வேலை செய்கிறார்கள். அங்கே காண்டிராக்டர்கள் அவர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுப்பது இல்லை. மற்ற வசதிகள் செய்து கொடுப்பது இல்லை. அவர்கள் சங்கத்தை வைத்து இருக்கிறார்கள். சங்கத்தை வைத்துக் கொண்டு காண்டிராக்டர்கள் செய்யும் அயோக்கியத்தனத்தை எதிர்த்துப் போராடினார்கள்.

(மாலை 4–10).

இந்தக் கான்ட்ராக்ட்காரர்கள், பணம் உள்ளவர்கள் மற்ற முறையில் வசதி உள்ளவர்கள் காவல் துறையைச் சுவாதீனப் படுத்தி, அந்த கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு, அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் கருத்துகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒரு தொழிற் சங்கத்தின் செயலாளரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். அவர் நீதிமன்றம் சென்று அந்த நீதிமன்றம், அவரைக் கைது செய்தது சரியல்ல என்று விடுதலை செய்துள்ளது.

அதே அரசியல் காரணமாக தேர்தல் காலத்தில் என்னுடைய தொகுதியில் ஒருவரை காவல்துறையில் உள்ள சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு பணத்தைக் கொடுத்து, அவர் மேலே ஒரு கேசை ஜோடித்து, அவரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர் உயர்நீதிமன்றம் சென்று விடுதலை பெற்று வந்தார். அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இந்தச் சட்டத்தின் கீழே வேறு எந்தவிதமாகவும் செய்யமுடியாத காரணத்தால், பூட் லெக்கர் என்ற முறையிலே அந்தச் சட்டத்தின்கீழே கேஸ் ஜோடித்து உள்ளே தள்ளி விட்டார்கள்.

அதேபோன்று வில்லிவாக்கம் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் ஒருவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்கு தீவிரமாக வேலை செய்த காரணத்தால், காவல் துறையைச் சார்ந்தவர்கள் அவர் மேல் இந்தச் சட்டத்தின் கீழ் வழக்கு போட்டு அவரை உள்ளே தள்ளினார்கள். அவரும் உயர்நீதிமன்றம் சென்று விடுதலை வாங்கி வந்தார். ஆகவே இந்தச் சட்டத்தை இப்படி காவல் துறையைச் சார்ந்தவர்கள் சில அரசியல் கட்சிகளினுடைய தூண்டுதல் காரணமாக, அல்லது வசதி உள்ளவர்கள் தூண்டு





தல் காரணமாக, அல்லது ** ** ** என்ற காரணத்தினாலே இப்படி உள்ளே தள்ளக்கூடிய முறையிலே அவர்கள் மேலே குற்றச் சாட்டுகளைச் சொல்லி, அவர்கள் நீதிமன்றத்திற்குப்போய், அந்த அளவிலே அவர்களுக்கு நியாயம், நீதி கிடைக்க வகை செய்யக் கூடிய முறையில் இன்றைக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நான் ஏன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், உண்மையில் குற்றவாளி என்றால் அவர் செய்த உண்மையான குற்றத்தைச் சொல்லி, அவர் மேலே வழக்குத் தொடுத்து, உள்ளே தள்ளுவதில் பிரச்சினை இல்லை, சிரமம் இல்லை, இப்படி ஆதாரம் இல்லாத முறையில் எந்தவிதமான நியாயமும் இல்லாத முறையில் பல நபர்கள் மேலே காவல்துறை அதிகாரிகளினுடைய சிபாரிசைக்கேட்டு, இந்த அரசு இப்படிப்பட்ட சட்டத்தின் கீழ் கைது பண்ணுவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும், உள்ளே தள்ளுவதற்கும் நடவடிக்கை எடுப்பதன் விளைவாகத்தான் இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரக்கூடிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இங்கே ஒரு அட்வைசரி கமிட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்வைசரி கமிட்டியைப் பொறுத்தவரையில், இருக்கக் கூடிய தகுதியைப் பொறுத்தவரையில், அவர்களுடைய யோக்கிதாம்சங்களுக்குள்ளே போக விரும்பவில்லை.. இந்த அட்வைசரிக் கமிட்டியிலே இருக்கக் கூடிய அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளுக்கு ஒப்புதல் தரக் கூடிய அளவிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான ரெப்ரசன்டேஷனைக் கூட பரிசீலித்து நடவடிக்கை எடுத்து, நியாயம் வழங்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டினது போன்று, எங்களுடைய மாவட்டத்தில் வீயனூர் என்ற ஊரில் சர்க்கிள் இன்ஸ்பெக்ட்டரால் கைது செய்யப்பட்டு, ஒருவர் இந்த அட்வைசரி கமிட்டிக்கு ரெப்ரசன்டேஷன் கொடுத்தார். அட்வைசரி கமிட்டி அந்த ரெப்ரசென்டேஷனை நியாயமான முறையில் பரிசீலிக்கவில்லை. அப்படி நியாயமான முறையில் அவர்கள் பரிசீலித்திருந்தால் அதே நபர் உயர்நீதிமன்றம் போய் விடுதலை வாங்கக்கூடிய அந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆகவே இன்றைக்கு அட்வைசரி கமிட்டியானது, சரியான முறையில் அவர்களிடம் என்ன முறையில் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பொறுப்புக்கேற்ற முறையில் அவர்களுடைய ரெஸ்பான்ஸிபிலிட்டிக்கு உட்பட்டு, அவர்கள் செயல்படாமல் இருப்பதன் காரணமாகத்தான்

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்படிப்பட்ட சட்ட திருத்தங்களைக் கொண்டுவரக் கூடிய தேவை இந்த அரசிற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நான் என்ன சொல்லவிரும்புகிறேன் என்றால், கிரிமினல் ஜூரிஸ் புருடன்சுடைய முதல் ஏற்பாடு கூட இவ்வாறு கைது செய்யப் பட்ட 1,000 குற்றவாளிகள் தப்பித்தாலும் கூட பரவா யில்லை, ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது. அப்படி ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது, என்று இன்றைக்கு தெள்ளத் தெளிவாக கிரிமினில் ஜூரிஸ்ப்ருடென்சி னுடைய பேசிக் அப்ரோச் இருக்கின்ற நேரத்தில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இந்தச் சட்டம் * *

அமைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு பல எடுத்துக்காட்டு கள் சொல்லமுடியும்...................... (குறுக்கீடு)... ..

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் * * * * * * என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீக்க உத்தர விடுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : நீக்கக்கூடாது.............. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பெசிபிக்காக சொன்னால் பரவாயில்லை. ஸ்வீப்பிங்காகச் சொல்லக்கூடாது. **(குறுக்கீடு) அது கூட ரூல் 93-ன் கீழ் நோட்டீஸ் கொடுத்து, பெர்மிஷன் வாங்கவேண்டும். (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு கொண்டு போகலாம் என்று சொல்லக்கூடாதா, கொண்டு போய்விட்டது என்று சொன்னால் தானே தவறு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பிட்டுச் சொன்னால் பிரச்சனை இல்லை. * , * * என்றால் அது தவறு. (குறுக்கீடு).

திரு. கு. ரமணி : அப்படியானால், அந்த நடவடிக்கைகளைப் பற்றி எதுவுமே இந்த மன்றத்தில் பேசமுடியாது. அந்த நிலைக்கு போய் விடும்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்வீப்பிங்காகப் பேசினால் எந்தத் துறைக்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : ஒரு அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் நோட்டீஸ் தர வேண்டும். (குறுக்கீடு) ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், அவரே கன்னியாகுமரி மாவட்டத்தில் வீயனூர் என்ற இடத்தில்—— அந்த ஆள் பெயரைச் சொல்லவில்லை. ஒருவரைக் கைது செய்து, குண்டாஸ் ஆக்ட்டிலே கேஸ் போட்டு, உயர்நீதிமன்றம் அவரை விடுதலை செய்து இருக்கிறது.

The Home Department is in possession of the order issued by the High Court.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி சொல்வது சரியா ? (குறுக்கீடு) மெம்பர்கள், மினிஸ்டர்ஸ், ஆபீசர்ஸ் மூன்று பேரும் வருகிறார்கள். ரூல்–93–ன் படி நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலே, அவர் விடுதலை செய்யப் பட்டு விட்டதாலேயே உயர்நீதிமன்றத்தினாலே விடுதலை செய்யப்பட்டு விட்ட காரணத்தினாலேயே அவர் குற்றவாளி இல்லை என்பதைப் போல் பேசுகிறார். வழக்கறிஞர், அவருக்குத் தெரியும். எல்லா வழக்குகளும் 'கன்விக்ஷனிலே' முடிவது கிடையாது. அதைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டமே கொண்டு வரப்படுகிறது. விடுதலை செய்த காரணத்தினாலேயே பொய்யான வழக்கு, பொய்யான குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிற வாதம் சரியானது அல்ல என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன்.

(மாலை 4–20)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : 'The Home Department is in possession of the order passed by the High Court'. ஹைகோர்ட்டிலே தெளிவாக, அவரை குண்டாஸ் ஆக்டிலே கைது செய்தது சரியல்ல என்று தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கிறது. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால் ஏற்கனவே இரண்டு மூன்று எக்சாம்பிள்ஸ் சொல்லியிருக்கிறேன். இப்படித் தனிப்பட்ட அதிகாரிகளின் விரோதத்திற்குக் காரண மானவர்களையும், சில கட்சிகளின் விரோதத்திற்குக் காரண மானவர்களையும் எல்லாம் இன்றைக்கு இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்து கஷ்டப்படுத்துகின்ற நிலைமை இருந்து கொண்

டிருக்கின்றது. அதிலேயிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் வகையில், சார்ஜ் செய்தது சரியல்ல என்றால் விடுதலை கிடைக்கக்கூடிய அந்த வாய்ப்பைக் கூட இன்றைக்கு மூடிவிடுகின்ற முறையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது சரியல்ல. சரி, அந்த முறையில் இருந்தால், அந்த நபர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு மாற்று நடவடிக்கைகளையாவது அரசு எடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை. ஏற்கனவே இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்தவர்கள் மீது வழக்குகளைப் போட்டு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றம் அது சம்பந்தமாகக்கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையில அவர்களின் நிலையை பாதுகாத்துக் கொள்வதற்கு உள்ள பாதுகாப்பு ஷரத்துக்களை இந்தச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால், அதற்குப் பதிலாக இன்றைக்குக் காவல் துறை அதிகாரிகளினுடைய தவறான நடவடிக்கைகளின் காரணமாக உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்யாமல், ஏதேனும் காரணம் சொல்லி அவர்கள்மேல் சார்ஜ் கொடுக்கின்ற நேரத்தில் அதை ( Non-existent, irrelevant ) அந்த மாதிரி நிலை ஏற்படுவதால் அவர்கள் இன்றைக்குக் கஷ்டப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்கான வாய்ப்பை மூடும் முறையில் இந்தச் சட்டம் அமைகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது என்று சொல்லி இந்தச் சட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு என்று ஒரு திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் போனதடவை கொண்டு வரும்பொழுது இந்தச் சட்டம் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்து ஆதரித்தோமோ அதற்கு மாறாக, இந்தச் சட்டம் இன்றைக்கு அவர்கள் மேல் பாயப்படவில்லை. அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட துறையில் இருக்கும் அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டவர்கள், வேண்டப்படாதவர்கள் ஆகியவர்களுக்கு அல்லது ஏதோ ஒரு வகையில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு மூலமாகவோ இருக்கும் சக்திகளை பாடம் ஆக்குகின்ற அளவிற்குத் தான் இந்தச் சட்டத்தை இன்றைக்குக் காவல்துறை மூலம் பயன்படுத்துகிறார்கள் என்று





தான் நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்றிரண்டு உதாரணங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கள்ளச் சாராயத்தை ஒழிக்கவேண்டும். இன்றைக்குச் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட சாராயக் கடைகளுக்கு அரசு மூலம் கொடுக்கப்படும் கம்பெனி சாராயம் என்று கொடுக்கப்படும் அந்த பாட்டில்களை குறிப்பிட்ட மணி நேரம் வரையில் தான் விற்க முடிகிறது. ஆனால் சாராயக் கடைகளைப் பொறுத்த வரையில் திறந்த நேரத்திலேயிருந்து மறுநாள் காலை வரையிலேயும் தொடர்ந்து விற்றுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அந்தச் சாராயம் எங்கேயிருந்து வருகிறது? குறிப்பாகச் சொல்லப்போனால், தம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை தாலுக்கா, இந்தப் பகுதிகளில் நூறு, நூற்றைம்பது அடுப்புகளை வைத்துக் கொண்டு ஏதோ ஒரு பெரிய தொழிற்சாலை மாதிரி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். வேன்களின் மூலமாக ஆந்திராவிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரியாதா ? அவர்களுக்குத் தெரியாமல் எப்படி கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடுகின்றது தமிழகத்தில், இதை இல்லை என்று அதிகாரிகள மறுக்க முடியுமா ? மறுக்க முடியாது. இப்பொழுது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. ஒரு காலத்தில் எனக்குத் தெரிந்து எங்கேயோ ஒரு இடத்தில், அதுவும் பெரிய காட்டிற்குள்ளே இரண்டு மூன்று பானைகளை வைத்துக் கொண்டு திருட்டுத்தனமாகத் தயாரித்து விற்பார்கள். ஆனால் இப்பொழுது அந்த நிலைமை கிடையாது. வேன் வேனாக அனுப்பப்படுகிறது, ஆந்திராவிற்குப் போகிறது என்று சொல்கிறார்கள. இதெல்லாம் எப்படிப் போகிறது ? தமிழகத்தை விட்டு ஆந்திராவிற்குப் போகிறது என்று சொன்னால் அதிகாரிகளெல்லாம் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழித்து, உழைக்கும் மக்கள் கம்பெனி சாராயத்தைக் குடித்து அவர்களது உடம்பு நல்ல முறையில் இருப்பது தேவை, கள்ளச்சாராயத்தைக் குடித்துவிட்டு வயிற்று வலி, வயிற்றில் புண் என்று ஏற்பட்டு, உழைக்கும் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

ஆனால் அதற்கு மாறாக இன்றைக்கு கம்பெனி சாராயம் ஒரு கடைக்கு 10 பாட்டில் என்று சொன்னால், இந்த கள்ளச் சாராயம் 500 பாட்டில்கள் வந்து இறங்குகிறது. அதிகாரி வந்து இரவு 2 மணிக்கு பார்க்கிறார். என்னமோ பண்ணுகிறார்கள். மறுநாள் காலையில 9 மணிக்கு பார்த்தால் லைட் போட்டுக்கொண்டு அதைத்தான் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். கள்ளச் சாராயத்தை தடுக்கின்ற சட்டத்தை அமுல்படுத்துகின்ற அதிகாரிகள் அமுல்படுத்த வேண்டும் என்ற அந்த நீண்ட தூரப்

பார்வையோடு செயல் பட்டால்தான் அந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியுமே தவிர, இல்லாவிட்டால் அமைச்சர் எத்தனை திருத்தங்கள் கொண்டு வந்தாலும், நாங்கள் எவ்வளவுதான் பேசினாலும் அவைகள் எல்லாம் ஏட்டளவிலே இருக்குமே தவிர கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு பயன்படாது. இந்த கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அதிகாரிகள் மனம் உவந்து, வருமானத்தை கணக்கிடாமல் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்று என்றைக்கு நினைக்கிறார்களோ அன்றைக்குத் தான் இந்த நல்ல நோக்கம் நிறைவேற முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல இந்த விபச்சாரத் தொழில், இதை நடத்துகின்றவர்கள் யார் ? இவர்களை பிடித்து குண்டர்கள் ஆக்ட்டில் போடுவதாகச் சட்டம் கொண்டு வந்தோம். கணவனை இழந்து, 5, 6 பெண்களை வைத்துக்கொண்டு குடும்பத்திலே எந்தவிதமான வருமானமும் இல்லாத காரணத் தால் விபச்சாரம் என்ற தவறு செய்கிறார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த் தோம். கூலி வேலை செய்யும் பெண், கணவன் தன்னை பாது காக்கவில்லை என்பதால் குழந்தையை விட்டு விட்டு வேலைக்கு சென்ற பெண் 500 ரூபாய்க்கு கடத்தப்பட்டு இருக்கிறாள். கடத்தப்படும் போது அந்தப் பெண் ஒரு கேணிக்குள்ளே இறங்கி தப்பித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் மனு கொடுத்திருக்கிறாள். இத்தகைய செய்தி வந்திருக்கிறது. நமக்கு பெயர் எல்லாம் வேண்டாம். யார் கடத்துகிறார்கள்? சாதாரண ஆட்கள் கிடையாது. பெரிய புள்ளிகள், பெரிய வசதி படைத்தவர்கள் இப்படிப்பட்ட வேலை செய்கிறார்கள், இவர்கள் நாட்டினுடைய துரோகிகள். இவையெல்லாம் அதி காரிகளுக்குத் தெரியாதா ? என்ன நடவடிக்கை எடுக்கிறார் கள். பிடிக்கிறார்கள். ஆனால் கொஞ்ச நாள் கழித்து பார்த் தால் அந்த வழக்கு மாயமாக மறைந்து போகிறது. எப்படி மறைந்து போகிறது ? சம்பந்தப்பட்ட துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் குற்றத்தைக் களைந்து குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதற்கு பதிலாக இந்த சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு, தன்னுடைய குடும்பத்தை பாதுகாப்பதற்குப், தனக்கு வேண்டியவர்களை பாதுகாப்பதற்கும் வேண்டாதவர் களை இதன் மூலமாக பழிவாங்குவதற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் இது பல இடங் களில் நடந்துகொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும். சட்டத்தை ஆதரிப்பது, ஆதரிக்காதது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தச் சட்டத்தை எந்த நோக்கத்திற்காக போட்டோம் ? பெரிய குடும்பத்தில் பெண்கள் இருக்கிறார்கள். சில பேர் விரும்புகிறார்கள். சில பேர் விரும்புவதில்லை. உடனே என்ன பண்ணுகிறார்கள்



என்றால் சம்பந்தப்பட்ட துறையினரை விட்டு அவர்களை மிரட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்த்தால, இவர்கள் இந்தச் சட்டத்தை நிலைநாட்டுவதற்கு பதிலாக தவறாக உபயோகப்படுத்துகிறார்கள். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் இதை தவறாக உபயோகிக்கிறார்கள். அரசியல்வாதிகள் நாணயமானவர்கள், அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற அந்த தோரணை யில் நான் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் இந்தச் சட்டத்தை பாதுகாப்பதற்கு பதிலாக தவறாக உபயோகப் படுத்துகிறார்கள். இந்தத் தவறிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும். அதே போல நில ஆக்கிரமம் பொறுத்தவரையில் சாதாரண ஆட்கள் தேவையான இடத்தை ஆக்கிரமித்தால் உடனே நடவடிக்கை எடுக்கிறார்கள். இன்றைக்கு போக்கு வரத்துத் துறையிலே எவ்வளவோ விபத்து நடக்கிறது. பெரிய வசதி படைத்தவர்கள் அக்கிரமம் பண்ணுகிறார்கள். பெரிய அதிகாரிகளுக்கு இது தெரியாமல் இல்லை. யார் என்ன என்று தெரியும். ஆனால் நடவடிக்கை எடுப்பது கிடையாது.

(மாலை 4–30)

அதனால்தான் நான் சொல்கிறேன், இந்தக் கள்ளச்சாராயக் காரர்கள், விபசாரம் செய்பவர்கள், நில ஆக்கிரமிப்புச் செய் பவர்கள் ஆகியவர்களைப் பொறுத்தவரையில் கொண்டு வரப்பட் டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இதிலே தவறு இல்லை. ஆனால் இந்தச் சட்டத்தைப் பயன் படுத்தி தவறான காரியத்தைச் செய்கிற நிலைமை இருக்கிறது. தவறான காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருகிறார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு எதிர்காலத்தில் எந்த அளவுக்குக் கொண்டு வர வேண்டுமோ அந்த அளவுக்குக் கொண்டு வர வேண்டும். தமிழ் நாட்டில் மோசமான காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டு மென்று நான் கேட்டு அமர்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இன்றைய தினம் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கின்ற கள்ளச் சாராயக் காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிர மிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் கொண்டு வரப்பட் டிருக்கின்ற இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1986 மே 14

இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்
கள் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தாலும் கூட நான் எங்க
ளுடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் சிலவற்றை நினை
வுபடுத்த விரும்புகிறேன். தமிழக மகளிரிடம் ஆசை
வார்த்தைகளைக் காட்டி, வேலைகளில் சேர்ப்பதாகச் சொல்லி,
திரைப் படங்களிலே நடிக்க வைப்பதாகச் சொல்லி கிராமத்துப்
பெண்களைக் கூட்டிக் கொண்டுபோய் வெளி மாநிலங்களில்
விற்றுவிடுகிற காட்சியைப் பார்க்கிறோம். சில இடங்களில்
சில மாவட்டத் தலைநகரில் விற்று விடுகிற காட்சியையும்
பார்க்கிறோம். சில நேரங்களில் கணவன்மார்கள் கூட இது
போல் விற்றுவிடுகிற செய்தியையும் நாம் பார்க்கிறோம்.
ஒரே ஆடவர் பல்வேறு பெண்களைத் திருமணம் செய்து
கொண்டு அந்தப் பெண்களை விற்றுவிடுகிற நிகழ்ச்சி
களையும் பார்க்கிறோம். இந்தச் சட்ட முன் வடிவின் மூலம்
விபசாரத்தைச் செய்கிற பெண்களுக்குத் தண்டனை கொடுக்கிற
சூழ்நிலையை விட அதற்கு உடந்தையாக இருக்கிற ஆண்கள்
மீதும், இடையிலே இருக்கிற தரகர்கள் மீதும் நடவடிக்கை
எடுத்து கடுமையாக அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற
சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

விபச்சாரத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் பலர் செல்வந்தர்
களாக மாறி மேல்நிலையில் இருக்கின்ற அதிகாரிகளைக் கூட
கையகப்படுத்துகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்தக்
கொடுமையைத் தமிழகத்திலிருந்து அறவே களைய வேண்டும்.

மருந்துச் சரக்குக் குற்றவாளிகள் என்ற பெயரில் அரசு
மருந்துகளைத் திருடுவது, கலப்பட மருந்துகளைத் தயாரித்தல்
போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். உயிர்ப்பு அற்ற மருந்து
களைக் குழந்தைகளுக்குக் கூட கொடுக்க வேண்டிய சூழ்நிலை
ஏற்படுகிறது. அதன் காரணத்தால் அகால மரணம் ஏற்
படுகிற சூழ்நிலைகள் எல்லாம் வருகின்றன. எனவே மருந்து
களைப் பொறுத்தவரையில் கலப்பட இன்னல்களைப் பற்றிச்
சிறப்பாக ஆராய வேண்டும். இன்றைய தினம் பல்வேறு
மருந்துகள் ஒரே பெயரில் இருக்கின்றன. ஒரு எழுத்தை மாற்றி
பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம்.
எனவே மருந்துக் கலப்படக்காரர்களைக் கடுமையாகத்
தண்டிக்க வேண்டும்.

நில ஆக்கிரமிப்பு என்பதைப் பொறுத்தவரையில் அரசாங்
கத்தினுடைய நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்கள் கோயில்
நிலங்கள் எல்லாம் கூட, எல்லா கட்சிகளையும் சேர்ந்த
அரசியல்வாதிகளால் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அவற்றைக்
குறிப்பிட்ட விலைக்கு விற்றுவிடுகிற சூழ்நிலையைப் பார்க்
கிறோம். சில பகுதிகளை குடிசைப் பகுதிகளாக மாற்றி
வைத்துக் கொண்டு பல்வேறு இயக்கங்களின் கொடிகளை
ஏற்றி வைத்து அரசியலாக ஏற்படுத்துகிற சூழ்நிலையைப்
பார்க்கிறோம். இந்த நிலங்களை எல்லாம் அரசு எடுத்து



1986 மே 14] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

அவற்றுக்காக என்னென்ன செயற்குறிப்புத் திட்டங்களை
வைத்திருக்கிறதோ அல்லது அலுவலகங்களுக்காக வைத்திருக்
கிறதோ அல்லது குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி
வாரியம் போன்றவற்றுக்காக வைத்திருக்கிறதோ அந்தப்
பணிகளுக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படவேண்டும்.
அந்த நிலங்களை எல்லாம் அரசு கையகப்படுத்திக் கொள்கிற
ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நில ஆக்கிரமிப்பாளர்கள் என்று சொல்கிறபோது அரசுகூட
சில நேரங்களில் சில நிலங்களை ஆக்கிரமித்து எடுத்து இருக்கிறது.
குறிப்பாக மணலியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அரசு எடுத்து
இருக்கிறது. ஆனால் அதிலே பயிரிட்ட விவசாயிகளுக்கு, கிட்டத்
தட்ட 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருந்த விவசாயிகளுக்கு,
அந்த டெனன்ஸுக்கு 75 சதவீதம் என்றும் நில உரிமையாளருக்கு
25 சதவீதம் என்றும் நீதிமன்றத்தில் தீர்ப்பளித்தார்கள். அரசு
அந்த நிலச் சொந்தக்காரருக்கு 25 சதவீதம் பணத்தைக்
கொடுத்துவிட்டது. மீதி 75 சதவீதம் நீதிமன்றத்தில் இருக்கிறது.
அந்த மக்களைப் பொறுத்தவரையில அவர்கள் எல்லாம் சாதாரண
ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, அரிசன மக்கள்தான். அவர்
களுக்கு அந்த பாக்கித் தொகை கொடுக்கப்படாமல் நீதிமன்
றத்தில் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே ஆக்
கிரமிப்பாளர் என்று சொல்கிறபோது அரசு கூட ஒருசில நேரங்
களில் ஆக்கிரமிப்பாளராக இருக்கிறது என்பதை நான் நினை
வூட்ட விரும்புகிறேன். ஆகவே அந்த நில ஆக்கிரமிப்பாளர்கள்
எந்த அரசியல்வாதியாக இருந்தாலும்கூட அவர்கள் மீது கடுமை
யான நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு குண்டர்களின் சட்டத்தின் கீழே பல்வேறு விதமான
சமூக விரோத செயல்களை செய்பவர்கள் அவசியமாக அந்த
குண்டர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். இப்
போதும் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அப்படி குண்டர்கள்
சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுகிற போது, அவர்கள் சிறைச்
சாலையில் அடைக்கப்படுகிற போது வெளியிலே இருப்பதை விட
மிகச் சிறப்பான உணவு, தனியாக மற்ற வசதிகள் எல்லாம்
கொடுக்கப்படுவதால் அவர்கள் ஏதோ மாமியார் வீட்டில் இருப்
பது போன்ற சூழ்நிலையில் இருந்து விட்டு வந்தேன் என்று
சொல்லுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சலுகைகளை அவர்
களுக்கு அளிக்கக் கூடாது. அவர்களுடைய தண்டனை கடுமை
யாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தனியாக எந்தவித சலுகை
யும் தருவதை குறைத்துக் கொண்டு, சிறைச்சாலை என்று
சொன்னாலே கடுமையானது, கொடுமையானது என்று எண்ணு
கிற அளவுக்கு தண்டனைக்கால சூழ்நிலை இருந்தால்தான் அவர்
கள் அதுபோன்ற குற்றங்களை அடிக்கடி செய்ய மாட்டார்கள்.

அப்படிப்பட்ட குற்றங்களை திரும்பவும் செய்தால் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்வார்கள். அதனால் சமூக விரோத குண்டர்கள் உள்ளே போய் களைக்காக இருக்கலாம் என்ற நிலையை மாற்றி, அந்தச் சட்டங்களை கடுமையாக்குவதின் மூலமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோருக்கான சமுதாயத்தில் வாய்ப்பு குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை மட்டும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் நோக்கம் என்ற அடிப்படையின் காரண நோக்கத்தைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் மத்திய அரசினுடைய சட்டமான நேஷனல் செக்யூரிடி ஆக்ட் என்ற தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சில மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

அந்த மாறுதல்கள் நடைமுறை சங்கடங்களை நீக்குகிற காரணத்தாலே அதே மாறுதல்களை இந்தச் சட்டத்திலேயும் செய்து நடைமுறை சங்கடங்களை களைந்து விட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பதாக இங்கே கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், நில ஆக்கிரமிப்பு செய்பவர்கள், தவறான மருந்துகளை கையாளுபவர்கள், குண்டர்கள், விபச்சாரத் தொழிலை நடத்திக் கொண்டிருப்பவர்கள் ஆகியவர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தைப் பொறுத்த மட்டில் 5-வது பிரிவில், 5 ஏ என்ற புதிய பிரிவும் 14-வது பிரிவு (2)-வது உட்பிரிவில் புதிய மாறுதல்களையும் செய்து, இந்தச் சட்டத் திருத்த மசோதாவை இங்கே அரசு கொண்டு வந்திருக்கிறது.

அந்த 5 ஏ என்ற புதிய பிரிவில் என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றால் அதிகாரம் படைத்த, அதாவது தடுப்புக் காவல் சட்ட உத்தரவை போடுகின்ற அதிகாரியானாலும், அரசு ஆனாலும் ஒரு சில காரணங்களைச் சொல்லி, அந்த காரணங்களின் அடிப்படையில் ஒருவரை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலே காவல் நீடிப்புச் செய்ய வேண்டும் என்று உத்தரவு போடுவார்களேயானால், அதை நீதிமன்றம், அதில் கூறப்பட்ட காரணங்கள் தெளிவாக இல்லை, தொடர்புடையதாக இல்லை என்ற அடிப்படையில், அந்தக் காரணங்களை நிராகரித்து விட்டு அவர்களை விடுதலை செய்யுமேயானால் அப்படி விடுதலை செய்ய, வேறு பல காரணங்களையும் எண்ணிப் பார்த்துத்தான் அந்த அதிகாரி உத்தரவிட்டார்கள் என்ற





அடிப்படையில், அந்தக் காரணங்களை நிராகரித்துவிட்டாலும் மட்டும் அல்லாமல், அந்தப் புதிய காரணங்களின் அடிப்படையில் அவர்களுடைய தடுப்புக் காவல் நீடிப்புச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் பிரிவு 5 ஏ இந்த திருத்த மசோதாவிலே வழி செய்கிறது.

அதேசமயத்திலே 14-வது உட்பிரிவு 2-வது திருத்தம் என்ன வழி செய்கிறது என்றால், ஒருவர் தடுப்புக் காவல் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டு காலம் முடிந்து வெளியிலே வந்து விட்டாலோ அல்லது அரசே பார்த்து விடுதலை செய்து விட்டாலோ அல்லது நீதிமன்றங்களே பார்த்து பரிசீலனை செய்து ஒருவர் விடுதலை செய்யப்பட்டாலும் கூட, இந்தப் புதிய திருத்தத்தின் அடிப்படையில் புதியதாக காரணங்கள் 'ப்ரெஷ் பேக்ட்ஸ்' (Fresh Facts) என்ற அடிப்படையில் புதிய புதிய காரணங்கள் இல்லாவிட்டாலும் கூட, புதிய சூழ்நிலைகள் உருவாகாவிட்டாலும் கூட, அரசோ அதிகாரியோ நினைத்தால் அவர்களை மீண்டும் இந்த காவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களை சிறையிலே அடைக்கலாம் என்பதற்கான வழி வகைகளைச் செய்கிறது, என்ற திருத்தங்களைத் தான் இந்த மசோதாவிலே நம்மால் பார்க்க முடிகிறது.

அந்த அடிப்படையில் பார்ப்போமேயானால் இந்தச் சட்டம் நீதிமன்றங்களுக்கு செல்லுபவர்களுடைய கதவுகளையெல்லாம் சாத்திவிட்டு கோர்ட்டுக்கே செல்ல முடியாது என்ற நிலையில் தனி நபர் உரிமையை அடியோடு பறிப்பதோடு மட்டும் அல்லாமல், தன்னுடைய உரிமைக்காக நீதிமன்றத்திற்கு சென்றால், நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற வழிகளைக் கூட சாத்துகின்ற சூழ்நிலையில், இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாலை 4-40).

தனிநபர் பாதிக்கப்படுகிற நேரத்தில் அவருக்கு இருக்கிற ஒரே வழி நீதிமன்றத்திற்குச் செல்வது தான். அப்படி நீதிமன்றத்திற்குச் சென்று, என்னென்ன காரணத்திற்காக இவரை தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நீதிமன்றம் பரிசீலனை செய்து, விடுதலை செய்யப்பட்டதற்குப் பின்னால் புதிய காரணங்கள் இல்லாவிட்டாலும் மீண்டும் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி சட்டமன்றம் நீதிமன்றத்தினுடைய அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும், நிர்வாகத் துறை நீதிமன்றத்தினுடைய அந்த அதிகாரத்தை ஆக்கிரமிப்பு செய்வது என்பதும் நீதித் துறையின் மீது சேணத்தைப் பூட்டி நிர்வாகத் துறையும் சட்டமன்றமும் சவாரி செய்வதற்

கான சூழ்நிலையைத்தான் உருவாக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே சட்டமன்றம் ஒரு சட்டத்தை உரு வாக்குகிறபோது, ஒரு சடடத்திலே திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, ஜனநாயகத்தில் நீதியை வழங்குகின்ற நீதி மன்றங்களின் சுதந்திரத்தை எந்தக் சுட்டத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பாதித்து விடாமல் மிகக் கவனமாக சட்டத்தை உருவாக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே உள்ள மூலச் சட்டமே நீதிமன்றங்களின் உரிமைகளையும், தனி மனிதனுடைய உரிமைகளையும் பாதிக்கிறது என்று சொல் கிறபோது, இந்தத் திருத்தம் என்பது நீதிமன்றத்திற்கே போக முடியாத அளவிற்கு சூழ்நிலையை உருவாக்குகிறது என்ற காரணத்தால் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக கொண்டு வரக்கூடிய இந்த சட்டத்தை வரவேற்று, நான் ஒரு சில கருத் துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

சாராயக் கடை, கள் ஆகியவைகளை ஒழித்த பிறகு, குதி ரைப் பந்தயம் தடைப்படுத்தப்பட்ட பிறகு இப்படி பல்வேறு அம்சங்கள் நாட்டிலே நடைபெற்ற பிறகு, இதுபோன்ற சட்டங் களுக்கு அத்தியாவசியம் ஏற்படுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சந்தர்ப்பவாத சாட்சியங்கள் சரியாக இல்லாத காரணத்தால் குற்றவாளியும் நீதிமன்றத்தில் விடுதலை ஆகிவிடுகிறான் என்பதை எத்தனையோ சான்றுகள் நமக்கு, இந்த நாட்டிற்கு எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறது; ஆகவே திருடனே தானே திருந்துவதற்குக்கூட இந்தப் பிரிவுகள் 5–ஏ, 14 உட்பிரிவுகள் துணை செய்யும் என்ற வகையில் இந்தச் சட்டத்தை சட்ட மன்றத்தில் அண்ணா திரா விட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கிறது என் பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விபச்சாரியை கைது செய்வதால், பத்தினி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. குண்டர்களைக் கைது செய்வதால், தண் டிப்பதால் தொண்டர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டால் நிரபராதி கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இங்கே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்கு விரிவான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டிலே எப்படிப்பட்ட



ஒழுக்கக்கேடுகள், சீர்கேடுகள் மலிந்திருக்கின்றன என்பதை எண் ணிப்பார்க்க வேண்டும். இந்தப் பிரிவுகள் 5–ஏ, 14 உட்பிரிவு கொண்டு வருவதற்குக் காரணம் என்ன ? கொலை செய்துவிட்டு கோர்ட்டிலே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்கிற குண் டர்கள் அட்டகாசங்கள் அதிகமாக இருப்பதால்தான். அப்படிப் பட்ட நிலைமை எங்கேயிருந்து வந்தாலும் அதை ஒடுக்க வேண் டிய அவசியம் ஒரு அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. ஆகவே, '' ஏர் ஓட்டுகிறவன் இளைத்தவனாக இருந்தால் எருது மச் சான் முறை கொண்டாடும் '' என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் அரசாங்கத்தின் நிர்வாகம், அமைப்பு முறை இருக்கக்கூடாது என்று கடுமையாக்க வேண்டுமென்ற எண்ணத் திலே இதைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய சிக்கல்கள், சீர்கேடுகளை, குற்றங்களை இங்கே நண்பர்கள் எல்லாம் பல்வேறு வகையில் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார்கள். இங்கே நாம் ஒவ்வொன்றாக பார்க்கிற போது நில ஆர்ஜிதம் என்று பார்த்தால் அரசாங்கத்தின் நிலம் ஆக்கிர மிப்பாளர் கையில் இருக்கிறது. கோவில் நிலம் ஆக்கிரமிப்பாளர் கையில் இருக்கிறது. ஏழை எளிய விவசாயிகள் பயிர் செய்ய வேண்டிய பல்வேறு இடங்கள் எல்லாம் குண்டர்கள் கையில், ஆக்கிரமிப்பாளர்கள் கையில் போய் இருக்கிறது.

அதனால், பல்வேறு இடங்களில் போக்குவரத்து, பாசனம், குடியிருப்பு இப்படி ஒரு நாட்டில் பல்வேறு வகையிலே அது தீங்கு செய்யக்கூடிய வகையில், இந்த நிலைமை இருக்கின்ற காரணத் தால், இந்தச் சட்டம் இந்த நேரத்தில் ஒரு அத்தியாவசியச் சட்டம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற் பட்டு இருக்கிறது.

இங்கே குண்டர்களைப் பற்றியும், மருந்துச் சரக்குக் குற்ற வாளிகள் பற்றியும், கள்ளச் சாராயம் பற்றியும், விபச்சாரத தொழில் பற்றியும் இன்ன பிற பற்றியும் நண்பர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே கள்ளச் சாராயக் கடைகளை எடுத்துவிட்டபிறகு இங்கே கள்ளச் சாராயக் கடைகளுடைய நிலைமை என்ன என்பதைப் பார்க்கும் போது, அதனால் பல் வேறு அனுபவங்களை இந்த மதுவிலக்கு ரத்து செய்வதற்கு முன்பே, இந்த அரசு பெற்றிருக்கிறது. நாடு கடத்தப்படவேண் டும் என்றும் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும் இப்படி எல்லாம் சொல்லியும் கூட, அது இந்த நாட்டிலே மது விலக்கை அமுலாக்க முடியாத அளவிற்கு, பல்வேறு சங்கடங்கள் வந்து, சரி குடிப்பதுதான் குடிக்கட்டும், நல்லதாகக் குடிக்கட்டும் என்று கொண்டு வந்துவிட்ட பிறகு, புனிதம் போய்விட்டது என்று அரசியல் கட்சிகள் எல்லாம் புலம்பி, சரி அப்படியானால்

புனிதத்தைக் காக்கிறோம் என்று சொல்லி, சட்டத்தை திரும்பக் கொண்டு வந்து, மக்கள் மத்தியிலே அதை அமுல்படுத்துகின்ற போது இருக்கின்றவர்கலைக் குடிக்காமல் பார்த்துக் கொள்ளவும், இந்தச் சட்டம், அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்ற காரணத்தால்தான், இந்தச் சட்டத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள், இந்த நேரத்திலே.

அதைப்போலவே மருந்துச் சரக்குக் குற்றம் என்று வருகிற போது, அதை ஏன் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அந்த போதை போனால், வேறு ஒரு போதை தேவை என்று இந்த நாட்டுக்கு என்று சொல்லி, இளைஞர்கள் எல்லாம், சிறார்கள் எல்லாம் பல்வேறு வகையிலே சீரழிந்து போய் விட்டார்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இருந்து கொண்டு இருக்கின்றன, இந்தியத் துணைக் கண்டத்திலே. அது தமிழ் மாநிலத்திலே தோன்றாவிட்டாலும் கூட, வந்து போகக் கூடியவர்களால், சுற்றுலாவாசிகளால் பல்வேறு வகைகளிலே பல்வேறு மாநிலங்களோடு தொடர்பு கொண்டவர்களால் ஏற்பட்டு இருக்கின்ற, இதுபோன்ற சீரழிவுகளை எல்லாம் போக்க, ஆரோக்கியமான அரசை அமைக்கக்கூடிய வகையில் மக்களுக்குப் பாதுகாப்பைக் கொடுக்கக்கூடிய வகையில் இருக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய காரணங்கள் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து பேசியிருக்கிறார்கள். கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மற்றும் குடிசைப் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பாளர்கள் போன்று 5 வகையான பிரிவினர்கள், சட்டம் ஒழுங்கை தங்கள் கையில் எடுத்து, வன்முறையிலே ஈடுபட்டு, மக்கள் உள்ளத்திலே பீதியினை ஏற்படுத்தி அவர்களது நடவடிக்கை ஆங்கு வாழ்கின்ற மக்களுக்குப் பொது அமைதியை கெடுக்கக்கூடிய ஒன்றாக அமையுங்கால், அத்தகைய சமுதாய விரோதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென 1982 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திற்குச் சில திருத்தங்கள் இன்றியமையாத் தேவை என வந்துவிட்ட காரணத்தால் இந்தத் திருத்தங்களை தற்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, இத்தகைய திருத்தங்கள் கொண்டுவருகின்ற காரணத்தால் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பே தடுக்கப்பட்டு விடுகிறது என்று கருத்துப் படச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறான ஒன்றாகும். ''நேசனல் செக்யூரிட்டி ஆக்ட்'' என்று சொல்லக்கூடிய 1980-ஆவது ஆண்டு மத்திய அரசினுடைய சட்டத்தைப் பொறுத்த



வரைக்கும் நடைமுறையிலே இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியபோதே குற்றம் புரிகின்ற ஒருவர், சாதாரணக் குற்றத்தைப் புரிகின்றவராக இருந்தால் நடைமுறையில் இருக்கிற, ஜெனரல் லா, பொதுச் சட்டத்தினுடைய அடிப்படையில் நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய குற்றங்கள் அவர்களது நடவடிக்கைகள், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு, மிக அதிகமான பங்கத்தை பொது அமைதிக்கு ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு

(மாலை 4–50)

அவர்களது நடவடிக்கை "If their activities are so grave as to affect adversely the public order ...'' என்ற நிலையிலே இருக்குமேயானால் அப்போதுதான் இந்தச் சட்டத்தை அவர்கள்மீது பயன்படுத்துகிறோமேயொழிய, அப்பாவிகள் மீதோ, நிரபராதிகள் மீதோ, பொது அமைதிக்கு, ஒட்டு மொத்த பொது மக்களுடைய அமைதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயும், பங்கம் ஏற்படாத வகையிலேயும்கூட இந்தச் சட்டம் யார் மீதும் பயன்படுத்தப்படவில்லை. பயன்படுத்தப்படவும் முடியாது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். National Security Act -இல் 2 திருத்தங்களைக் கொண்டு வந்து அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு வந்ததற்குக் காரணம் நடைமுறையிலே சில குற்றவாளிகள் ; அவர்கள் குண்டர்களாக இருக்கலாம்—அப்பாவி பெண்களைக் கடத்திச் சென்று அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பீதியை ஏற்படுத்தி பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தக்கூடிய சமூக, விரோதிகளாக இருக்கலாம். ஆனால், அத்தகையவர்கள், அத்தகைய தவறுகளில், ஈடுபடுபவர்கள் பல குற்றங்களைச் செய்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரிகள், அவர்கள் செய்கின்ற குற்றங்களில் எந்தக் குற்றத்தை விடுவது ; எந்தக் குற்றத்தை எடுப்பது என்று கருதாமல், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இருவகையாக இதிலே நாம் பிரித்துப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். ஒன்று, ஒரு பெண்ணை அவன் கற்பழிக்கிறான் ; யாருக்கும் தெரியாமல் அவன் ஒருவனை கொன்று விடுகிறான் ; குத்தி விடுகிறான் என்றால் அதை மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத அளவிற்கு அந்தத் தனிப்பட்ட, பாதிக்கப்பட்ட நபருக்கு பாதிப்பு என்று வருகின்றபோது

The provisions of this Act won't be used.

ஆனால், அவன் தொடர்ந்து அத்தகைய பல குற்றங்களைச் செய்கின்றவனாக இருந்தாலோ அல்லது இதுபோன்ற கொடூரமான செயல்களில் ஈடுபடுகின்றபோது அந்தப் பகுதியிலே வாழ்கிற

பொதுமக்களுக்குப் பீதி, அச்சம் ஏற்படக்கூடிய அளவிற்கு அவனுடைய நடவடிக்கைகள் பயங்கரமாக இருக்கின்றபோதுதான் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. அத்தகையவர்கள், 4, 5 தவறுகளைச் செய்கின்றபோது, என்னென்ன தவறுகளைச் செய்கிறார்களோ, குற்றவாளிகள் செய்கின்ற தவறுகளை, அதிகாரிகள், அந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒருவனை குத்தி விடுகிறான்—ஒருவன் தனிமையிலே இருக்கின்றான்—அவனை குத்தி விடுகின்றான் என்றால் அதனையும் குற்றமாகக் கருதுகிறபோது Technically the Court decides it cannot be taken as disturbance to public peace. என்ற முறையிலே, இந்த நோக்கம் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடாது என்று தெளிவாக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் "acting in any manner prejudicial to the public peace" என இருக்கிறது. அதனுடைய விளக்கம், பொதுவாக Drugoffender ஆக இருக்கலாம்; குண்டர்களாக இருக்கலாம், Immoral Traffic Act-இல் ஈடுபடுபவர்களாக இருக்கலாம், யாராக இருந்தாலும் சரி, their activities—if they are likely to adversely affect the public order is an offence. என இருக்கிறது. அப்படி பப்ளிக் ஆர்டரை பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய அளவுக்கு அவர்களுடைய நடவடிக்கை பயங்கரமாக இருக்குமேயானால், அந்தக் குற்றத்திற்கு மட்டுமே இந்தச் சட்டத்திலே கைது செய்யலாம் என்று இருக்கிற காரணத்தால், மற்றப்படி பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாத தனிப்பட்ட நபரைத் தாக்கி, அழித்து, சித்திரவதை செய்கின்ற அந்தக் குற்றம் இந்தச் சட்டத்திலே வராது என்ற காரணத்தால் அப்படி இரு குற்றங்களையும், 3 குற்றங்களையும் சேர்க்கின்ற போது இந்த ஒரு குற்றம், பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துகிறது ; எந்த ஒரு குற்றம் தனி நபருக்கு மட்டும் பாதிப்பு தருகிறது என்பதை ஆய்ந்து நீதிமன்றம் தனி நபருக்கு பாதிப்பு தருகின்ற அந்தக் குற்றத்தை, அந்தக் குற்றவாளியை இந்தச் சட்டத்தின் கீழ் நீங்கள் கைது செய்யக் கூடாது என்ற முடிவை நீதி மன்றங்கள் எடுக்கிறது.

ஒருவன் அந்த தனிப்பட்ட நபருக்கு பாதிப்பு தருகின்ற அந்தக் குற்றச்சாட்டையும் செய்து பொதுமக்கள் மத்தியிலே பீதியை ஏற்படுத்தக்கூடிய, பயங்கரத்தை ஏற்படுத்தக்கூடிய பயங்கரமான குற்றச்சாட்டையும் செய்து, இரண்டு குற்றங்களையும் இணைத்து அவன் கைது செய்யப்படுவானேயானால் அப்படி ஒரு உண்மையான ஒரு குற்றச் சாட்டை இந்தச் சட்டத்துக்கு உட்பட்ட குற்றச்சாட்டை செய்த அவன் உட்படாத குற்றத்தையும் மற்ற சட்டத்தினுடைய குற்றத்தையும் செய்திருக்கிறபோது அவனை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்ற "technically he has been released."



நிலை தமிழகத்தில் மட்டும் அல்ல பாரதத்தில் பல்வேறு மாநிலங்களிலும் National Security Act நடைமுறைப் படுத்தப்பட்டபோது அது நீதி மன்றங்களுடைய தீர்ப்பு வழியாக வந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் கூட இந்த Boot-leggers and Goondas Act ஐ நாம் 1982 லிருந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம். அப்படி 82 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தி பல்வேறு குற்றங்கள் புரிந்தவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் நிரபராதிகள் இந்தக் சட்டத்திலே தண்டிக்கப்பட்டு விட்டார்கள்; தண்டிக்கப்பட்டு விடுவார்கள் என்ற அச்சத்திற்கு அவர்கள் செல்லக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் 1982ல் இந்தச் சட்டம் வந்ததிலிருந்து இதுகாறும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த கட்சியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றோ அல்லது அதிகாரிகளுக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்றோ எந்த ஒருவர் மீதும் இதுகாறும் இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை நான் உத்திரவாதமாக இந்த அவைக்குத் தர விரும்புகிறேன். நீதி மன்றத்திற்கு சில வழக்குகள் சென்று இருக்கின்றன. அந்த வழக்குகள் தோல்வி அடைந்து இருக்கின்றன. குற்றவாளிகள் தப்பித்து இருக்கிறார்கள். ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கைது செய்யப்பட்டார்கள் என்றோ அல்லது அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரேயாகம் செய்தார்கள் என்றோ யாரும் இதுகாறும் அந்த வழக்கை தள்ளுபடி செய்யவில்லை. மாறாக on technicalities என்ற முறையில் நான் ஏற்கனவே சொன்னது போல் ஒருவர் கைது செய்யப்படுகிறார் என்றால் more than one ground அடிப்படைக் காரணங்கள் 3, 4 காரணங்கள் இருந்து இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு காரணமும், மற்ற சட்டத்தின் கீழ் ஒரு இரு காரணமும் இருக்குமானால் அவற்றை இணைக்கக் கூடாது என்ற முறையில் அவர்கள், கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும் போது சொன்னார்கள், இந்தச் சட்டம் அப்பாவி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி எந்த ஒரு சிறு உதாரணத்தையும் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் என்பதை ஒரு ஆய்வின் மூலமாக நீங்கள் கண்டு அறியலாம். (குறுக்கீடு) I am not yielding now. Excuse me.

இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறவர்கள் 1982லிருந்து கிட்டத்தட்ட 1543 பேர். இதிலே, 15, 20 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். காரணம் இதில் பாரபட்சம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும் இந்தச் சட்டம் பொது மக்களின் நலனைக் கருதியும், அப்பாவி மக்களின் நலன் கருதியும், சாதாரண மக்களின் நலன் கருதியும் சமூக விரோதிகளிடமிருந்து அவர்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டும் என்ற முறையில் பாரபட்சமின்றி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். அத்தகைய உத்திரவினை காவல் துறை அதிகாரிகளுக்கு இட்டு இருக்கிறார்கள்.

மணலியில் இந்தச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தவறு. அந்த வழக்கில் கூட on a technical ground the case has been dismissed குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

அதைப் போலவே கன்யாகுமரி மாவட்டத்திலே காவல் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி வேண்டும் என்றே செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வழக்கில் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லுகிறபோது politically motivated என்று சொன்னார்கள். உத்திரவாதமாகச் சொல்லுகிறேன். அதை நீங்கள் எழுதிக் கொடுங்கள். ஆதாரம் இருக்குமானால், எந்த நடவடிக்கையும் எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல வில்லிவாக்கத்தில் ஒருவரை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். மார்க்சிஸ்டு இயக்கத்திற்கு தேர்தல் பணி செய்த காரணத்தால் அவரை இந்தச் சட்டத்தில் கைது செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு. எந்த ஒரு கால கட்டத்திலும் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு நபருடைய தனிப்பட்ட குற்றத்திற்காக கூட மாநிலத்தில் பயன்படுத்தப்பட வில்லை. மாறாக பொது அமைதிக்காக, ஒட்டு மொத்தமான பயங்கரமான ஒரு ஆபத்தை விளைவிக்கக் கூடிய பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் ஆகத்தான் இருக்க வேண்டும். இந்தச் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்கள் யார் என்று எங்கே இருந்தாலும், யார் வேண்டுமானாலும் சென்று விசாரிக்கலாம், அந்தப் பகுதி மக்களை நீங்கள் கேட்கலாம், பயங்கரவாதிகள், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தக்



கூடிய அளவுக்கு பெண்களை கடத்துகிறவர்கள், விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறவர்கள், குற்றவாளிகள், அல்லது குண்டர்கள், அல்லது கொடூரமான முறையில் நில ஆக்கிரமிப்புச் செய்து ஏழைகளை துன்புறுத்துகிறவர்கள், அல்லது பிறர் நிலங்களை ஒட்டுகிறவர்களை துன்புறுத்துகிறவர்கள், தான் இதுகாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். Advisory Board is not functioning properly. என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்தகைய உள் நோக்கம் கற்பிக்கக்கூடிய ஒரு குற்றச் சாட்டை நீதிபதிகள் அடங்கிய அந்த அட்வைசரி போர்டு மீது சொல்லக் கூடாது. சொல்லுவது தவறு என்று நான் கூற விரும்புகிறேன். அட்வைசரி போர்டைப் பொறுத்தவரைக்கும், ஒரு குற்றவாளி குற்றத்தைப் புரிகிறார், பெண்ணைக் கடத்தி, விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறார் என்றால், பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்குகிறார்கள். பயங்கரவாதியாக இருக்கிறார்கள். அவனை அட்வைசரி போர்டு கைது செய்தது சரி என்று சொன்னால் அந்த அட்வைசரி போர்டு மீது நாம் களங்கம் கற்பிக்கக்கூடாது. நீதிபதிகள் அடங்கிய அட்வைசரி போர்டைப் பொறுத்த வரைக்கும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சில நேரங்களிலே மாண்புமிகு உறுப்பினர் திரு சின்னராசு அவர்கள் சொன்னது போல் கோர்ட்டினுடைய தீர்ப்பு ஒன்று, உண்மை நிலை ஒன்று ஆக இருக்கிறது. காரணம் நீதிமன்றங்களைப் பொறுத்த வரைக்கும் In the land acquisition matter, due compensation was not paid ஆனால் உண்மை நிலை சில நேரங்களிலே வேறாக இருந்து விடுகிறது. நடைமுறையில் அதை நாம் பார்க்கிறோம். நீதி மன்றத்திற்குச் சென்று,

(மாலை 5-00).

நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் குற்றத்தை புரிந்து விட்டு, குற்றம் புரியாத உத்தமர்கள் போல் செயல்பட்டால், சமுதாயத்தில் ஒரு அவலநிலை மலிந்து விடும். நல்லவர்கள் தலை தூக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு விடும் என்ற உணர்வின் காரணமாகத்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

நிரபராதி உள்ளே சென்று, காவல்துறையினர் பணம் பெறுவதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சொன்னார்கள். அப்படி ஏதேனும் எங்கேனும் காவல் துறையைச் சார்ந்தவர்கள் உள் நோக்கத்தோடு, தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபாடு காட்டி, யார்

மீதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அவர்கள் மீது கடுமையான, கண்டிப்பான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறாது என்ற உத்திரவாதத்தை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் உத்திராபதி அவர்களும், பாரதி அவர்களும் பேசும்போது விபச்சாரக் கொடுமையிலிருந்து தமிழ்ப் பெண்களைப் பாதுகாக்க, இந்தச் சட்டத்தை இன்னும் கடுமையாக ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள், அந்தக் கருத்தோடு நான் ஒன்றுகிறேன். காவல்துறைக்கு தக்க உத்தரவிட்டு, அப்பாவிப் பெண்களை கடத்திச் சென்று, ஒரு ஊரிலிருந்து வேறு ஒரு ஊருக்கு கடத்திச் சென்று, விபச்சாரத் தொழிலில் கட்டாயமாக ஈடுபட வைத்தவர்கள் மீது இந்தக் கொடுமையைப் புரிகின்றவர்கள் மீது நடவடிக்கை அப்போதைக்கப்போது எடுக்கப்பட்டு வருகிறது. புதிய சட்டத்திலே அவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடனடியாக உத்தரவிட்டு இந்தச் சட்டத்தின் கீழ் தமிழகத்திலே ஒரு பீதியை உருவாக்கி, விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் சம்பந்தமாக, தமிழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அல்லது வெளி மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இங்கு வந்து ஈடுபடுகின்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது தக்க நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் சொல்லவிரும்புகிறேன்.

அடுத்து மருந்து கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள் சொன்னார்கள். காவல்துறைக்கு தக்க உத்திரவிட்டு, இந்தக் குற்றவாளிகள் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் கீழ் கடுமையான முறையில் தண்டிக்கப்பட்டு, பொது மக்களுடைய நலன் பாதுகாக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் 'லேண்ட் அக்விசிஷனில்' 'ட்யூ காம்பன்சேஷன்' உழவர்களுக்கு இன்னும் கொடுக்கப்படாமல், எஞ்சியிருக்கிறது என்றும், அவர்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் பாரதி அவர்கள் சொன்னார்கள். அந்த விவரங்களைத் தந்தால் கண்டிப்பாக, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்ட, பயங்கரமான நபர்கள், குற்றவாளிகள் எல்லாம் மீண்டும் தவறுகளைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தின்படி நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி, அவர்கள் 'ஏ' கிளாஸ் பிரிசனர்களாக நடத்தப்படவேண்டுமென்று நீதி மன்றத்தினுடையதீர்ப்பு



இருக்கின்ற காரணத்தினால், தவிர்க்கமுடியாத நிலை இருந்து வருகிறது. இதுகுறித்து மத்திய அரசிடம் கலந்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுக்க இந்த அரசு ஆயும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது, நீதிமன்றத்தினுடைய அதிகாரத்தை, சுதந்திரத்தை இது பறிப்பதாக அமையாதா என்ற வினாவை கேட்டார்கள் இது தவறான கருத்து. காரணம், நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டத்தினுடைய பிரிவுகளுக்கு உட்பட்டுத்தான் நீதிமன்றம் தீர்ப்பினை வழங்குகிறது. இதிலே ஏற்கனவே நான் சொன்னது போல, ஒரு சாதாரண குற்றம் புரிந்து, இன்னொரு பயங்கரமான குற்றத்தையும் செய்தால், இப்படி இரண்டு குற்றங்கள் என்று வருகின்றபோது, (Tecinically he wins the case) என்ற வகையிலே இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே ஒழிய, மற்றபடி நீதிமன்றத்தினுடைய சுதந்திரத்தில் தலையிடுவதாகவோ, நிரபராதிகளைத் தண்டிப்பதாகவோ இந்தச் சட்டத்னுடைய நோக்கம் எள் அளவிற்கும் இல்லை. தமிழ் சமுதாயத்தினருடைய நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகிற பயங்கரமான சமூக விரோதிகளைத் திருத்த வேண்டும், அவர்கள் திருந்தி வாழவேண்டும் என்றும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

திரு. ஏ எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாரையுமே குற்றவாளியாகப் பிடித்துப் போடுவதில்லை என்று சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. விருதுநகரிலே இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே தகராறு இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் பிப்ரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். குண்டர்கள் ஆக்ட் படி இரண்டு பேரையும் பிடித்துப் போட்டார்கள். அவர்கள் மீண்டும் வந்த பிறகு, ஒரு பக்கம் மட்டும் நான்கு பேரை மட்டும் பிடித்து, குண்டர் ஆக்டிலே போட்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் போடப்படவில்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், இரண்டு பக்கமும் தவறு நடந்து இருக்கிறது.

போலீஸ் ரிக்கார்டுகளைப் பார்த்து நீங்கள் ஏன் குண்டர்கள் சட்டத்திலே போடவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. பின்னாலே போட்டிருக்கிற 3, 4 பேர்களும் எந்தவிதமான குற்றமும் செய்ததாக என்னைப் பொறுத்தவரையிலும் தெரியவில்லை. முதலிலே செய்தவர்களைத்தான், இரண்டு பேர்களை இரண்டு பக்கமும், ஆளுக்கு ஒருவராகப் பிடித்துப் போட்டார்கள். அவர்கள் வெளியிலே வந்து விட்டார்கள். இப்போது 3, 4 பேர்களைப் பிடித்துப் போட்டால், என்ன குற்றம் அவர்கள்

செய்தார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. அதே போல் எதிர்த் தரப்பிலேயிருந்து ஏன் பிடித்துப் போடவில்லை? 2 கோஷ்டிகள் இருந்து கொண்டே இருக்கிறது. போலீஸ் ரிக்கார்டு களைப் பார்த்து நீங்கள் செய்யலாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதே போன்று ராஜபாளையம் போன்ற பகுதி களிலே இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் போலீஸ் ரிக்கார்டுகளிலே பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயங்கரக் குற்றங்களைச் செய்கின்றவர்கள் சில நேரங்களில் போலீஸ் ரிக்கார்டுகளில் தடயங்கள் இல்லாத அளவுக்குக் கூட செய்துவிடுகிறார்கள். என்ன என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாருங்கள். அதை ஐ. ஜி. அவர்களிடம் ஒப்படைத்து, விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் வருகிற வழக்குகளில் ஒரு வழக்கிற்கு 2, 3 எஃப். ஐ. ஆர். இருக்குமேயானால், நேரடி யாக—ஒரு பெஞ்ச் சொல்கிறது, அவர்களை டீடெயின் செய்யலாம் என்று மற்றொரு பெஞ்ச் சொல்கிறது—அவர்கள் Police ccnfinement இருந்தாலேயே போதும், அவர்களை, டீடெயின் செய்து விடலாம் என்று சொல்கிறார்களே, இதுவே பயங்கரமாக இருக்கிறது அல்லவா ? இதை மாற்றுவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிக்குட்பட்டு

Provisions of the Act and rules are interpreted by the Court. On the basis of the provisions, the judgements are delivered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர் கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/ 1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.



பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர் கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/ 1986) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 6. அறிக்கை அளித்தல்.

**ராணி மங்கம்மாள் போக்குவரத்துக்கழகம் துவக்கப் பெற்றது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 238-ன்கீழ் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் 1—4—1986 இல் துவக்கப்பட்டதனுடைய விளக்கம் :

"பொதுமக்களுடைய கோரிக்கைகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டி, 600க்கு மேற்பட்ட பேருந்துகளைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவேண்டும் என்றும் முடிவு எடுத்து அதற்கேற்ப அரசு செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் முதலில் பாண்டியன், சேரன், கட்டபொம்மன், சோழன் போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து முறையே, மருதுபாண்டியன், ஜீவா, நேசமணி போக்குவரத்துக் கழகங்களாக ஏப்ரல் 1983 இலும் மற்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகமாக ஏப்ரல் 1985 இலும் துவக்கப்பட்டன. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் 1,007 பேருந்து களைக் கொண்டு, மதுரை மாவட்டத்தில் இயங்கி வந்தது. பின்னர் மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".



திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற வன விலங்குகள் சட்டத்தின் மூலமாக காடுகளில் திருடுவது மற்றும் அழிப்பதைத் தடுத்தல் மற்றும் வேறு சட்டங்களின் மூலமாக பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துபவர்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல், சமுதாய விரோதிகளைத் தடுத்தல், குண்டர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்தல் போன்றவற்றிற்கு வழிவகை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிமுக நிலையில் பேசுவது சுருக்கமாக இருக்க வேண்டும். விளக்கக் கூடாது. நடைமுறையில் இதற்கு எல்லா கட்சியினரும் ஒத்துழைப்பு தருகிறார்கள். ஆனால் விவாதத்தின்போது விரிவாகப் பேச அனுமதிக்கிறோம். தாங்கள் அப்போஸ் பண்ணுவதாக குறிப்பிட்டால் போதும். தாங்கள் அப்போஸ் பண்ணிவிட்டீர்கள் அதுபோதும்,

பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி. சி. ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

46/87



திருத்தச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1987) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக்கு ஓர் அறிவிப்பு. அனைத்து உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, சட்ட முன்வடிவுகள் நிறைவேறும்வரை தொடர்ந்து அவை நடைபெறும்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், நில ஆக்கிரமிப்பாளர்கள், மருந்துக் குற்றவாளிகள் ஆகியோர்களைத் தண்டிக்கின்ற அடிப்படையில் உருவான அந்தச் சட்டத்தில் இன்றையதினம் திருத்தம் கொண்டுவரப்பட்டு இங்கே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதிலே பிரதானமாக ஒன்றை இச்சட்ட திருத்தத்தின் மூலம் சேர்த்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக எக்சிகியூட்டிவ் அதாரிட்டி என்கின்ற நிர்வாக இயந்திரத்திடம் ஜுடிசியல் பவர் என்கின்ற நீதி வழங்குகின்ற அதிகாரத்தை வழங்குகின்ற நோக்கிலே மிகவும் ஜாக்கிரதையாக வழங்க வேண்டும். இச்சட்டத்தின் மூலம் நீதித்துறையினுடைய அதிகாரத்தை எடுத்து நிர்வாகத் துறைக்கு வழங்குகின்றோம், அப்படி வழங்குகின்றபோது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே அதிகாரிகள் தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை நிச்சயம் உருவாகும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் எச்சரிக்க விரும்புகிறேன்.

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 நவம்பர் 18

ஏற்கனவே பல்வேறு சட்டங்கள் இன்றைக்கு அமலில் இருக்கின்றன. வனத்திலே குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது; அதைப்போன்று கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது; விபச்சாரம் செய்பவர்களைத் தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. நில ஆக்கிரமிப்பு குற்றவாளிகளைத் தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டங்களை எல்லாம் விட்டுவிட்டு, தனியாக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை உருவாக்கி, அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமாக இருக்கும் என்று கருதுகிறேன். 'கிங் ஆஃப் கிங்ஸ்' என்று சொல்வதைப்போல அப்படிப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க இப்படிப்பட்ட ஒரு சிறப்புச் சட்டத்தை அரசு விரும்புகிறது என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை உருவாக்கி, அப்படிப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கு முன்பாக அந்தக் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கு ஆட்சியில் இருப்பவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக வனக் குற்றவாளிகள் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வனங்களிலே இருந்து இன்றைக்கு சந்தன மரங்கள் மற்றும் விலை ஏறிய மரங்களை எல்லாம் வெட்டி கடத்துகிறார்கள் என்பது உண்மை என்றாலும் வனத்துறை அதிகாரிகள் இந்தக் குற்றவாளிகள் இந்தக் குற்றங்களைச் செய்யாமல் தடுக்க என்ன முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாக எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

வனம் என்று சொல்லுகிறபோது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தொடங்கி காடுகள் மற்றும் வனத்துறைக்குச் சொந்தமான இடங்கள் எல்லாம் உள்ளடங்கும். இவ்வளவு பரந்த இடத்தில் இந்தக் குற்றங்கள் நடக்காமல் இருப்பதற்கு அரசு எந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிறபோது அரசு ஒன்றைக் கவனிக்க வேண்டும். 'கம்யூனிக் கேஷன் நெட் ஒர்க்' என்று சொல்வார்கள். இன்றைக்கு வன அதிகாரிகள் இருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளையும் ஒரே நேரத்தில் அவர்கள் கண்காணிக்க முடியாது; இயலாது. ஆனால் ஒரு இடத்தில் குற்றம் நடக்கிறது என்றால் குற்றவாளிகளின் எண்ணிக்கை, அவர்களுடைய பலம் அதிகமாக இருந்தால் அந்த



1987 நவம்பர் 18] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

அளவுக்கு அதிகாரிகளுடைய பலத்தை அதிகமாக்கிக்கொள்ள 'கம்யூனிக்கேஷன் நெட் ஒர்க்' இந்த வனத்துறை அதிகாரிகளிடம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

காரணம், மேற்குத் தொடர்ச்சி மலை பல நூற்றுக்கணக்கான மைல் நீளமுடையது. காட்டுப் பகுதிகள் பல ஆயிரம் சதுர மைல்கள் கொண்டதாக இருக்கின்றது. வனத்திலே ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியாக அதிகாரிகளை நியமிப்பது இயலாது என்றாலும் ஒரு அதிகாரியை வைத்து, செய்தி தொடர்பு மூலமாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அந்த அதிகாரி வந்து சேர, அதற்கான 'கம்யூனிக்கேஷன்' இருக்கிறதா என்றால் இல்லை. அதனால் தான் வனத்திலே இப்படிப்பட்ட குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு இப்படிப்பட்ட ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவரக் காரணம், ஏற்கெனவே 'நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்' (என்.எஸ்.ஏ.) தேசியப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் யாரையாவது கைது செய்தால் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழக சிறப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்தால் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக இந்த அரசால் நியமிக்கப்படுகின்ற ஒரு குழுவின் முன்னால் குற்றவாளிகளாகக் கருதப்படுகிறவர்கள் ஆஜர்படுத்தப்படுவார்கள். அந்தக் குழு விசாரித்து, தேவைப்பட்டால் அவர்களைச் சிறையில் அடைக்க உத்தரவிடுவார்கள்; சிறையில் அடைக்கப்படுவார்கள்; இல்லை என்றால் விட்டு விடுவார்கள். சிறையிலே அடைக்கப்பட்ட குற்றவாளிகளாக இருந்தால் அவர்களை விசாரித்து, மேலும் அவர்களை சிறையிலே வைக்கப் போதுமான காரணங்கள் இருந்தால் மேலும் கால நீட்டிப்பு செய்வார்கள்; இது ஓராண்டு தொடரும் என்று இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழு அரசாங்கத்தாலே நியமிக்கப்படுகிற ஒன்று. குற்றவாளிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் வாதாட, காரண காரியங்களை எடுத்துச்சொல்ல வழக்கறிஞர்களை நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, இந்தச்

சட்டத்தைப் பயன்படுத்தி, அதிகாரிகள் அதிகமான அதிகாரத்தைப் பெற்று, பெருத்த தவறு செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இப்படிப்பட்ட சிறப்புச் சட்டத் திருத்தத்தை அமல்படுத்துகின்ற நேரத்தில் ஒருசில குறிப்பிட்ட கால வரையறைக்குப் பின்னாலே அரசாங்கமே ஒரு குழுவை நியமிக்கவும், இந்தச் சட்டம் எந்த அளவுக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது, இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்களை, எண்ணங்களை அமல்படுத்துகிறபோது அதிகாரிகள் ஒழுங்காக செய்திருக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கான வாய்ப்பினை அந்தக் குழுவிற்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தால் அரசாங்கத்தினுடைய எண்ணங்கள், நோக்கங்கள் சரியான முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வாய்ப்பு இருக்கும். அப்படிப் பார்க்கின்றபோதுதான் இது பொது மக்களுக்குத் தொல்லை கொடுப்பதாக இருக்கிறது அல்லது இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் உடனடியாக இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்.

(பிற்பகல் 1-20)

ஆனால் இதுவரையிலும் அரசாங்கம் இப்படி ஒரு எண்ணத்தை எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் எல்லாம் அந்தத் தொடர்புடைய சட்டங்கள் மூலமாக தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அதிலே உள்ள சிரமங்களை எண்ணிப் பார்த்து, நடைமுறையை எண்ணிப் பார்த்து சுருக்கமாக்க வேண்டும். சில நேரங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவர்கள் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள்மீது கூட இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுவிடுகிறார்கள் என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிறது என்று ஏற்கெனவே 1982 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த அச்சமும் தொடருகிறது. இன்றைக்கு அந்த நடவடிக்கைகளும் தொடர்ந்துகொண்டு இருப்பதன் காரணத்தால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்கள் இன்றைக்கு பாழடிக்கப்படுகின்றன. இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்களின் முனை



முறிக்கப்படுகிற காரணத்தால் இந்தச் சட்டத்தை மாற்றி இன்றைக்கு மக்களுக்குத் தேவையான அடிப்படையில் இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவை நான் மனதார வரவேற்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைச் சட்டமாக இயற்றினால் மட்டும் போதாது. இதனை நடைமுறைப்படுத்துகிறபோது இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் இரும்புக் கரம் கொண்டு தயவு தாட்சண்யம் இன்றி அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு கண்டிப்பாகக் கடுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில் தண்டனை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் காடுகளைப் பொறுத்த வரையில் வன விலங்குகளே இல்லை என்ற நிலை விரைவில் வந்துவிடும் என்ற அச்சம் இங்கே இருக்கிற நமக்கெல்லாம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இந்த வன விலங்குகள் நல்லபடியாக இருக்க வேண்டும். அவற்றை வெகு விரைவில் பெருக்கி வன விலங்குகள் அதிகமான அளவில் காடுகளில் இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

சத்தியமங்கலத்தைச் சேர்ந்த காடுகளில் வன விலங்குகள் வேட்டையாடப்படுவது நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருக்கிறது. அவ்வாறு அவர்கள் கொள்ளை அடிக்கின்ற அந்தப் போக்கு வெளிப்படையாகவே அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சத்தியமங்கலம் காடுகளில் ஆண் யானைகளே இல்லை என்ற நிலைமை உருவாகிக்கொண்டு இருக்கிறது. இரண்டு அங்குலம் அளவுக்கு தந்தம் முளைத்தால்கூட அந்தத் தந்தங்களுக்காக அந்த ஆண் யானைகள் கடத்தப்படுகின்றன. ஆகவே இதைக் கண்டிப்பாகத் தடுத்தாக வேண்டும். இன்னும் சொல்லப் போனால் சத்தியமங்கலம் காடுகளில் இருக்கிற பெண் யானைகள் எல்லாம் இன விருத்தி செய்ய முடியாமல் ஆண் யானைகளைத் தேடிக்கொண்டு கேரளா மற்றும் கர்நாடகத்தின் காடுகளுக்குச் சென்று கொண்டு இருக்கிற நிலைமைதான் இப்போது அங்கே இருக்கிறது.

இன்னும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். சமீப காலங்களில் அதாவது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக மேட்டூரைச் சேர்ந்த வீரப்பன் என்பவருடைய தலைமையில் இருக்கிற கோஷ்டி வேட்டையாடி இருக்கிறது. அவர்கள் பல வருடகாலமாக இதைச் செய்து வருகிறார்கள். கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக ஒரு யானையைக் கொன்று அதன் தந்தத்தை அறுத்துக்கொண்டிருக்கிறபோது வனத்துறை அதிகாரிகளும் வனத்துறைக் காவலர்களும் சுற்றி வளைத்துப் பிடித்தார்கள். ஆனால் அந்தக் கோஷ்டியினர் எதற்கும் பயப்படாமல் துப்பாக்கியை எடுத்து மட மட என்று சுட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். தப்பி ஓடிவிட்டார்கள். ஏன் இந்த நிலைமை என்று அதிகாரிகளைக் கேட்கிறபோது பழைய துப்பாக்கியை வைத்துக்கொண்டு நாங்கள் குறிபார்த்துச் சுடுவதற்குள்ளாக அவர்கள் கையில் வைத்திருக்கின்ற நவீனமான ஸ்டென் கன் மூலமாக எங்களைச் சுட்டுவிட்டு தப்பி ஓடிவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே வனத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நாம் ஏன் மிக நவீனமான துப்பாக்கிகளை வழங்கக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாபிலே இருக்கிற தீவிரவாதிகள், உலகின் சில பகுதிகளில் இருக்கின்ற சிலர், உணவு இட்டவர்களையே, அடைக்கலம் தந்தவர்களையே எதிர்த்து அப்பாவி மக்களைக் கேடயமாக்கிக் கொண்டு திருட்டுச் சண்டை போடுகிறவர்கள் எல்லாம் இன்று நவீனமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு இருக்கும்போது நாம் ஏன் வனத்துறைக்கு அப்படிப்பட்ட நவீனமான இயந்திரங்களை அளிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இந்தச் சம்பவம் நடந்தபிறகு அந்தக் கொள்ளைக் கோஷ்டியைப் பிடிப்பதற்காக வனத்துறையைச் சேர்ந்தவர்களும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் ஏறத்தாழ 300 பேர் அந்தக் காட்டையே சுற்றி வளைத்துச் சல்லடை போட்டுத் தேடினார்கள். இருந்தாலும் அந்தக் கொள்ளைக் கோஷ்டியைப் பிடிக்க முடியவில்லை. காரணம், அவர்கள் காட்டுப் புதர்களிலும், மரங்களிலும் மற்றும் வனத்திலே இருக்கின்ற மறைவிடங்களிலும் மறைந்து சென்றுவிடுகிறார்கள். ஆகவே அவர்களைப் பிடிப்பதற்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது என்று கூறினார்கள். ஆகவே நான்



இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம் அந்த வனத் துறை அதிகாரிகளுக்கு அத்தகைய கயவர்களையும் கொள்ளையர்களையும் பிடிப்பதற்கு ஹெலிகாப்டர் போன்ற வசதிகளைத் தந்து உதவினால்தான், தீங்கு செய்பவர்களைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோலத்தான் காடுகளிலே இருக்கிற சந்தன மரங்களை வெட்டுபவர்களுடைய திருட்டுத்தனமான செயல்கள் மிக அதிகமாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை இப்படியே நீடிக்குமேயானால் வருங்கால குழந்தைகளுக்கும், வருங்கால சந்ததியினருக்கும் எல்லாம் தந்தம் என்பதையும், சந்தன மரம் என்பதையும் ஒரு காட்சிப் பொருளாகக் காண்பித்து, ஒரு காலத்திலே இவை தமிழகத்தில் இருந்தன என்று சொல்ல வேண்டிய நிலைமைதான் வரும். ஆகவே அதை எல்லாம் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இத்தனை குற்றங்களும் வன இலாகாவிலே நடப்பதற்கு சில அதிகாரிகளும் துணை போகிறார்கள் என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனென்றால் அந்த வனத்துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் தந்தத்தை கொள்ளை அடிப்பதும் சரி, மரங்களை அறுப்பதும் சரி, சந்தன மரங்களை கடத்துவதும் சரி கண்டிப்பாக நடைபெற முடியாது. ஆகவே அவர்களுடைய ஒத்துழைப்போடுதான் அத்தகைய செயல்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய அதிகாரிகள் அந்தக் கடத்தல்காரர்களையும் கொள்ளைக்காரர்களையும் விட்டு விட்டு, ஏதோ தலைச்சுமையாக சுள்ளிகளையும், காய்ந்துபோன மரங்களையும் எடுத்துக்கொண்டு செல்கிற ஏழை எளிய மக்களை மிரட்டி கையூட்டு பெறுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அத்தகைய நிலைமை மாற்றப்பட வேண்டும்; இந்தச் சட்டத்தின் மூலமாக அந்த ஏழை எளிய மக்களுக்குத் துன்பங்கள் துடைக்கப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கடைசியாக கள்ளச் சாராயக்காரர்கள் இந்தச் சட்டத்திலே புகுத்தப்பட்டிருக்கிறார்கள்; அவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். கள்ளச் சாராயத்தைக் காய்ச்சு

பவர்களை, உண்மையாக அந்தத் தொழிலிலே ஈடுபடுபவர்களைக் கண்டிப்பாகக் கைது செய்ய மாட்டோம் என்ற நிலையைக் காவல் துறையினர் எடுத்திருக்கிறார்கள். மாறாக ஒன்றுமே தெரியாத சாராயம் என்றால் கருப்பா வெள்ளையா என்று தெரியாத அப்பாவி மக்களை எல்லாம் சாராயம் காய்ச்சியதாகவும் சாராயத்தை வைத்திருந்ததாகவும் இந்தச் சட்டத்தின் கீழ் சில அதிகாரிகள் . . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வன இலாகா அதிகாரிகள் மீது பொத்தம் பொதுவாக சில குற்றங்களை சுமத்தினார்கள். இப்போது கள்ளச் சாராயம் தயாரிப்பவர்கள் மீது நடவ்டிக்கை எடுப்பது பற்றி பொதுவாகச் சொல்லி வருகிறார்கள். இப்படிப் பொத்தம் பொதுவாகச் சொல்லாமல், குறிப்பிட்டு இன்ன அதிகாரி இன்ன இடத்தில், இப்படி என்று சொன்னால் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாட்டில் நடப்பதுபோல் வன இலாகாவிலோ, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீதோ வேறு எந்த மாநில அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

**திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போல் நான் வன இலாகாவைப்பற்றிப் பேசும்போது ஒட்டு மொத்தமாக எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. மிகக் குறைந்த அளவில் இன்னும் சொல்லப்போனால் 5 சதவிதம் அதிகாரிகள்தான் அத்தகைய செயல்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொண்டு, அதேபோல காவல் துறையைச் சார்ந்தவர்கள் எல்லோரையும் நான் குறிப்பிட விரும்பவில்லை; ஆனால் அவர்கள் எவன் எவன் கள்ளச் சாராயத்தை காய்ச்சுகிறானோ அவனை விட்டு விட்டு அப்பாவி மக்களைப் பிடிக்கின்ற வகையில்தான் இன்றைக்கு நிலைமை இருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் கண்டிப்பாக, இந்த அரசின் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்றோ அரசு துறைகள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்றோ சொல்லவில்லை. இந்தச் சட்டம் முழுமையாக, முழு மனத்தோடு இரும்புக் கரம் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட





வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் கூறுகிறேன் என்று சொல்லி இந்தச் சட்டத்தை மனமாற வரவேற்று, இதுபோன்ற நல்ல சட்டங்கள் பல வரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: துணைத் தலைவர் அவர்களே, குண்டர்கள் சட்டம் என்ற பெயராலே நாட்டிலே தெரியப்படக் கூடிய இந்தச் சட்டம் இப்போது கள்ளச் சாராயக்காரர்களைப் பிடிப்பதிலும் மற்ற முறையிலே உள்ள குண்டர்களைப் பிடிப்பதிலும் இருந்து வன இலாகாவிலே ஏற்படக்கூடிய குற்றங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்த அளவிலே, அதன் காரணமாக சில பாதிப்புகள் மக்களுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி அதிலிருந்து பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சில கருத்துக்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஒரு பயங்கரமான காட்டு தர்பார் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். குறிப்பாக, இன்றைக்கு வனங்களில் வன ராஜாக்கள் என்று சொல்லப்படக்கூடியவர்கள் மரங்களைப் பல இடங்களில் வெட்டிக்கொண்டு செல்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் மதுரை மாவட்டத்தில் வத்ராம்பேட் என்ற இடத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளறுக்குகாலி என்ற இடத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நடக்கின்றன. சென்ற ஆண்டு வன இலாக்கா மானியத்தில் பேசுகிறபோது வெள்ளறுக்குகாணியில் எப்படி ஒரு சிலர் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள காணி சமுதாயத்தைச் சார்ந்தவர்களை அடித்து விரட்டி, வன இலாக்கா அதிகாரிகளின் உதவியோடு கள்ளச் சாராயம் காய்ச்சுவது உள்பட பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 18

படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறேன். இன்றைக்கு இப்படிப்பட்டவர்களைப் பாதுகாத்து, வன இலாக்கா அதிகாரிகள் அப்பாவி மக்கள் மேல் புகார்களைக் கொடுத்து, அவர்களைப் போலீஸ் வைத்து சித்ரவதை செய்கிற நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்றன. நான்கூட பத்மநாபபுரம் அசிஸ்டெண்ட் கலெக்டர் அவர்களை நேரில் சந்தித்து இப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் சொல்லி புகார் கொடுத்து இருக்கிறேன். நான் எதற்கு இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் இன்றைக்கு வனத்தில் நடைபெறுகிற கொள்ளையைத் தடுப்பதைப் பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. அங்கே நடக்கக்கூடிய அக்கிரமங்களைத் தடுப்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணைகள் கிடையாது. அதற்குக் கடுமையான சட்டத்தைப் போடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகள் கையில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அல்லது அதிகாரத்தைக் கொடுப்பது என்பது கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஏழை மக்கள் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்காக வனங்களுக்குள்ளே போய், சில மரங்களின் கீழே விழுந்து கிடக்கிற விறகுகளைக் சேகரித்துக் கொண்டு செல்கிறார்கள். அதை இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகள் தடுக்கிறார்கள். அவர்களைப் பிடித்து உதைக்கிறார்கள். அவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஒரு பக்கம் எடுத்துக்கொண்டு, சமூக விரோதிகள் மரங்களை வெட்டுவதற்குக் கைகாட்டி விடுகிற நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

அதற்கு எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறைக்குப் பக்கத்தில் சேனங்கோடு என்ற இடத்தில் பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு ரோடு இருக்கிறது. அந்த ரோட்டிலே இன்றைக்கு வன இலாக்கா அதிகாரிகளால் ஒரு செக் போஸ்ட் போடப்பட்டிருக்கிறது. இதுபற்றி வனத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே எழுதி அவரும் ஒரு பதிலை கொடுத்தார்கள். அங்கே செக் போஸ்ட் போட மாட்டார்கள்; அப்படி போட்டிருந்தால் அது அகற்றப்படுமென்று சொன்னார்கள். ஆனால் இன்றுவரையில் அந்த செக் போஸ்ட்டை



1987 நவம்பர் 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அகற்றுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அங்கே டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசரைப் பார்த்து பேசினால் அதை மாற்ற முடியாது என்றும் அங்கே செக் போஸ்ட் இருந்தால்தான் வனத்திலிருந்து வருகிற மரங்களைத் தடுக்க முடியுமென்றும் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறதென்றால் செக்போஸ்ட்டை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பக்கத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்கு வேண்டிய உரம் மற்றவைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்காமல் இந்த வன இலாக்கா அதிகாரிகள் தகராறு பண்ணுகிறார்கள். கேட்டால் நாங்கள் கேட் போட்டிருக்கிறோம், வாட்ச்மேன் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த வாட்ச்மேனுக்கு 25 ரூபாய், 50 ரூபாய் தினம் கொடுத்தால்தான் கேட் திறந்து விடப்படுகிறது. இதன்காரணமாக விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இந்தப் பிரச்னையை எழுப்பி, தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டோம். டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசர் அவர்கள் தகுந்த நடவடிக்கையெடுத்து விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாத முறையில் இதை அமைத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும் நடைமுறையில் உரம் கொண்டு போக வேண்டுமென்றால், கூலி ஆட்களை அழைத்துப் போக வேண்டுமென்றால் அந்த செக் போஸ்ட்டைத் திறந்து விடுவதற்கு அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இன்றைக்கு வனத்திலே உள்ள பொருட்களை அல்லது வனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், ஏழை மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் இந்த விஷயம் அமையக் கூடாது. இன்றைக்கு காவல்துறையிலே உள்ளவர்கள், குண்டர்கள் சட்டத்தை எப்படித் தவறாகப் பயன்படுத்தி, தங்களுக்கு வேண்டாதவர்கள் மீதெல்லாம் வழக்குகளைப் போடுகிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இது சம்பந்தமாக நான் போன தடவை பேசுகிறபோது, ஒருசில எடுத்துக்காட்டுக்களைக்கூடக் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்தச் சட்டத்தினுடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்றவேண்டுமானால், மரத்தை தனியாக வெட்டிக்கொண்டு செல்கிற நேரத்தில், தகவல் கொடுத்தாலும்கூட

வன இலாக்கா அதிகாரிகளைப் பொறுத்தவரையில் உடனடியாகப் போய் அந்தத் திருட்டைத் தடுப்பதற்கு அவர்களால் முடியவில்லை. இதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள குலசேகரம் என்ற இடத்திலே ஒரு ரேஞ்ச் ஆபிசர் இருக்கிறார். அந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள காடுகளில் இருந்து மரங்களை வெட்டி எடுத்துச் செல்கிற நேரத்தில், அந்த ரேஞ்சருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர் ஒரு டாக்சியைத் தேடி, அதைப் பிடித்துக்கொண்டு போவதற்கு முன்னால், திருடியவர்கள் கேரள மாநிலத்திற்குச் சென்றுவிட்டார்கள். கேரள மாநிலத்தையொட்டியுள்ள தமிழக எல்லையோரக் காடுகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகவே இதைத் தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில், வன இலாக்காவினுடைய மேல் அதிகாரிகளைச் சந்தித்து பேசியபோது, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பாரஸ்ட் ஸ்குவார்டு என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது, அவர்களுக்குத் தகவல் கொடுத்தால், அவர்களுடைய வாகனத்தைப் பயன்படுத்தி, இப்படிப்பட்ட திருட்டைத் தடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள், தடிக்காரன்கோணத்திலோ அல்லது அதற்குப் பக்கத்திலே உள்ள வீரப்புலியிலோதான் இருக்கிறார்கள். அங்கே சென்று தகவல்களைச் சொல்ல முடியவில்லை. ஆகவே தமிழக எல்லையோரப் பகுதியில் உள்ள வனங்களுடைய திருட்டைத் தடுப்பதற்கு, அந்தப் பகுதியில் உள்ள வன இலாக்கா அதிகாரிகளுக்கு வேகமாகச் செல்லக்கூடிய வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கான வாகன வசதிகளை, அதற்கான கம்யூனிகேஷன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது இன்றியமையாத தேவையாக இருக்கிறது. எனவே அந்த முறையில் உள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதேபோல்,—இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில்,—வன இலாக்கா அதிகாரிகள், மலைவாழ் மக்களைக் கஷ்டப்படுத்தக் கூடிய முறையில், அவர்களைத் துன்புறுத்தக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று மலைவாழ் மக்களுடைய இடங்களை





எல்லாம் பாரஸ்ட் இலாக்காவினுடைய அதிகாரிகள் பிடுங்கி ஊரிலே உள்ளவர்களுக்கு விவசாயம் பண்ணுவதற்குக் கொடுத்து, இன்றைக்கு அதிலேயிருந்து அவர்கள் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு கடுமையான சட்டத்தை நாம் ஏற்படுத்தக் கூடிய நேரத்தில், இதனால் மலைவாழ் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்ற முறையில் உள்ள நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற 1888 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவின் மீது ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இங்கே நோக்க-காரண விளக்கவுரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்குகளை, அதிலும் குறிப்பாக யானைகளைச் சாகடிப்பதும், இந்த மாநிலத்தில் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதும், வகைதொகையின்றி வன விலங்குகளைச் சாகடிப்பதும், நபர்களுக்கும், சொத்துக்கும் மற்றும் அப் பகுதியில் உயிரின வாழ்க்கைச் சூழல் முறைக்கும் ஆபத்தை விளைவிப்பதோடு, பொது அமைதியையும் குலைக்கின்றன. எனவே அவர்களைத் தடுப்புக் காவல் சட்டத்திலே பிடிப்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த வனங்களில் உள்ள மரங்களை எல்லாம் வெட்டுவது யார்? அப்படி வெட்டுகின்றவர்களைப்பற்றி அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற வன இலாக்கா அதிகாரிகளுக்குத் தெரியாதா? அங்கே உள்ள ரேஞ்சர்களுக்குத் தெரியாதா? அது எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் கூட அவர்களை எல்லாம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று

[திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 நவம்பர் 18

சொன்னால் என்ன காரணம்? அவர்களுக்குள்ளே ஒரு உடன்பாடு இருக்கிறதோ என்றுகூட எங்களுக்கு ஐயப்பாடு தோன்றுகிறது. இதை நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசியதைப்போல * * இப்படித்தான் இந்த வன இலாகாவினுடைய செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல் வன விலங்கைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் கள்ளச் சாராயத்தைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள்.

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போது சொன்னாலும் பொத்தாம் பொதுவிலேதான் சொல்லி குற்றம் சாட்டுகிறாரே தவிர * * *அதைப்பற்றி நீங்கள் வன இலாக்கா தலைமை அதிகாரிக்குத் தெரிவித்து இருக்கிறீர்களா? எனக்குத் தெரிவித்து இருக்கிறீர்களா? * * என்று சொல்லுவதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் நிறைய முறை சொல்லியிருக்கிறேன். ஸ்பெசிபிக்காகச் சொன்னால் பிரயோசனமாக இருக்கும். ஆகவே அதை நீக்க வேண்டும் என்று ஆணையிடுகிறேன். குறிப்பிட்டுச் சொல்லுங்கள். எல்லா வன இலாக்கா அதிகாரிகளையும் சொல்லுகிறீர்கள். அதை எடுத்து விடலாம். சரியாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. ஆ. நடராசன்:** ஸ்பெசிபிக்காகச் சொன்னால் ஆதாரம் வேண்டும் என்று சொல்லுவீர்களே.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** நான் முழுமையாகச் சொன்ன பிறகு அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதைப்பற்றிச் சொல்லுங்கள். இதே வார்த்தையை இதே சட்டமன்றத்திலேயே சென்ற கூட்டத் தொடரில் பேசி அது அவைக் குறிப்பில் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 நவம்பர் 18] [திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அப்படியானால் நீங்கள் சொல்லுவதிலே என்ன அர்த்தம்? இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. சென்ற சட்டமன்றக் கூட்ட அவைக் குறிப்பிலே இருக்கிற ஒரு செய்தியை இந்தக் கூட்டத்தொடர் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் என்ன முறை இது? அப்போது இந்த விளக்கத்தை ஏன் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்ட ஒரு அதிகாரி என்று சொன்னால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** முன்பு சொன்னீர்கள், பால் வளத்தில் பெருந்தலைவர் போடுவதாக சொன்னீர்கள். ரெக்கார்டை எடுத்துக் கொண்டு வந்து வைத்து இருக்கிறேன். பெருந்தலைவர் போடுவது பற்றிச் சொல்லும்போது, இல்லை என்று சாதித்தீர்கள். இப்போது கொண்டு வந்து வைத்து இருக்கிறேன். அதைக் கொடுக்கிறேன். அதேபோல் நடக்கிறதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம். அதிகமாக எங்களைப் பேச விடுவது இல்லை. ஏன் என்றால் குறையைத்தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. வேறு வழி இல்லை. ஆனால் பேச விடமாட்டீர்கள் போல் தெரிகிறது எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொரு பில்லிலும் நீங்கள் பேசுகிறீர்கள். மற்றவர்கள் சொன்னால்கூட கொஞ்சம் நியாயம் இருக்கிறது. பேசும்போது, பேச்சோடு சேர்த்து நாங்கள் பேசவிடவில்லை என்ற குற்றச்சாட்டை எங்கள் மீது சொல்லக்கூடாது. நிறையப் பேசுகிறீர்கள். பேசும்போது விவரமாகக் குறிப்பிட்டு எந்த அதிகாரி என்று சொன்னால் உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. ஒட்டு மொத்தமாகச் சொன்னால் நல்ல அதிகாரிகளும் கெட்டுவிடுவார்கள். நீங்கள் நல்ல அதிகாரிகளைப் பாராட்ட வேண்டும் இல்லையா? இன்னார் செய்தார்கள் என்று சொல்லுங்கள், அப்போது நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்கள் வீட்டு வரி பற்றி அறிவிக்கும்போது நாங்கள் பாராட்டினோம். எதையெல்லாம் பாராட்ட வேண்டுமோ அதை நாங்கள் பாராட்டத்தான் செய்கிறோம்.

அதேபோல் குண்டர் ஆக்டில் போடுவதுபற்றிச் சொல்லுகிறீர்கள். என்ன செய்கிறீர்கள் நீங்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு எஸ். பி. சிபாரிசு செய்ய வேண்டும். அதன் பிறகு கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை எல்லாம் எடுக்கவிடுகிறீர்களா? அதிகாரம் படைத்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். முதலில் இங்கே எஸ்.பி.-யை மிரட்டுகிறார்கள். அதன் பிறகு கலெக்டரிடம் போய் ரெப்பரசென்ட் செய்கிறார்கள். என்ன செய்கிறீர்கள்? குண்டர் ஆக்ட்டில் போடுவதற்கு யாரை யார் விடுகிறார்கள்? வாஸ்தவத்திலே குண்டர் ஆக்ட்டில் போடுகிறவர்களை போட விடுவது இல்லை. யாராவது அப்பாவிகளைப் பிடித்துப் போடுவதுபோல் எங்களுக்கு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எஸ்.பி. அங்கே பயமுறுத்தப்படுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லப்படுகிறது. இதை எல்லாம் பார்க்கும்போது இது சட்டமாகத்தான் இருக்குமே தவிர நடைமுறையில் இது சரியாக நடக்காது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * பொறுப்பேற்காத முறையிலே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரியவர் இப்படி பேசுவது உகந்தது அல்ல. எந்த மாவட்ட ஆட்சித் தலைவர், எந்த எஸ்.பி. யாரை தடுப்புக் காவல் சட்டத்தில் போட வற்புறுத்தப் பட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும். நான் *பொறுப்பேற்காதவர் என்று சொன்னதற்காக வருத்தப்படக்கூடாது. ஆனால் முக்கியமாக இதுபோன்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரைக்கும், அரசைப் பொறுத்த வரைக்கும் எந்த ஒரு பிரச்சினையிலும் அரசாங்கம் தலையிடுவது கிடையாது. தடுப்புக் காவல் சட்டத்திலே கைது செய்யப்பட்டு இருக்கிறவர்கள் கிட்டத்தட்ட 60-க்கும் மேற் பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்வது சரிதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அதற்கு அவர் வருத்தப்படுகிறேன் என்று சொல்லிவிட்டாரே, அதோடு முடிந்தது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்பேற்காமல் என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப் பேற்காத என்று அமைச்சரவர்களே திருத்திவிட்டார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில் குண்டர் ஆக்டில் போடச் சொல்லி, பல பேருக்கு எஸ்.பி. பரிந்துரை செய்திருக்கிறார்கள். உங்கள் ரிக்கார்டுகளை எடுத்துப் பாருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதைத்தான் பொறுப் பேற்காத என்று வகையில் சொன்னேன். அரசைப் பொறுத்த வரைக்கும் தடுப்புக் காவல் சட்டத்தில் யாரையும், இவர்களைக் கைது செய்யுங்கள் அல்லது வேண்டாம் என்று சொல்லாமல் இதுகாறும் பாரபட்சமற்ற முறையில் செயல்பட்டு வருகிறது.

1982-லே 144 பேர், 1983-லே 249 பேர், 1984-லே 550 பேர், 1985-ல் 476 பேர், 1986-ல் 458 பேர். தற்போது 1987-லே 421 பேர். இந்த 421 பேரிலே கிட்டத்தட்ட 60 பேர்கள் அண்ணா தி.மு.க. வைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது பொறுப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர் அரசினுடைய அணுகுமுறையை மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அரசின் மீது மட்டும் குறை சொல்லவில்லை. அதிகாரம் படைத்தவர்களை சொல்கிறேன். நான் சொல்ல விரும்புவது, அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 28

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006). மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ 4—8—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2006 ஆகஸ்ட் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு 3

பிரிவு 3, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, in clause 3, in sub-clause (2) (a), *for* the words "sand-offenders" *substitute* the words "sand-offenders, slum grabbers""

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 4 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2006) திருத்தப்பெற்றவாறு நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றவாறு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–8–2006) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

27. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

28. 2004–2005 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

29. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்

55/13A



பிற்பகல் 10-50

### (ஈ.) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (உ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2008 மே 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒஒ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2008*), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2008) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**பிரிவு – 2**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

---

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2008 மே 14

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"Proposed amendments shall be omitted"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-20*

நீங்கள் கொடுத்தத் தீர்மானத்தில் பேசிவிட்டீர்கள். விடுங்கள்.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்னவென்று சொல்லச் சொல்லுங்களேன் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தான் முன்மொழிந்தீர்கள். உங்களுக்குப் பின்னால் இருப்பவர்தான் வழிமொழிந்தார். இன்னும் என்ன இருக்கிறது? உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்தும சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது

[திரு. ஞா. செந்தமிழன்] [2014 ஆகஸ்ட் 11

வாழ்வளிக்கும் வரலாறாக வாழும் (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளும் நல்லவர்; நாடு நலம்பெற நாளும் உழைப்பவர்; வாக்குறுதிகளுக்கெல்லாம் வளம் சேர்ப்பவர்; வையகம் முழுவதும் புகழ்பெற்றவர்; ஜகத்தின் மகத்தான முதல்வர்; அன்னையாய், ஆசானாய், தெய்வமாய் காத்துவரும் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2013–2014* ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதின்மூன்றாவது (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*முற்பகல் 11–45*

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2014 ஆகஸ்ட் 11][திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

73/146





***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2014* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2014* ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-30

## (ஊ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2014), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-40

## (எ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்,

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2014), மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

---

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.